www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

JUDE

பக்கம் 20

ரூபா 12/00

දිනමුරසු වාරමලර් டிச.27,1998–ஜன.02,1999

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 289

## யுத்தத்தில் சந்திரிக்கா

## சோனியா



## களத்தில் பிரபாகரன்



## அயலக மாற்றம் இங்கும் எதிரொலிக்குமா

## வீரப்பன் கொடுத்த தண்டனை

## சரத்குமார் சீற்றம்!

www.padippakam.com

# முரசம்

## ஐந்து மாத தண்டனை

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

வன்னிக்கான
நிவாரண வெட்டு
தற்போது தளர்த்தப்பட்டுள்ளது!
கடந்த ஐந்து மாதங்களாக
நிவாரண வெட்டை
சிறிது தளர்த்தவும்
அரசு மறுத்துவந்தது!
கொடுக்கப்படும்
நிவாரணம் போதுமானது
என்றே ஜனாதிபதியும்
தமிழ்க் கட்சிகளிடம்
கூறியிருந்தார்.
தற்போது அரசு
இறங்கி வந்திருப்பதற்கு
காரணம் இல்லாமலில்லை!
வன்னி நிவாரணவெட்டும்
மக்களின் பட்டினியும்
சர்வதேச அரங்கிற்கு
எடுத்துச் செல்லப்பட்டது!
இலண்டனில்
13 வாரங்களாக
உண்ணாவிரதப் போராட்டம்
நடந்து வந்தது!
வன்னியில்
எலும்புக் கூடுகளாக
பரிதவிக்கும் சிறார்களின்
புகைப்படங்கள்
வெளியுலக பத்திரிகைகளில்
இடம்பெறத் தொடங்கின.
இன்னொரு சோமாலியா
என்று இலங்கையும்
அழைக்கப்படும் நாள்
வெகுதூரத்தில் இல்லை
என்று கருதப்படுமளவுக்கு
பட்டினி அவலங்கள்
அம்பலமாகியிருந்தன!
சமீபத்தில்
இங்கு வந்திருந்த
தென்னாபிரிக்க தூதுக்குழு
வன்னி சென்றுவர
அனுமதி கோரியிருந்தது!
பட்டினி அவலங்களை
நேரில் கண்டுவிடுவரே
என்று கருதி
பாதுகாப்பு என்ற
போர்வையில்
அனுமதி மறுக்கப்பட்டது!
வெளியுலக செல்வாக்கை
தக்கவைப்பதில்
தனிக் கவனம் செலுத்தும்
அரசுக்கு
இவையெல்லாம் அதிர்ச்சிகள்!
இது போதாது என்று
நிவாரண வெட்டின்
பாதிப்பால் வெறுப்புற்ற
இளம் தலைமுறை
புலிகளின் பக்கம்
சென்று கொண்டிருக்கிறது!
நிவாரணத்தை நிறுத்தினால்
புலிகளின் பலம் சரியும்,
மக்கள் புலிகளை வெறுப்பர்
என்ற கணக்குகள்
தப்புக் கணக்குகளாகின!
நிவாரண வெட்டால்
புலிகளின் பலம்
மேலும் கூடியதே
கண்ட பலன்
என்பது உறுதியானது!
எனவேதான்
இறுதியில் அரசு
இறங்கிவந்தாக வேண்டிய
நிர்ப்பந்தம் ஏற்பட்டது!
தற்போது
நிவாரண வெட்டை
தளர்த்தியிருப்பது மூலம்
கடந்த ஐந்து மாதமாக
அநீதி இழைக்கப்பட்டதை
அரசே ஏற்றுக்கொண்டுள்ளது
என்பதுதானே அர்த்தம்!
ஐந்து மாதமாக
கொடுத்தது போதுமானது
என்று அரசு கூறுமானால்
இப்போது கொடுப்பது
புலிகளுக்கோ?
என்ற கேள்வி எழும்!
வன்னி சென்று வந்த
அத்தியாவசிய சேவைகள்
ஆணையாளரும்
தன் கண்களால் கண்ட
அவலங்களை கூறியுள்ளார்.
நிவாரணவெட்டு
நீதியற்றது என்பது
அவருக்கே புரிந்திருக்கிறது!
எனவே, கடந்த
ஐந்து மாத காலமாக
வன்னித் தமிழ் மக்களுக்கு
பட்டினித் தண்டனை
வழங்கப்பட்டதற்கு
யார் பொறுப்பு?
பட்டினியால்
தற்கொலை செய்தோரை
மறுபடி உயிரோடு
கொண்டுவர இயலுமா?
விரும்பினால் நிறுத்துவோம்
விரும்பினால் வழங்குவோம்
என்று தம்மிஷ்டப்படி
மக்களின் வயிற்றோடு
விளையாடுவது முறையா?
நிவாரணம் போதியளவு
வன்னிப் பகுதிக்கு
செல்கிறது என்று
முன்னர் அரசு சார்பாக
விடுக்கப்பட்ட அறிக்கைகளின்
அர்த்தம் என்ன?
நிவாரண வெட்டில்
தற்போதைய தளர்வு.
ஐந்துமாத தண்டனையால்
வன்னி மக்கள் பட்ட
அவலங்களுக்கு பரிகாரமாகாது!
இன்னொரு கேள்வியும்
எழாமல் இல்லை.
அரசு எடுத்த முடிவுப்படி
வன்னிக்கு நிவாரண விநியோகம்
சீராக நடப்பதற்கு
சீருடைத்தரப்பு
எந்தளவுக்கு ஒத்துழைக்கும்?
கடவுள் வரம்
கொடுத்தாலும்
பூசாரிகள் அனுமதிப்பார்களா?
பொறுத்திருந்து பார்ப்போம்!

*மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை*
*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்*

# ஆன்மீகம்

## மணிவாசகரின் பெருமை

திருவும் உருவும் பக்தியும் சக்தியும் மிக்க தமிழகத்தில் சைவசமய வரலாறு பொன்னைபோல் போற்றத்தக்கதாகும். அதிலும் நால்வர் பெருமக்களின் நயமிக்க திருத்தொண்டுகள் நம்மை வழிநடத்தும் இலட்சிய நோக்குடையன வாகும்.

திருவாதவூரிலே பிறந்த மாணிக்கவாசகரின் அறிவையும், ஆற்றலையும், ஒழுக்கத்தையும் கேள்வியுற்ற அரிமர்த்தன பாண்டியன் அவரை அழைத்து மதுரையம்பதி அரசுக்கு அமைச்சராக்கினார். மாணிக்க வாசகர் முதல் அமைச்சராக பணியாற்றினாலும், அவரின் எண்ணமெல்லாம் இறை உணர்விலும், உயிருக்கு உறுதிதேடும் ஆழ்ந்த கருத்திலுமே இலயித்திருந்தது.

இந்த உடல் அழியக்கூடியது. இந்தப் பதவியும் நிலையானதல்ல. இந்த மண், பெண், பொன் யாவுமே அழியக்கூடியன. அழிவற்ற தன்மை கொண்டது ஆண்டவன் அருள் ஒன்றே. அழியக்கூடிய உடலை வைத்து, அழிவில்லா அருட் செல்வத்தை அடைய வேண்டும். ஆண்டவன் கருணை ஒன்றே உயிர்களைக் கடைத்தேற்றும்.

இவ்வாறு சிந்தை செய்த மாணிக்கவாசகர் அமைச்சர் பதவியில் ஒட்டியும் ஒட்டாமலும் இருந்தார். ஆனால் ஆண்டவன் சிந்தனையை ஒட்டியே வாழ்ந்தார். நாமும் அதைக் கடைப்பிடித்து வாழ்வோமாக!

தொகுப்பு: செல்வி: ஜெயந்தி சிதம்பரம்- புத்தளம்.



## அல்குர்ஆன் அருளப்பெற்ற ரமழான்

இன்று 'ஷஹ்ருள் முபாரக்' என்னும் பரக்கத்தாகிய ரமழான் நோன்பு மாதம் மீண்டும் எம்மை வந்தடைந்துள்ளது.

இம்மாதத்தின் மகத்துவம் பற்றி அல்லாஹ் தன் அருள் மறையாம் அல்குர்ஆனில் அழகுபட கூறுகின்றான்.

ரமழான் மாதம் எத்தகைய மகத்துவமிக்கது என்றால் அதில்தான் அல்குர்ஆன் என்னும் அழகிய வேதநூல் அருளப் பெற்றது.

அது மனிதர்களுக்கு நேர்வழியாகவும் நன்மை, தீமையைப் பிரித்தறிவதற்குத் தெளிவாகவும் உள்ளது.

உங்களில் எவர் அம்மாதத்தை அடைகின்றாரோ அவர் அதில் நோன்பு நோக்கவும். அம்மாதத்தில் உங்களில் யாராவது நோயாளியாகவோ யாத்திரையிலோ, இருந்தால் ரமழான் அல்லாத ஏனைய நாட்களில் விட்டுப்போன நாட்களின் நோன்பைக் கணக்கிட்டு அவற்றை நோற்று விடவும்.

நோய், யாத்திரை போன்ற சந்தர்ப்பங்களில் நோன்பு நோற்காதிருக்க உங்களுக்கு அனுமதி அளித்ததெல்லாம் நீங்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்காகவுமே.

அல்குர் ஆன் (2:185)

எம்.சி.கலீல், கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல.286

### பரிசுக்குரிய கவிதை



### அச்சம்!

வெஞ்சமர் நிலை கண்டு
அஞ்சிடும் பிஞ்சு முகம்
கஞ்சிக்கும் வழியில்லையென்று
மஞ்சத்தில் துயில்வோரை
கெஞ்சுதோ விழிகளாலே!

ம. திருவரசுராசா- வவுனியா.

### காலம்

துள்ளித்திரிந்ததொரு
காலம்!
பள்ளிச் சென்றதுவோர்
காலம்!
இப்போ
பதுங்கி இருக்கின்றோம்
என்னாளும்!

ரோஜா ஆனந்தராஜா- பதுளை.

### இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

### தார்மீக (பூர்வீ)கம்!

தார்மீகம் பேசும் நாட்டிலே- இவனொரு
பூர்வீகம் தெரியாத அகதி!

டி. ஜோர்ஜ்- லபுகலை

### ஓடவா? நிற்கவா...?

வீட்டிலே யாருமில்லை
வெளியிலே குண்டுவெடி
ஓடவா, நிற்கவா
ஒன்றுமே புரியவில்லை!

பி. பரஞ்சோதி-
உருத்திரா மாவத்தை, கொழும்பு-06.

### 'விந்தை மனிதர்'

பட்டினியில் வாடும் இந்த
பாலகனைப் பார்த்த பின்பும்
திட்டமிட்ட செயல்களுக்கு
தெரிந்து துணை போவதுவும்.
தட்டிக் கேட்கும் தகுதி பல தமக்கிருந்தும்
விட்டெறியும் எலும்புக்கு
விலைபோகும் விந்தையென்ன?

சி.மு. சுந்தரேசன்- அரசினர் வைத்தியசாலை.
மஸ்கெலியா.

### விடிவைத் தேடி...!

பாதை மாறும் பயணமென
பாவையவள் நினைத்தாளோ?
பாலகனின் விழியுமிங்கு
பகலிரவாய் தேடிடுதே!
என்று வரும் என் சொந்தமென
ஏங்கிடும் இளம் நெஞ்சம்...
என்றறியும் தாயின் முடிவு?

கே. றஞ்ஜனா- கொழும்பு-15.

### பாவமென்ன நான் செய்தேன்...?

"படிப்பறியேன் எழுத்தறியேன்
பாடசாலை நானறியேன்
பசியறிவேன் பிணியறிவேன்
பங்கரெல்லாம் நன்கறிவேன்
ஷெல் அறிவேன் குண்டறிவேன்
ஆட்டிலெறி தானறிவேன்
பிஞ்சிலே நான் பழுக்க
பாவமொன்றும் செய்தறியேன்!"

செல்வி மதுரா யோகேந்திரன்- திருக்கோவில்

### கலக்கமோ?

வழிமேல் விழிவைத்து வாடுகின்ற
மலர் விழியே...!
கண்மணிகள் மூடாமல்
கலங்குகின்ற
சிறு மலரே...!
செம்மணியில் அன்னை
சிதைந்தனளோ
படு குழியில்?

திருமதி பி. பத்மநாதன்-கொழும்பு-06.

### நிர்வாணம்!

உடல் பாதி நிர்வாணம்
குடலோ முழு நிர்வாணம்
நிவாரணத்தை வெட்டியதால்!

அ. சந்தியாகோ-
அசோகா வித்தியாலயம், கண்டி.

## கவிதைப் போட்டி இல.289



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 02.01.1999

முகவரி: கவிதைப் போட்டி இல.289
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### எத்தனை?

போட்டுவிட்ட குண்டில்
பொசுங்கிவிட்ட அம்மாவை
இந்நாளும் தேடும் இந்த
இளசுகள் தான் எத்தனை?

இ. புஜந்தரன்- களுதாவளை-1,
களுவாஞ்சிக்குடி.

### பசி முகத்துப் பாலகன்

குண்டு விமானத்தை
கண்டுவிட்ட பார்வை இது
பயந்து நோக்குகிறான்
பசிமுகத்துப் பாலனிவன்!

அம்பிளாந்துறையூர் அரியரன்.

### இப்படியுமா...?

தாயைத் தேடினேன்
தந்தையைத் தேடினேன்
ஊரைத் தேடினேன்
உறவைத் தேடினேன்
கிட்டவில்லை எதுவும்!

செல்வி சாந்தி சுப்ரமணியம்- பதுளை.

# வாசக(ர்)சாலை

### எப்படி அழைப்பது?

அன்பின் முரசே! மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்ற வெண்ணெய் திரண்டு வருகிறது. தாழியை உடைக்க கூட்டணியினர் மூலம் அரசும் திட்டம் போடுகிறது. இதில் தலைமை தாங்குபவர் இரா. சம்பந்தன். ஆயிரக் கணக்கானோரின் தியாகத்தால் கிடைக்கும் பலனை கெடுக்க நினைக்கும் கூட்டணியினை என்னவென்று அழைப்பது?

எம். கணேஸ்வரன்,
திருகோணமலை.

### ஓடுகிற நீரில்

ஓடுகிற நீரில் குதித்து அதன் போக்கிலேயே இழுத்துச் செல்லப்படுபவைதான் தமிழ்க் கட்சிகள். மூன்றாம் தரப்பு மத்தியஸ்தக் கோரிக்கையை பிரபாகரன்தான் முன்வைத்தார். அதன் பின்னர்தான் இக்கட்சிகள் தாமும் அதையிட்டு பேசின. கால நிலையை கணிப்பிட்டு இக் கட்சிகள் தாமாகவே அக்கோரிக்கையை முன்வைத்திருக்க வேண்டும். இக்கட்சிகள் நடக்க முடியாத கதைகள் பேசி, தமக்கு கிடைப்பதை பெற்று காலத்தைக் கழிக்கத்தான் இலாய்க்கு.

வி. யோகேந்திரன், மன்னார்.



### முட்டுக்கட்டை போடுகிறார்கள்

முரசே!

வெளிநாடுகள் பல மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பற்றி பேசும்போது கூட்டணியினர் மட்டும் மூன்றாம் தரப்பு அனுசரணை என்றும், பங்களிப்பு என்றும், மூன்றாம் நபர் ஏற்பாட்டாளர் என்றும் தலையைச் சுற்றி மூக்கை தொடுவானேன்? சில பத்திரிகையாளர்களையும் கைக்குள் வைத்துக்கொண்டு, தங்கள் முட்டுக் கட்டை கருத்தை பிரசாரம் செய்கின்றனரோ என்று சந்தேகம் வருகிறது. புலிகளுடன் பேசினால்தான் பிரச்சனை தீரும் என்று கூட்டணி கூறுவது உண்மையானால், புலிகள் கோரும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு எதிராக சகுனி வேலை பார்ப்பது ஏன்? இவர்களின் நாடகம் நாம் அறியாததல்ல.

எஸ். சுரேந்திரன், கொழும்பு-13.

முரசே!

இடம் பெயர்ந்து வாழும் எங்களுக்கு தித்திக்கும் செய்திகளைத் தந்து எமது சோகத்தை மறக்கச் செய்து விடுகின்றாய். 'இடி அமீன்' தொடரைப் பார்க்கும்போது எமது மக்களின் துயரம்தான் என் கண்ணில் தெரிகின்றது.

எஸ்.ஏ.ஜே. குமார்,
வன்னேரிக்குளம்.

### எந்த முகத்தோடு?

எம் இனிய முரசே!

அவசரகால சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம் போன்றவற்றை தமிழ்க் கட்சிகள் எதிர்த்து நிற்க வேண்டும். கூழுக்கும், மீசைக்கும் ஒரே நேரத்தில் ஆசைப்படக்கூடாது. தமிழ் மக்களின் வாக்குகளும் தேவை, தமிழ் மக்களை வதைக்கும் சட்டங்களும் தேவை என்று எண்ணுகிறார்கள் போலும். அடுத்த தேர்தலில் எந்த முகத்தோடு வரப்போகிறார்கள்?

பி. சந்திரசேகர், வவுனியா.

### அவர்களுக்கே புரிந்துவிட்டது இவர்களுக்கு?

வந்தேறு குடிகள் என்றாலும் வாய் திறக்காத முன்னாள் போராளிகளான இந்நாள் மித... மித... மிதமான... மிதவாதிகள் செம்மணி புதைகுழி விவகாரத்தை மூடி மறைக்க மறைமுகமாக ஒத்துழைத்து வருகின்றனர். தென்னாபிரிக்க பாராளுமன்ற தூதுக்குழுவுக்கு சில நாட்களிலேயே இந்த அரசின் போக்கு புரிந்துவிட்டது. செம்மணி மறைப்பும் விளங்கிவிட்டது. முன்னர் ஒரு காலத்தில் ஆயுதம் ஏந்தியதை கூறியே கட்சி நடத்தும் இந்நாள் மிதவாதிகளுக்கு ஏன் இவை தெரியவில்லை. இவை தூங்குவது போல் நடிப்பது உண்மைதானே.

சி. சற்குணநாதன், மட்டக்களப்பு.

### செல்லாத பொதி

முரசுக்கு;

சமாதான புறாவை பறக்கவிட்டு அதிபராக ஆட்சிக்கு வந்தார் சந்திரிக்கா அம்மையார். இன்று அவரே போருக்கும் அதிபதியாக மாறி நிற்கிறார். எனவே, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் இன்றி இனப்போருக்கு முடிவு கிடையவே கிடையாது. பொதியை நம்பி பயனில்லை. ஆளும் அமைச்சர் அஷ்ரப். அவரே கூறுகிறார், 'செல்லாப் பொதி' என்று. சம்பந்த தாசர் கூறுகிறார் 'முன்னேற்ற பொதி' என்று. சிரிப்பதா? அழுவதா?

கே. மோகன், மட்டக்களப்பு.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல்:- 074-513266


படிப்பகம்

www.padippakam.com

# மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு முட்டுக்கட்டை!

## இலங்கை அரசின் முயற்சிக்கு தமிழ்க் கட்சி உதவி?

(நமது அரசியல் நிருபர்)

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை என்று புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தெரிவித்ததை அடுத்து, அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

பிரிட்டன், ஃபிரான்ஸ் போன்ற நாடுகள் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தராக செயற்பட முன்வந்துள்ளன.

தென்னாபிரிக்கா மூன்றாம் தரப்பு ஏற்பாட்டாளராக செயற்பட தயாராக உள்ளதாக கூறியுள்ளது. மேலும் வற்புறுத்தினால் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தராகச் செயற்பட தென்னாபிரிக்கா முன்வரும் என்று தெரிகிறது.

விடுதலைப் புலிகள் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கோரிவிட்டதால், இப்போது பந்து அரசின் பக்கமே இருக்கிறது என்று அரசியல் அவதானிகள் கூறியுள்ளனர்.

ஈ.பி.டி.பி., புளொட், ரெலோ ஆகிய கட்சிகள் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை வரவேற்றுள்ளன.

இதேவேளை மூன்றாம் தரப்பு மத்தியஸ்த கோரிக்கைக்கு எதிரான பிரசாரம் ஒன்றை தமிழ்க்கட்சி ஒன்றின் உதவியுடன் ஆளும் தரப்பு முன்னெடுத்து வருகிறது என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் அறியப்படுகிறது.

### மேலிடம் தெரிவிப்பு

இது பற்றி மேலும் கிடைத்துள்ள தகவல்கள் பின்வருமாறு:

சில மாதங்களுக்கு முன்பே அந்த தமிழ்க் கட்சியின் முக்கிய பிரமுகர்கள் இருவருக்கு தமது எண்ணத்தை அரச மேலிடம் தெரிவித்துவிட்டதாம்.

"மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் அவசியமில்லை. மூன்றாம் தரப்பு அனுசரணை என்றால் பரிசீலிக்கலாம். அதனால் மூன்றாம் தரப்பு அனுசரணையாளர் பற்றி வேண்டுமானால் பேசுங்கள்!" என்று கூறப்பட்டுவிட்டதாம்.

அதன் பின்னரே அக்கட்சியின் குறிப்பிட்ட பிரமுகர் ஒருவர் தனக்கு நெருக்கமான பத்திரிகையாளர்கள் சிலரை அழைத்து மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் இங்கு சரியாக இருக்காது. மூன்றாம் தரப்பு அனுசரணையாளரே தேவை! என்று விளக்கமளித்ததோடு, அக் கருத்தை முதன்மைப்படுத்துமாறும் கூறினாராம்.

வெளிநாட்டு தூதுக்குழுக்களுடன் நடந்த சந்திப்பிலும் மூன்றாம் தரப்பு அனுசரணையாளர் போதும் என்றே குறிப்பிட்ட பிரமுகர் வலியுறுத்தியதாக, அவருடன் சென்றவர்கள் தெரிவித்துள்ளனர்.

புலிகளின் தலைவர் பிரபாகரன் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பற்றி பேசியதால், தற்போது அதற்கு எதிராக பகிரங்கமாகப் பேசுவதை, குறிப்பிட்ட கட்சி தவிர்த்து வருகிறது.

### அதே நிலைப்பாடு

இதற்கிடையே சமீபத்தில் இந்திய பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டி ஒன்றில் "மூன்றாம் தரப்பு அனுசரணையாளர் பற்றி பரிசீலிக்கலாம்" என்று ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

குறிப்பிட்ட தமிழ்க் கட்சியும் அதன் பிரமுகர்களும் இதுவரை கூறிய நிலைப்பாடு ஜனாதிபதியின் நிலைப்பாடே என்ற உண்மை இதன் மூலம் அம்பலமாகியுள்ளது.

குறிப்பிட்ட கட்சியினர் அரசின் விருப்பம் அறிந்தே மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கோராமல், அனுசரணை கேட்டு வருகின்றனர் என்று முரசு ஏற்கனவே தெரிவித்து வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

### சந்தேகம் வேண்டாம்

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் இங்கு சாத்தியமாக முடியுமா? என்று வெளிநாட்டு தூதகரங்களை சேர்ந்த அதிகாரிகள் சிலருடன் 'முரசு' தொடர்பு கொண்டு கருத்தறிந்தது.

'மத்தியஸ்தம் இங்கு சாத்தியமா?' என்ற கேள்விக்கோ, சந்தேகத்திற்கோ இடமேயில்லை; எப்போது பிரிட்டன் போன்ற நாடுகள் மூனறாம் தரப்பு மத்தியஸ்தம் வகிக்கத் தயார் என்று கூறினவோ, அப்போதே அதற்கான சாத்தியம் உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது," என்று தனது பெயரைக் குறிப்பிட விரும்பாத மேற்குநாட்டு தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

"உங்கள் அரசு மட்டும் மனம் வைத்தால் போதும். எந்த சிக்கலும் இல்லாமல் மூன்றாம் தரப்பு மத்தியஸதத்தை அழைக்கலாம்." என்றும் இன்னொரு அதிகாரி தெரிவிததார்.

# புனர்வாழ்வு கண்துடைப்பு

## யாழ் குடாநாட்டில் தெரிவிப்பு!

குடாநாடு திரும்பிய மக்களுக்கு மீளக் குடியமர்வு- புனர்வாழ்வு பற்றி 1996 மே மாதம் அரசு திட்டம் ஒன்றை அறிவித்தது.

ஆனால் இன்றுவரை அத்திட்டமோ, அத்திட்டம் தொடர்பான வாக்குறுதிகளோ நிறைவேற்றப்படவில்லை. இவ்வாறு யாழ் குடாநாட்டில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக புனர்வாழ்வு, புனரமைப்பு பற்றி கூறப்பட்டவை தொடர்பான ஆய்வு ஒன்றை அந்த இணையம் மேற்கொண்டது. அதன் பின்னரே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

யாழ் குடாநாட்டு அபிவிருத்திக்கு பெருமளவு நிதிகள் ஒதுக்கப்படுவதாக கடந்த இரண்டாண்டுகளில் பல்வேறு செய்திகள் வெளியாகின. தமிழ்க் கட்சிகள் கோரிக்கை விடுத்ததும் நிதி கூடுதலாக ஒதுக்கப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகின.

'அத்தனையும் அறிவிப்போடுசரி' என்று கூறுகிறது இந்த இணையத்தின் ஆய்வறிக்கை.

# பார்வையிட மறுப்பு!

## வன்னியிலிருந்து மகஜர்!

தென்னாபிரிக்க பாராளுமன்ற தூதுக் குழுவினர் வன்னி செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டமை தெரிந்ததே.

வன்னியிலுள்ள வெகுஜன அமைப்புக்களது ஒன்றியம் சார்பாக தென்னாபிரிக்க அரசுக்கு நீண்ட மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தமது அவலங்கள் குறித்தும், தென்னாபிரிக்க பாராளுமன்றக் குழுவால் தமது நிலையை நேரில் கண்டறிய முடியாமல் போனது தொடர்பாகவும் அந்த மகஜரில் விளக்கப்பட்டுள்ளது.

# வர்த்தக விழாவில் கிளுகிளுப்பு

## அழகிகள் காபரே நடனம்

சொலெக்ஸ் (SOLEX) எனப்படும் நிறுவனம் அதன் 20 ஆவது வருட நிறைவு விழாவைக் கொண்டாடும் முகமாக ட்ரான்ஸ் ஏசியா ஹொட்டேலில் (TRANS ASIA HOTEL) 05.12.98 அன்று வைபவம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.

இவ்வைபவத்தில் வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் சகல பாகங்களிலும் இருந்து சிங்கள-தமிழ்-முஸ்லிம் வர்த்தகர்கள் சுமார் 1000 பேர் பங்குபற்றினர். இதில் சுமார் 400 பேர் தமிழ் பேசுவோராகும். இருந்தபோதிலும் அங்கு நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள் அனைத்தும் தனிச் சிங்களத்தில், சிங்கள கலாசார நிகழ்வுகளாக மட்டுமே இருந்தன.

'வெள்ளைச் சிறகடிக்கும் வெண் புறாவே' என்ற பாடலை நிரோஷா பாடினார். அதுவும் சிங்களத்தில்தான் பாடப்பட்டது.

நிகழ்ச்சியின் இறுதியில் கொலம்பியா நடனம் (COLUMBIA DANCE) என்ற ஒரு நடன நிகழ்ச்சிக்கு இள நங்கைகள் மேடையில் தோன்றினார்கள்.

நடனம் ஆடிக்கொண்டிருந்த அவர்கள் இடைநடுவில் தமது மேலாடையைக் கழற்றி வீசிவிட்டு முற்று முழுதாக அரை நிர்வாணமாகினர்.

நிகழ்ச்சிக்கு இசை வழங்கிக் கொண்டிருந்தோர், நிலைமை மோசமாவதைக் கண்டு உடனடியாக இசை நிறுத்தப்படவே நிகழ்ச்சிகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன.

# சர்வதேச பயங்கரவாதி



ஈராக் மீது அமெரிக்காவும், பிரிட்டனும் மேற்கொண்ட மேலாதிக்கத் தாக்குதலை 'முரசு' தனது வாசகர்கள் சார்பாகக் கண்டனம் செய்கிறது. அக் கண்டனத்தை பதிவு செய்யும் விதமாக, இக்கொடிய தாக்குதலின் சூத்திரதாரியான பில் கிளின்ரனை தலை கீழாகப் போட்டிருக்கிறோம். பல நூற்றுக் கணக்கான குழந்தைகள், பெண்கள் உட்பட மனித உயிர்களைப் பலி கொண்ட விமானத் தாக்குதலை நடத்தத் திட்டமிட்டதன் மூலம் பில்கிளின்ரன் சர்வதேசப் பயங்கரவாதியாக அம்பலமாகியுள்ளார்.

# விலங்குடன் மாணவன்

'ரிவிபல' இராணுவ நடவடிக்கையின்போது படையினரின் கட்டுப்பாட்டில் வந்த பகுதியில் இருந்த பொதுமக்கள் துருவித்துருவி விசாரிக்கப்பட்டனர். அதில் 47 பேர் புலிகள் என்ற சந்தேகத்தில் கைதாகி விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

அவ்வாறு கைதானவரில் ஒருவர் க.பொ.த. (சா.த) பரீட்சைக்கு தோற்றவிருந்த மாணவர். அந்த மாணவனை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் பரீட்சையில் தோற்ற படையினர் அனுமதித்துள்ளனர்.

காலில் விலங்குபோடப்பட்ட நிலையிலேயே பரீட்சை மண்டபத்துக்கு மாணவரை அழைத்து வருகின்றனர். அவர் அமரும் நாற்காலியோடு சேர்த்து விலங்கு மாட்டப்பட்ட நிலையிலேயே தனித்திருந்து பரீட்சை எழுத அனுமதிக்கப்பட்டார்.

இதேவேளை படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவு நெடுங்கேணி வீதியில் ஐந்து பொதுமக்கள் கிளைமோர் தாக்குதலில் பலியாகினர். தமது வீடுகளை பார்வையிடச் சென்றோரே பலியானதாக கூறப்படுகிறது. 21.12.98 அன்று இச்சம்பவம் இடம்பெற்றது.

புலிகள் மட்டுமன்றி, புலிகளை எதிர்பார்த்து படையினரும் கிளைமோர் தாக்குதல்களை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

கடந்த 80 நாட்களுக்குள் வன்னியில் 28 பொதுமக்கள் பல்வேறு தாக்குதல் சம்பவங்களில் பலியானதாக கூறப்படுகிறது.

# ஒரே இரவில் 7 மின்மாற்றிகள் தகர்ப்பு!

## மீளமுடியாத நஷ்டம் மின்சார சபைக்கு!

மின்சாரக் கம்பங்கள், கோபுரங்கள், மின்மாற்றிகள் என்பனவற்றைத் தாக்கியழித்து மின்சார அலுவல்களை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்தம்பிக்கச் செய்துள்ள புலி இயக்கத்தினர். தற்சமயம் மின்விநியோகச் சொத்துக்களைத் தாக்கியழிக்கும் நடவடிக்கையைக் கிழக்கு மாகாணத்தில் பரவலாக்கியுள்ளனர்.

அம்பாறை-அக்கரைப்பற்றில் ஓர் இரவில் மாத்திரம் ஐந்து மின்மாற்றிகளும், பாண்டிருப்பு, மருதமுனை ஆகிய இடங்களில் மேலும் இரு மின்மாற்றிகளும் தகர்த்தெறியப்பட்டன. இதனால் அப்பகுதிகள் மின்சார வசதியின்றி முடங்கிப்போயுள்ளன. பல நூற்றுக்கணக்கானோர் தொழில் வாய்ப்புக்களை இழந்து பரிதவிக்கின்றனர். இச்சம்பவத்திற்கு சில தினங்கள் முன்னரே அக்கரைப்பற்றில் இரு மின் மாற்றிகள் தகர்க்கப்பட்டிருந்தன.

பாதுகாப்புப் படையினரின் ஆலோசனைக்கேற்ப புலிகளின் தாக்குதலில் இருந்து தப்பிய சில மின்மாற்றிகளை, இலங்கை மின்சார சபையினர் கழற்றி எடுத்துச் சென்றனர். மின்சாரச் சீர்குலைப்பு நடவடிக்கைகளால் இதுவரை இலங்கை மின்சார சபை மீளமுடியாத நஷ்டத்திற்குச் சென்றுள்ளது. இது ஒருபுறமிருக்க, பல்வேறு தொழில்துறை இழப்புக்களால் பல கோடி ரூபாய் நஷ்டமேற்பட்டுள்ளது. அரிசி ஆலைத் தொழிலாளர் தொடக்கம் ஆடைத்தொழிற்சாலைகளில் பணிபுரிவோர்வரை வறியவர்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

# புலிகள் பதில் கூறுக!

பதுளை மாநகரெங்கும் சோசலிஸ சமத்துவக் கட்சியினர் பெரிய பிரசுரங்களை ஒட்டியுள்ளனர். தமிழில் காணப்படும் அந்தப் பிரசுரங்களில் 'சோசலிஸ சமத்துவக் கட்சி அங்கத்தவர்களை விடுதலை செய்ததை, விடுதலைப் புலிகள் ஊர்ஜிதம் செய்ய வேண்டும்!'

'சோசலிஸ சமத்துவக் கட்சியின் ஜனநாயக உரிமைகளைக் காப்பாற்று' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தங்களது பகிரங்கக் கூட்டம் நடைபெறவுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தலைமைச் செயலாளர் பதவி!

## ஊகங்கள் உண்மையா?

(திருமலை நிருபர்)

'திரு. சுந்தரம் திவகலாலாவுக்கு வடக்கு கிழக்கு மாகாணத் தலைமைச் செயலாளர் பதவி' என்று வெளியான செய்தி வெறும் பூச்சுற்றல் என்று முரசுக்கு நம்பகமான தகவல்கள் கூறுகின்றன. இது திட்டமிட்டு ஒரு சிலரால் பிரசாரப் படுத்தப்பட்டதேயன்றி அதில் எவ்வித உண்மையும் கிடையாது, என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மாகாணசபை வட்டாரங்களில் இது பற்றிக் கருத்துக் கேட்டபோது "உண்மை துளியும் இல்லாத வெற்று விளம்பரம் இது!" எனக் குறிப்பிட்டனர்.

தலைமைச் செயலாளர் திரு ஜி.கிருஷ்ண மூர்த்தியுடன் தொடர்பு கொண்டபோது "இந்த வதந்தியை நானும் அறிந்தேன்; ஒரு பத்திரிகையில்கூட செய்தி வெளியாகியுள்ளது. ஆனால் இத்தகைய மாற்றமொன்றைச் செய்யவல்ல அதிகாரிகளிடம் இது பற்றிக் கேட்டேன். அதில் உண்மை இல்லை என்று மறுத்துள்ளார்கள். எங்கிருந்து இத்தகைய தவறான செய்தியைப் பெற்றார்களோ தெரியவில்லை," என்று தெரிவித்தார்.

ஆளுநருக்கும், ஜனாதிபதிச் செயலகத்துக்கும் தெரியாமல் திவகலாலாவுக்குத் தலைமைச் செயலர் பதவியைக் கொடுத்தது யார்? இந்த வதந்தியின் உள்நோக்கம் என்ன? குறிப்பிட்ட அதிகாரியே கதை பரப்பினாரா? இவைதான் தற்போதைய முக்கிய கேள்விகள்.

# கெடுபிடிகள் அதிகரிப்பு

(திருமலை நிருபர்)

நவம்பர் இறுதியில் பச்சனூர்க் கிராமத்தில் இடம்பெற்ற தாக்குதலை அடுத்து 32 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் நூறுபேர் அங்குள்ள கிறிஸ்தவ ஆலயமொன்றில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர். தாக்குதல் இடம்பெற்ற இடத்தைச் சுற்றி இருந்த குடியிருப்பாளர்களே இவ்வாறு தஞ்சமடைந்திருக்கிறார்கள்.

இது இவ்வாறிருக்க, மூதூர் கிழக்குப் பகுதிகளான கட்டைபறிச்சான், சம்பூர், சேனையூர் போன்ற கிராமங்களிலிருந்து மூதூர் நகரம் நோக்கி அன்றாடத் தேவைகளின் பொருட்டு வருபவர்களிடம் தேசிய அடையாள அட்டை இல்லையாயின் அவர்கள் இராணுவத்தினரால் திருப்பி அனுப்பப்படுவதாகக் கூறப்படுகிறது.

இராணுவத்தால் வழங்கப்பட்ட மாவட்ட அடையாள அட்டைகளைக் காட்டினாலும் அவர்கள் தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.

மூதூர் கிழக்குப் பகுதி வாழ் மக்களில் பெருவாரியானோர் கல்வியறிவின்மை காரணமாக பிறப்புச் சான்றிதழ்களோ, வேறு அடையாள அட்டை பெறக்கூடிய ஆவணங்களோ இன்றி இருக்கிறார்கள். இதனால் அடையாள அட்டை பெற முடியாதிருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

டிசம்பர் 15ந் திகதி தொடக்கம் இத்தடை நீக்கப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பி. பிரமுகர் சீலன் தெரிவித்துள்ளார்.

# சோதனைச் சாவடிகளில்

## சீருடையினரின் கையாட்கள்!

சோதனைச் சாவடிகளிலுள்ள சீருடையினரின் சில சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக சிவிலியன்கள் சிலரைத் தமது கையாட்களாகப் பழக்கப்படுத்தி வைத்துள்ளனர். சீருடையினரின் முன்னும் பின்னும் திரியும் இந்த ஆசாமிகள், சீருடையினருக்குள்ள அதே அதிகார தோரணையில் பொது மக்களைச் சீண்டிச் சோதனையிடுகின்றனர்.

எவ்வாறிருப்பினும் தம்மைப் போன்ற சாதாரண சிவிலியன் ஒருவர் பொது மக்களைச் சோதனையிடுவதால் பொது மக்கள் மிகுந்த அசௌகரியத்துக்கு உள்ளாகி வருவதோடு மன வெறுப்புக்களையும் தேடிக்கொள்ள நேரிடுகிறது.

தங்களின் உத்தியோக நலன்கள் பாதிக்கப்படுமென்பதால்தான் தாம் நேரடியாகச் செய்யமுடியாத இலாப காரியங்களுக்கு பக்கத் துணையாக சிவிலியன்களைத் தமது கையாட்களாகப் பயன்படுத்துகிறார்கள் என்று பயணிகள் கருதுகிறார்கள்.

மட்டக்களப்பு ஒட்டமாவடிப் பெரிய பாலத்தடியில் இந்த சிவிலியன் கையாட்கள் சீருடையினருடன் சேர்ந்து பொதுமக்களைச் 'சோதிக்கின்றனர்.'

# வாகன அணிமீது குண்டு வீச்சு!

## வீசியவர் தப்பிச் சென்றார்

விடுமுறை பெற்று வீடு செல்லும் படையினரை ஏற்றிச் சென்ற இராணுவ வாகன அணியைச் சேர்ந்த பஸ் ஒன்றின்மீது புலிகள் கைக்குண்டு ஒன்றை வீசியதில் படைவீரரொருவர் பலியானார். மேலும் 8 பேர் காயப்பட்டனர். ஏறாவூர் ஆறுமுகத்தான் குடியிருப்பில் இச்சம்பவம் 21.12.98 அன்று பகல் 12.45 க்கு இடம்பெற்றது.

மிகவும் இறுக்கமான பாதுகாப்புக் கண்காணிப்புள்ள பகுதிக்குள் நுழைந்தே குண்டை வீசிவிட்டு புலி உறுப்பினர் கச்சிதமாகத் தப்பிச் சென்றுவிட்டார் என்ற விடயம் மிகவும் ஆச்சரியமாகப் பேசப்படுகிறது.

சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சில யார் தூரத்திலேயே வீதிப் பாதுகாப்பில் ஈடுபடும் படையினரும், மறுபுறம் சோதனையிடும் ஏறாவூர் பொலிஸாரும் நின்றிருந்தனர்.

அக்கரைப்பற்றில் காவல் கடமையில் நின்றிருந்த பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மீது கைக்குண்டு வீசப்பட்டதில் சார்ஜன் ஒருவர் பலியானார். 20.12.98 அன்று இது நிகழ்ந்தது.

இதனிடையே மட்டக்களப்பு-தியாவட்டவான் பகுதியில் உள்ள பெரும்பான்மை இனத்தவரான ஒருவரின் சாராயக் கடைக்குள் கைக்குண்டு வீசப்பட்டதில் ஏ.ராஜ்குமார் (17) என்பவர் கொல்லப்பட்டார். மேலும் மூவர் காயப்பட்டனர்.

இக்கடைக்கு வரும் வாடிக்கையாளர்களான சீருடையினரே சம்பவம் நடப்பதற்கு முன்னர் கடைக்காரருடன் வாய்த்தர்க்கம் புரிந்து விட்டுச் சென்றிருந்தனராம். புலிகள் ஊருக்குள் நடமாடியபோது பலவருடங்களுக்கு முன்னர் இவரது சாராய விற்பனையில் வெறுப்புக் கொண்டு இவரை அடித்திருந்தனர் என்பதும் தெரியவருகிறது.

# ஆட்டிலெறி குண்டுகள் குவிப்பு

## மொத்த பெறுமதி 114 கோடி

மக்கள் சீனக் குடியரசிடமிருந்து சிறிலங்கா இராணுவத்துக்கு ஒரு இலட்சத்து 70 ஆயிரம் சக்தி வாய்ந்த ஆட்டிலெறிக் குண்டுகள் தருவிக்கப்பட்டுள்ளன. இதன் மொத்தப் பெறுமதி ஒரு கோடி 70 இலட்சம் அமெரிக்க டொலராகும். இலங்கை நாணயப்படி ரூபா 113 கோடியே 90 இலட்சம்.

இத்தனைக்கும் தற்போது இராணுவத்திடமுள்ள பீரங்கிகளில் இவற்றைப் பாவிக்க முடியுமா? என்ற சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

இக்குண்டுகள்-இன்றுள்ள நடைமுறைப்படி பயன்படுத்தப்படுவதானால்-25 வருடங்களாவது தொடர்ந்து பாவிக்கப்பட வேண்டும்.

இத்தனையும் ஒரு திறந்த வெளியில் வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு வைத்திருப்பதால் இயற்கையின் தாக்கங்களுக்குள்ளாக்கப்பட்டு, இன்னும் சில வருடங்களில் கடலில் கொட்டவேண்டி இருக்கும்- என்று 'சண்டே டைம்ஸ்' சுட்டிக்காட்டியிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

# மல்வத்தை மாதிரிக் கிராமமும் காற்றில் பறந்த வேலைகளும்

அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள மல்வத்தைக் கிராமம் துறைமுக அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் மீள்குடியேற்ற மாதிரிக் கிராமமாக பல அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டு அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களால் நவம்பர்-02ந் திகதி திறந்துவைக்கப்பட்டது.

சுமார் 4 கோடி ரூபா செலவில் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறப்பட்டபோதிலும், மல்வத்தைக் கிராமத்தில் பெரும்பாலான வேலைத்திட்டங்கள் இன்னும் அரைகுறையாகவே காணப்படுகிறது.

சம்மாந்துறை பிரதேச சபையின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பல வேலைத்திட்டங்கள் இன்னும் அப்படியே கிடக்கின்றன.

★ 430,000 ரூபா செலவில் விளையாட்டு மைதானம் அமைக்கப்படவிருந்தது. ஆனால் எதுவித வேலையுமே மைதானத்தில் நடைபெறவில்லை. மைதானம் அப்படியே கிடக்கின்றது.

★ வீதிகள் யாவும் கிறவல் போடப்பட்டு சீர்செய்யப்படுமென கூறப்பட்டது. ஆனால் அரைகுறையாக அவ்வேலைகள் கிடக்கின்றன.

★ மேற்படி பிரதேச சபையினாலேயே மின்கம்பங்களுக்கென 65 மின்விளக்குகள் பொருத்தப்பட இருந்தபோதிலும் 17 மின்குமிழ்களே பொருத்தப்பட்டன. இதில் மிகப்பெரிய சோகம் என்னவென்றால் அமைச்சர் மாதிரிக் கிராமத்தினை திறந்து வைத்த நவம்பர் 02ந் திகதி இரவு மட்டுமே மின்குமிழ்கள் எரிந்தன. மறுநாள் மின்சாரசபையினர் (வீரகொட) சகல மின்குமிழ்களிற்கான தொடர்பையும் துண்டித்துவிட்டனர். இதனால் இப்பிரதேசம் இருள் சூழ்ந்து காணப்படுகிறது.

★ இப்பிரதேச சபையினாலேயே மல்வத்தை பொதுநூலகம் நிர்வகிக்கப்படுகிறது. அமைச்சர் பொதுநூலகத்தை திறந்து வைத்தார். மறுநாளே மூடப்பட்ட நூலகம் இன்னும் திறக்கப்படவில்லை. சம்பந்தப்பட்டவர்களிடம் கூறியும் எதுவித பயனையும் காணவில்லை.

சுகாதார திணைக்களத்தினால் மல்வத்தை மருந்தகம் திறக்கப்பட்டது. அன்றிலிருந்து அங்கு மருத்துவரும் இல்லை. மருந்துகளும் இல்லை. மருந்தகத்தை திறந்து வைத்துக்கொண்டு ஒரு பெண் சிற்றூழியரும் ஆண் சிற்றூழியரும் இருக்கின்றனர். சம்பந்தப்பட்டவர்கள் திரும்பிப் பார்ப்பதாகவே தெரியவில்லை.

அமைச்சருக்கு சில அதிகாரிகள் களங்கம் விளைவிப்பது போலவே மல்வத்தைக் கிராம வேலைத்திட்டங்கள் இழுத்தடிக்கப்படுகின்றன.

அமைச்சரும் அமைச்சு அதிகாரிகளும் இவ்விடயத்தில் கரிசனை எடுப்பார்களா என மல்வத்தை மக்கள் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். ●

# வன்னியிலிருந்துவர பிணை-பல்கலைக்கழக மாணவர் அவதி

வன்னிப் பகுதியில் இருந்து தென்பகுதிப் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்டு தமது கற்கை நெறியை தொடரவரும் மாணவர்கள் வவுனியாவில் அனுபவிக்கின்ற வேதனைகள் சொல்லிமாளாது. பொதுவாகவே கிளிநொச்சி அல்லது முல்லைத்தீவு அரச அதிபர்களால் இம்மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்தி வவுனியா அரச அதிபருக்கு கடிதம் ஒன்றினையும் வழங்குகின்றனர்.

இக் கடிதத்தினை பெரும் நம்பிக்கையுடன் காவிவருகின்ற இம்மாணவர்களுக்கு வவுனியாவில் பெருத்த ஏமாற்றமே காத்திருக்கின்றது. வவுனியா அரச அதிபரோ எவ்வித உதவியும் செய்ய முடியாத கையறுநிலையில் உள்ளார்.

வன்னியில் இருந்து புதிதாக வரும் எவரும் வவுனியாவில் நிரந்தரமாக வதியும் ஒருவர் பிணை நின்றால் மட்டுமே அங்கிருந்து தென்பகுதி செல்ல முடியும் என்கிறது அரசினது பாதுகாப்பு விதி. வன்னியில் இருந்து வரும் மாணவனுக்கு பாதுகாப்புக் காரணங்கள் கருதி எவருமே பிணைவைக்க முன்வர மாட்டார்கள் என்பது எல்லோரும் அறிந்த விடயம். எனவே இங்கு பிணை நிற்பதற்கு ஒருவரைப் பிடிப்பது என்பது முயற்கொம்பாகவே உள்ளது.

அடிப்படை வசதிகளோ, அல்லது மருத்துவ, கல்வி வசதிகளோ மறுக்கப்பட்ட ஒரு யுத்த பூமியில் இருந்து பெரும் பிரயத்தனத்தின் மத்தியில் கல்வி கற்று பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டு, பெரும் இன்னல்களைக் கடந்து வருகின்ற இம்மாணவர்களுக்கு யார் உதவி செய்யப் போகின்றார்கள்?

இறுதியாக அவலங்களைச் சுமந்து இம் மாணவர்களின் கல்வி வவுனியாவில் நிரந்தரமாக வதியும் ஒருவரினது மனச்சாட்சியில் தங்கி நிற்கின்றது. தமிழனாய் பிறந்ததற்காக காலம்காலமாய் படுகின்ற வேதனைகளுடன் இவற்றையும் இணைத்துக் கொள்வதா?

ஒரு பெரும்பான்மை இன மாணவனுக்கு இத்தகைய ஓர் அநீதி இழைக்கப்பட்டிருக்கும் எனில் பல்கலைக்கழக நிர்வாகங்கள் பொறுத்திருக்குமா?

இப்புதுமுக மாணவர்களினது கல்வியின் எதிர்காலத்திற்கு இப்போக்குவரத்து நடைமுறை பெரும் இடர்பாடாகவே இருந்து வருகின்றது. வவுனியா அரச அதிபரும், தென்பகுதி பல்கலைக்கழக சமூகங்களும் இம்மாணவர்களுக்கு ஏதாவது ஒழுங்குகளை செய்வார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

பாதிக்கப்பட்ட புதுமுக மாணவர்கள்.
(97/98 கல்வியாண்டு)

# ஓய்வூதியம் தர மறுப்பு முன்னாள் தளபதி புகார்!

இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னர் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெரி டி சில்வாவுக்கு இதுவரை ஓய்வூதியம் வழங்கப்படவில்லை. தற்போதைய இராணுவத்தளபதி, பாதுகாப்புச் செயலாளர் வெளிநாட்டமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு பல தடவைகள் முறையிட்டும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று கொழும்பு ஆங்கில வார ஏடு செய்தி வெளியிட்டுள்ளது.

திரு டி. சில்வா தளபதியாக இருக்கும் போது இராணுவத் தளபதிக்குரிய உத்தியோக வாசஸ்தலத்தில் குடும்பத்துடன் வசித்து வந்துள்ளார். இவர் பதவி விலகியதும், பாகிஸ்தானுக்கு சிறிலங்காவின் தூதுவராக அனுப்பப்பட்டார்.

அவரும் குடும்பமும் வீட்டைக்காலி செய்தபின்னர் அங்கிருந்த தளபாடங்களை கணக்கெடுக்கச் சென்றவர்கள், பல பெறுமதி வாய்ந்த பொருட்கள் காணப்படவில்லை என்று கண்டுபிடித்தனர். இதன்காரணமாகவே ஜெனரல் டி சில்வாவின் ஓய்வூதியம் வழங்கப்படவில்லை என்று தெரிகிறது.

தளபதிக்குரிய இல்லத்தில் தானோ அல்லது தனது குடும்பத்தினரோ இல்லாத வேளையில் சில அதிகாரிகள் சென்று தளபாடங்களைக் கணக்கெடுத்துள்ளனர். தானோ தனது குடும்பப் பிரதிநிதியோ கணக்கெடுத்த போதுஇல்லாதபோது ஏதாவது மோசடிகள் இடம்பெற்றிருக்க இடமுண்டு. ஆகவே பாரபட்சமற்ற விசாரணை நடத்த வேண்டும் என்று ஜெனரல் டி சில்வா கோரியிருந்தார். ஆனால் அக் கோரிக்கை விடுத்தும் பல காலமாகிவிட்ட பின்னரும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையாம்.

இதேவேளை பொருட்களை முன்னாள் தளபதியோ அவர் தம் குடும்பத்தினரோ களவாடியிருக்கிறார்கள் என்ற தவறான எண்ணம் ஏற்படும் வகையில் செய்தித்தாள்களில் செய்திகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ■

# இராணுவம் முற்றுகை! புலனாய்வு பிரிவு உறுப்பினர் பலி

(மன்னார் நிருபர்)

மன்னார்த் தீவுப்பகுதியில் புலிகளின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஜோன் எனப்படும் செபஸ்தியம் பிள்ளை மரியதாஸ் இராணுவம் சுற்றி வளைத்து மேற்கொண்ட தாக்குதலில் பலியானார்.

கடந்த மூன்று வருடங்களுக்கும் மேலாக மன்னாரில் நடமாடித்திரிந்த மேற்படி புலி உறுப்பினர் புலனாய்வு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததாக கூறப்படுகின்றது. பல்வேறு தாக்குதல் சம்பவங்களிலும் பங்குகொண்டிருந்தார்.

மன்னார் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வீடொன்றில் இவரும் மேலும் இரு புலிகளும் தங்கியிருப்பதாக தகவல் கிடைத்தது. சனி விலேஜ் இராணுவத் தினர் மேற்படி வீட்டை முற்றுகையிட்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதில் ஜோனும்பபா எனப்படும் தேவதாசனும் கொல்லப்பட்டனர். ஜோன் பூநகரிப் பகுதியை சேர்ந்தவர் என்றும், பபா முருங்கன் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் தெரியவருகிறது. மற்றுமொரு புலி உறுப்பினர் தப்பி ஓடிவிட்டார். இருவரது உடல்களையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் 14.12.98 அன்று பொறுப்பேற்றது. ●


**BRIGHTன் தபால் மூலம் கல்வித் திட்டம்**

மூன்றே மாதங்களில் ஆங்கிலம்/சிங்களம் பேச, எழுத, வாசிக்க கற்றுத் தரப்படும் விபரங்களுக்கு கீழ்காணும் விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க

பெயர் ..............................
விலாசம் ..............................
..............................

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
S-27 FIRST FLOOR, P. O. BOX NO: 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX
COLOMBO - 11. TELE: 434770, 074-718592



**மலையாள மாந்திரிகம்**





மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இது தான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய மந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
**P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.



**உலகப் பிரசித்தி பெற்ற உயர்தர (ரமி) இசைத்தட்டுகள்**

RAMY CDS RAMY CDS RAMY CDS

ஆங்கிலோ-இந்திய கூட்டுத் தயாரிப்பாளர்கள் EMI-RPG அமைப்புடன் RAMY இணைந்து பழைய-புதிய பாடல்களை சர்வதேசத் தரத்தில் (CD's) இசைத்தட்டுக்களாகவெளியிட்டுள்ளனர்.

இவற்றை இலங்கையில் அறிமுகப்படுத்துவதில்

**ஏ.கே.வி. எம்போரியம்** பெருமைப்படுகிறது.

நாடெங்கும் விற்பனை முகவர்கள் தேவை.

**நியாய விலையில்-சர்வதேசத் தரத்தில்-RAMY CDS.**

எமது விசேட வெளியீடு — மன்னார் மடு மாதா மீதான கிறிஸ்தவ கீதங்கள்

**A.K.V. EMPORIUM**
F 119, PEOPLES PARK,
COLOMBO-11.
Phone:435744, 472129

சுவிற்ஸர்லாந்தில் —
RAMY RECORDS GMBH
KOCHLI STR-028
8004-ZURICH.
Phone: 004181252525013



**உதவிக் கரம் கொடுங்கள்**



கம்பளை-கம்பளவெல என்ற இடத்தைச் சேர்ந்த திருமணமாகாத விஜயா முருகையா என்ற யுவதி சிறுநீரகக் கோளாறினால் துன்பப்படுகிறார். சிறுநீரக மாற்றுச் சிகிச்சை மட்டுமே இவருடைய உயிரைக் காக்கும் என்று மருத்துவர்கள் தெரிவித்துவிட்டனர். செல்வி விஜயாவின் சகோதரி தனது சிறுநீரகங்களில் ஒன்றைத் தானம் செய்ய முன்வந்துள்ளார். இச்சிகிச்சைக்கான செலவு ரூ 400,000/ தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இப்பெருந் தொகைப் பணத்தை இவருடைய குடும்பத்தால் செலவிட வசதியில்லாமையினால் கருணையுள்ள நெஞ்சங்களின் உதவியைக் கோருகின்றனர். நிதி உதவி செய்ய விரும்புவோர் கொழும்பு கிராண்ட் பாஸ்-ஹட்டன் நஷனல் வங்கிக் கணக்கு 0213277019 என்ற இலக்கத்தில் உரிய தொகையைச் சேர்க்கலாம்.

செல்வி விஜயா முருகையா
217, கம்பளவெல, கம்பளை.



**மட்டக்களப்பு மாந்திரீகம்**

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு. மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

**DR. A.P.S. KUTTY**
50, THEATRE ROAD,
NINTHAVUR-21,
SRI LANKA.
067-50349



**இந்திய திருத்தல யாத்திரையும், சுற்றுலாவும்**

(குறைந்த செலவில் உங்கள் மன நிறைவு)

✦Hotel Reservation
✦Car, Van & Coach (A/C, Non A/C) Rentals
✦Guest House (Homtels) Rentals & Reservations (Well Furnished)
✦சகல இந்துத் திருத் தலங்களுக்கும் சென்றுவரலாம்.
✦வெளி நாட்டில் வாழ்பவர்கள் இந்தியாவில் திருமணம் நடாத்த விரும்பின், திருமண ஒழுங்குகள் நன்கு கவனிக்கப்படும்.
✦நியாயமான கட்டணத்துடன் 24 மணி நேர சேவை.

தொடர்புகளுக்கு:

**MAATHU'S HOMTELS & TRAVELS**

H 51/4, South Avenue,
Thiruvanmiyur, Chennai-600 041
Tamil Nadu, India.

Telephone : (91-44) 492 6717
(91-44) 445 3021
Fax : (91-44) 492 6717
Pager : 9628-335 035



**மனோதத்துவ வைத்தியம்**

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம் அவர்களை

**கொழும்பில் டிசம்பர் 20 முதல் 28 வரை சந்திக்கலாம்**

**Dr. P.Arumugam S.A.M.P. REG.9492**
**BEAUTY LODGE, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.**
(5 லாம்புச் சந்தியிலிருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது) (ஆட்டுப்பட்டித் தெரு) T.P:- 338165-338166
கொழும்பு நாட்கள் மட்டும் செல்டெல் No. 072-609388

**கல்முனையில் ஜனவரி 2,3,4ம் திகதிகளில் சந்திக்கலாம்**

T.M.M. பார்மசி-கல்முனை. T.P. 067-29329

**வவுனியாவில் ஜனவரி 09,10,11ம் திகதிகளில் சந்திக்கலாம்**

(முன்கூட்டியே பதிவுசெய்யவும்)
(HOTEL VASANTHAM), கண்டி வீதி, வவுனியா. T.P.024-22615, 024-22607
கடிதத்தொடர்பு:- Dr. P.Arumugam S.A.M.P.
No. 33, Tissa Weerasingam sq, Boundary Road, Batticaloa . SRI LANKA.



**ஸ்டூடியோ சாயா**

வீடியோ, போட்டோ, பிரேமிங், லேமினேஷன், டியூரொகாட்
40 1/1, காலி வீதி, வெள்ளவத்தை தொ.பே.: 594492



**200 கணனிப் புலமைப்பரிசுகள் 200**

O/L பரீட்சை முடித்து பெறுபேறுகளை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மாணவர்களுக்கு சிறந்ததோர் கல்வி நிறுவனத்தில் கணனி Diploma பெறும் வாய்ப்பு.

❖ புலமைப்பரிசு பெறுவதற்கு நுண்ணறிவுப் பரீட்சைக்குத் தோற்றவேண்டும்.
❖ பரீட்சைக்கு கட்டணம் எதுவும் செலுத்தத் தேவையில்லை.
❖ இப்பரீட்சையில் மாணவர் பெறும் புள்ளிகளுக்கமைய 100%, 75%, மற்றும் 50% Scholarship கள் வழங்கப்படும்.
❖ பரீட்சை, ஜனவரி மாத முதல் வாரத்தில் நடாத்தப்பட்டு அம்மாத நடுப்பகுதியில் வகுப்புகள் ஆரம்பமாகும்.

இந்த Scholarship Diplomaவில் உள்ளடக்கப்படுபவை:
Introduction to Computers, MS-DOS, Windows 98, MS-Word, MS-Excel, MS-Access, Pascal, Turbo C, *Internet & E-Mail.* (ஒவ்வொரு மாணவருக்கும் இலவச E-Mail Account வழங்கப்படும்)

மேலும் விபரங்கட்கு சுயவிலாசமிடப்பட்ட தபாலுறையுடன் கீழ்வரும் கூப்பனை நிரப்பி அனுப்பவேண்டிய முகவரி :

**Brighton System International (Pvt) Ltd.,**
*414, Galle Road,*
*Wellawatte, Colombo 6.*
**Phone: 597409,077-314352,077-317042**

பெயர் :
விலாசம் :
தொலைபேசி : (இருப்பின்)
தேசிய/தபால் அடையாள அட்டை இல: :



கண்டியில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்குவதில் முன்னோடி .........

**சாஜி இன்டர்நெஷனல் ஏஜென்சி**

Reg. No. 1361

✈குவைத் ✈ டுபாய் ✈ டோகா ✈ மாலைதீவு நாடுகளில் ஆண், பெண் இருபாலாருக்கும் ஏராளமான வேலை வாய்ப்புக்கள் !

சப் ஏஜன்டுகளுக்கு விசேட சலுகைகள்

**SAAJI** *International Agency*
483 Peradeniya Road, Kandy.
☎08/228648

Royal -071-735132



**தெய்வீக மருத்துவம்**

சர்வதேச சமூக தெய்வீக சேவை
CHARITY REGED NO. HA\04\BT\219
NTSF தயார் தீர்க்குமிடம்

வாழ்க்கையில் கிரக மற்றும் வேறு தீவினைகளால், தீராத மனத்தாக்கம், காதல், கல்வி, தொழில், விவாகத்தடைகள், கணவன்-மனைவி சந்தோஷமின்மை, வெளிநாட்டுப் பிரயாணத்தடைகள் என்பவற்றிற்கும், வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம். காண்டமெனும் சோதிடத்தினால் உங்கள் பலன்களையும் தெரிந்து கொள்ளலாம். ஆயுர்வேத மருத்துவர் பாலுசோதிடர் (SAMP) "நேரில் வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால் கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருத்துப் பொருட்களை தபால்மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்புபவர்களின் விடயங்கள் முன்னுரிமை அடிப்படையில் கவனிக்கப்படும்."

தெய்வீக சக்தி நிலையம்
கல்லடி-அரசவிடுதி வீதி,
மட்டக்களப்பு.

THEIVEEGAM SRI LANKA.
HEAD OFFICE
BATTICALOA. SRI LANKA.
T.PHONE: 065-24825

"வாழ்விலிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்." - "DISPEL DARKNESS IN LIFE LET LIGHT SHINE"




படிப்பகம்

www.padippakam.com

# படைத்தரப்பின் புதிய தலைமை

# பதிலடிக்கு தயாராகும் புலிகள்!

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

மன்னார் விடத்தல் தீவில் புலிகளின் முகாம் ஒன்றில் வெடி விபத்து ஏற்பட்டது. 19.12.98 அன்று சனிக்கிழமை இந்த வெடி விபத்து நடந்தது.

இந்த வெடி விபத்து ஏற்பட்டிருக்காவிட்டால் மறுநாள் 20.12.98 ஞாயிறு அன்று மன்னாரில் பெரும் முழக்கம் ஒன்று கேட்டிருக்கும். இராணுவ இலக்கொன்றே தாக்குதலுக்கு இலக்காகியிருக்கும் என்று கூறப்படுகிறது.

லெப்டினன்ட்கேணல் மோகனதாஸ் தலைமையில் புலிகளின் தாக்குதல் அணியொன்று தாக்குதலுக்கு தயாரானபோதே வெடி விபத்து நடந்திருக்கிறது. மோகனதாஸ் உட்பட ஐந்து புலிகள் பலியாகியுள்ளனர். மேலும் சிலர் காயமடைந்தனர்.

லெப்டினன்ட்கேணல் மோகனதாஸ் தலைமையில் திட்டமிடப்பட்ட தாக்குதல் பின்போடப்பட்டாலும், குறித்த இலக்கு விரைவில் தாக்கப்படவும்கூடும்.

இதனிடையே வன்னியில் அடுத்த கட்ட தாக்குதலுக்கான பயிற்சிகள், ஒத்திகைகள் சுறுசுறுப்பாக நடந்து வருகின்றன.

பிரபாகரனே தனது நேரடியான கவனிப்பில் பயிற்சிகளை ஒழுங்கமைத்துள்ளார். பயிற்சிகளின் துரிதத்தை பார்க்கும் போது பாரிய தாக்குதல் திட்டம் ஒன்று தமது தலைவரின் மனதில் இருப்பதாக தெரிகிறது என்று புலிகளின் தளபதிகள் சிலர் கூறுகின்றனர்.



ஒட்டுசுட்டானுக்கு ஜெனரல் ரத்வத்தை சென்ற கவச வாகனம் இதுதான்.

படை நடவடிக்கைகளுக்கு புதிதாக தலைமை ஏற்றுள்ள ஜனாதிபதிக்கு கொடுக்கப்போகும் முதல் அதிர்ச்சியே பலத்த அதிர்ச்சியாக இருக்க வேண்டும் என்று பிரபாகரன் நினைப்பதாக தெரிகிறது.

ஜனாதிபதியின் நேரடித் தலைமை, புதிய இராணுவத் தளபதி, கூட்டுப்படை தலைமையகம் என்று புது மாற்றங்களுடன் எதிர்வரும் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் படைத்தரப்புக்கு பாரிய நெருக்குதல் ஒன்றைக் கொடுப்பதற்கு புலியணிகள் தயார்படுத்தப்பட்டு வருகின்றன.

மாங்குளத்திலிருந்து ஒட்டுசுட்டான் வரை அகன்று நிலைகொண்டுள்ள படையினர் தற்காப்பு நிலையில் இருக்கக் கூடியதாக, மறு முனையான பரந்தனில் இருந்து படை நடவடிக்கைக்கு திட்டமிடப்படலாம் என்று புலிகள் கருதுகின்றனர்.

கிளிநொச்சியை கைப்பற்றாமல் வவுனியா, யாழ் சாலையில் படையினர் தொடர்ந்து முன்னேறுவதோ, அதனைக் கைப்பற்றுவதோ நடக்கக்கூடிய காரியமல்ல.

மாங்குளத்தில் இருந்து முன்னேறி கிளிநொச்சியை கைப்பற்றுவது இயலாத காரியம்.

அதனால் ஆனையிறவு தளத்தில் ஒன்றுகுவிந்து பரந்தன் முனை வழியாக படைகள் கிளிநொச்சியை கைப்பற்ற முயற்சிக்கலாம் என்று புலிகள் நினைக்கிறார்கள்.

அவ்வாறான படை நகர்வு ஆரம்பமாகுமானால் அதனை எதிர்கொள்ளக்கூடிய தயார் நிலையில் முக்கியமான படையணிகளை கிளிநொச்சி பரந்தன் பகுதிகளில் புலிகள் நிறுத்தி வைத்துள்ளனர்.

மரபுச் சமரில் தேர்ச்சியும், அனுபவமும் பெற்றுள்ள ...போ வன் படையணி, ஊடறுப்பு சமரில் அனுபவம் மிக்க சிறுத்தை அணி போன்றவை முக்கிய அரண்களை பாதுகாத்து நிற்கின்றன.

தற்போதைய கள அமைதி இரு தரப்புக்குமே புயலுக்கு முந்திய அமைதிதான்.

இருதரப்பும் அடுத்த கட்ட தயார்படுத்தலுக்கு கால அவகாசம் எடுத்துக் கொள்கின்றன.

போலியோ சொட்டு மருந்து கொடுப்பதற்கான வாரத்தில் புலிகள் போர் நிறுத்தம் செய்தனர். ஆனால் அரசும், படைகளும் போர் நிறுத்தம் செய்ய பிடிவாதமாக மறுத்தன.

இந்தப் பிடிவாதமெல்லாம் தென்னிலங்கை மக்களுக்கு தமது போர் உறுதியைக் காண்பிக்க மட்டும்தான்.

தற்போது வன்னியில் படைகள் தற்காலிக போர் நிறுத்தம் செய்துள்ளது போன்ற நிலவரமே காணப்படுகிறது.

மறுதரப்பு போர் நிறுத்த அவகாசத்தை பயன்படுத்தி தம்மை பலப்படுத்திக் கொள்ளும் என்று கருதினால்தான் போர் நிறுத்தம் செய்ய எதிர்த்தரப்பு மறுக்கும்.

புலிகள் தம்மைப் பலப்படுத்திக் கொள்வார்கள் என்று படையினர் போர் நிறுத்தம் செய்ய மறுத்திருந்தால், ஒய்வின்றி தொடர்ந்து சண்டையிட வேண்டும்.

ஆனால் அதற்கான சூழ்நிலை படையினர் தரப்பில் இல்லை. தற்போது மட்டுமல்ல 'ஜயசிக்குறுய்' ஆரம்பமானதில் இருந்து பல தடவை படையினர் சண்டையை நிறுத்தி மூச்சு விட்டுக் கொண்டனர்.

புலிகளது முறியடிப்பு சமர் ஏற்படுத்திய சேதங்களும், தாக்கங்களும் படைத்தரப்பை அடிக்கடி சண்டையை நிறுத்தி, தம் அணிகளை புனரமைக்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தின.

வன்னிக் களத்தை பொறுத்தவரை சமரை ஆரம்பித்தவர்களும் படையினர்தான். சமரை அடிக்கடி நிறுத்தம் செய்வதும் அவர்கள்தான்.

புலிகளை அழித்தொழிக்க ஆரம்பிக்கப்பட்ட வன்னிச் சமர், புலிகளது அழித்தொழிப்பு தாக்குதல்களை எதிர்கொண்டு அடிக்கடி நிறுத்தமாகிறது.

புலியணிகள் தாமாக ஒய்வை நாடுவதில்லை. படையினர் ஒய்வு பெறும்போது, புலிகள் தாமும் ஒய்வுகொண்டு, தமது அரண்களையும் வலுப்படுத்திக் கொள்கின்றனர்.

என்றாலும் படையினரைவிட புலிகளுக்கு தங்கள் சக்தியை புதுப்பித்துக் கொள்ள சாதகங்கள் அதிகம்.

படையினரைப் பொறுத்தவரை பழக்கமில்லாத பிரதேசத்தில், மக்கள் இல்லாத பூமியில், காலநிலை மாற்ற தாக்கங்களையும் சமாளித்து, எந்த நேரமும் தாக்குதலை எதிர்பார்த்து இருக்க வேண்டிய நிலை. இத்தகைய அந்தரமான சூழல் மன நிலையை பாதிக்கக் கூடியது. உள ஆற்றலை சேதமாக்கக் கூடியது.

வன்னியில் மேலும் படையினர் முடக்கமாகி நிற்கையில், படையினரின் மனநிலையே படைத் தலைமைக்கு எதிராக மாறவும் கூடும்.

தமது மேலதிகாரிகளை சுட்டுத் தள்ளும் சிப்பாய்கள் பற்றிய செய்திகள் வடக்கில் இருந்து அடிக்கடி வெளியாகும் காரணமும் அதுதான்.

ஆகவே, புயலுக்கு முந்திய இந்த அமைதிக்கு பின்னர் புலிகளின் பாய்ச்சலுக்கே அதிக சாதகம்இருப்பதுபோல தோன்றுகிறது.

புலி பதுங்குவது பாய்வதற்கே என்பது புலிகள் இயக்கத்திற்கும் இதுவரை பொருந்தி வந்திருக்கிறது.

புலிகள் பதுங்கினால் பலவீனமாகிவிட்டனர் என்று முன்னர் படைத்தரப்பு எடைபோட்டது.

ஆனால் இப்போது அப்படியல்ல. புலிகள் பதுங்கினால்தான் படைத்தரப்பு கடுமையாக யோசிக்க ஆரம்பிக்கிறது.

புதிய இராணுவத் தளபதி, புலிகள் படையினர்மீது பாரியதாக்குதலை தொடுக்கக் கூடிய வலிமையோடு இருப்பதாக கூறியுள்ளார்.

இந்தக் கூற்றை மேலெழுந்தவாரியாக பார்த்தால், புலிகளது பலத்தை ஒப்புக் கொண்டுள்ளார் என்று தோன்றலாம்.

இக் கூற்றின் பின்னணியில் இன்னொரு முக்கிய காரணம் இருக்கிறது. வடக்கு-கிழக்கில் படைகளை குவித்து வைத்திருப்பதையும், மக்களின் குடியிருப்பு பகுதிகளுக்குள் படைகள் நிலை கொண்டிருப்பதையும் நியாயப்படுத்த வேண்டுமானால், அவ்வாறு கூறியே ஆக வேண்டும்.

இராணுவ மேலாண்மையை தக்கவைப்பதிலும், தொடர்ந்து விரிவு படுத்துவதிலுமே அரசு கண்ணாக இருக்கிறது என்பது தெளிவாகிறது.

அரசின் இராணுவ மேலாண்மைக்கு முடிவு கட்டும் திட்டத்தோடு புலிகளின் வியூகங்கள் அமையப்போகின்றன.

ஜனாதிபதி தலைமையிலான புதிய படைத்தரப்பு வியூகங்களுக்கு பிரபாகரன் தரப்போகும் பதில் என்னவாக இருக்கும் என்பதை அறிய அதிக காலம் காத்திருக்க வேண்டியதில்லை என்றே தோன்றுகிறது.

—★—

**ஜெ**னரல் அநுருத்த ரத்வத்தை ஒட்டுசுட்டானில் 'மயிரிழையில் உயிர் தப்பியதாக' சில வாரங்களுக்கு முன்னர் செய்திகள் வெளியாகின.

ஒட்டுசுட்டானுக்கு கவச வாகனத்தில்தான் ஜெனரல் ரத்வத்தை சென்றிருக்கிறார். ஷெல் தாக்குதல்கள், துப்பாக்கிப் பிரயோகங்கள் என்பவற்றில் இருந்து பாதுகாப்பளிக்கக் கூடியது இந்த கவச வாகனம். உள்ளே குளிரூட்டப்பட்டிருக்கும்.

ஜெனரல் ரத்வத்தை கவசவாகனத்தில் இருந்தபோதுதான் ஷெல்தாக்குதல் நடந்ததாக தெரிகிறது.

ஷெல்தாக்குதலில் அவருக்கோ, அவரது மெய்க்காப்பாளர் அணிக்கோ எவ்வித சேதமும் ஏற்படவில்லையாம்.

ஜெனரல் ரத்வத்தை வருகிறார் என்பதால் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரில் சிலரே பலியானார்கள்.

பாதுகாப்புக்கு நின்றவர்கள் பலியாகினர் என்றதும், அவருக்கு அருகில் நின்றவர்கள்தான் பலியானதாக ஒரு கற்பனை தோன்றி, மயிரிழையில் உயிர்தப்பியதாக செய்திகள் பரவிவிட்டன.

அரசுக்கும் இது ஒரு நல்ல அனுதாபம் தேடும் பிரசாரமாக பயன்பட்டது.

புலிகளிடமும் தற்போது கவச வாகனங்கள் இருக்கின்றன.

ஒருவேளை பிரபாகரனும் அதில்தான் கள நிலவரங்களை பார்வையிட சென்று வருகிறாரோ தெரியவில்லை.

அப்படி இருக்குமானால், அது பிரபாகரனுக்காக வழங்கப்பட்ட பரிசாக எடுத்துக் கொள்ளலாம்.

—●●—

**பு**லிகளின் ஆயுதக் கப்பல் ஒன்று சமீபத்தில் வந்ததாகவும், அதிலிருந்து ஆயுதங்கள் பச்சைப் பெட்டிகளில் இறக்கப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகின.

அந்தளவு தெளிவாக தெரிந்தால் விரைந்து சென்று தாக்கியிருக்கலாமே.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் முன்பாக பேச்சுக்கு தயார் என்று வேலுப்பிள்ளை பிரபாகரன் கூறியிருக்கிறார்.

இந்த அறிவிப்புக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பலத்த வரவேற்பு கிடைத்திருக்கிறது.



கவசவாகனத்தில் புலிகள்

அதனால் பிரபாகரன் பேச்சுக்கல்ல, போருக்கு ஆயுதம் குவிக்கிறார் என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்தவே இந்த ஆயுதக் கப்பல் கதை தற்போது கிளப்பி விடப்பட்டிருக்கிறது.

வழக்கமாக இவ்வாறான செய்திகளை கூறுவது அரசுக்கே அவமானம். அரசின் கடற்படை, வான்படைகளை மீறி புலிகள் கடற்பாதையால் ஆயுதங்களை கொண்டு வந்துவிட்டனர் என்றால் புலிகளுக்குத்தானே பெருமை.

அப்படியிருந்தும் அத்தகைய செய்தி ஒன்று கூறப்படுகிறது என்றால், அதன் பின்னணியில் விஷயம் இல்லாமல் போகாது. புலிகளது ஆயுதக் கப்பல் வருகிறது வருகிறது என்று படைத்தரப்பு அடிக்கடி கூறிவருவது வழக்கம். அது ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கை.

ஒருவேளை உண்மையாகவே புலிகளது ஆயுதக் கப்பல் புறப்பட்டிருந்தாலும், படையினருக்கு தகவல் தெரிந்துவிட்டதோ என்று நினைத்து திரும்பிச் செல்லவைக்கும் தந்திரமே அது.

கப்பல் வருகிறது என்று கூறினால் முன்கூட்டியே தகவல் கிடைத்துவிட்ட தாக்கும் என்று நினைக்கலாம். கப்பல் வந்து போய்விட்டது என்று படையினர் கூறினால் அது தடுக்க முடியாத இயலாமையைக் குறிக்கும்.

தமக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை, எதிரிக்கு சகுனப்பிழையாக இருக்க வேண்டும் என்ற கதைபோன்று, தமது மதிப்பு போனாலும், புலிகளுக்கு நற்பெயர் கிட்டி விடக்கூடாது என்ற அக்கறைதான் ஆயுதக்கப்பல் கதையோ?

□□□

ஜனாதிபதி சந்திரிக்காவும் பிரபாகரனின் மூன்றாம் தரப்பு மத்தியஸ்த கோரிக்கையை மறுத்து இந்தியப் பத்திரிகைக்கு பேட்டியளித்துள்ளார்.

மூன்றாம் தரப்பு அனுசரணையாளரே தேவை என்கிறார் ஜனாதிபதி. இது 1996ம் ஆண்டே ஜனாதிபதி கூறிய கதைதான்.

புலிகளுடன் பேச்சை நடத்தும்போதே நம்பிக்கையான மூன்றாம் நபர் ஒருவரது பாத்திரம் பற்றி அரசு பிரஸ்தாபித்தது. புலிகள் நிராகரித்துவிட்டனர்.

ஒன்றில் நேரடியாக பேச வேண்டும். இப் பேச்சு தோல்வி கண்டால் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் முன்பாக பேசவேண்டும் என்பதே புலிகளின் நிலைப்பாடு.

பாலஸ்தீன பிரச்சனைக்கு எவ்வகையிலும் குறைந்தது அல்ல இங்குள்ள இனப் பிரச்சனை.

அங்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் இருந்ததால்தான் ஓரளவு இணக்கமாயினும் எட்ட முடிந்தது. அப்படியிருந்தும் இழுபறிகள் தொடர்கின்றன. மூன்றாம் நபர் அனுசரணையுடன் பாலஸ்தீன பேச்சு நடந்திருந்தால் என்னாகியிருக்கும்? முதல் சுற்றிலேயே அரபாத்தும், இஸ்ரேலியர்களும் முறித்துக் கொண்டு போயிருப்பார்கள்.

அதே சூழ்நிலைதான் இங்கும் உள்ளது. எனவே, கைகோர்த்துவிட்டு ஓரமாக ஒதுங்கி நிற்கும் மூன்றாம் நபர் அனுசரணை தேவையில்லை.

தமிழ் மக்களுக்கு சுயாட்சி அதிகாரமுடைய தீர்வுக்கு அரசை நிர்ப்பந்திக்கக் கூடிய மூன்றாம் தரப்பு ஒன்றுதான் அவசியம். அதன் முன்பாக பேச்சு நடந்தால்தான் சமாதானத்தின் எதிரிகள் யார் என்பதை உலகம் அறியும் என்பதுதான் பிரபாகரனின் நிலைப்பாடு.

**நாரதர்**

இந்த நிலைப்பாடு தமக்கு சாதகமானால் அரசு ஏற்றிருக்கும். தமது கையிலுள்ள அரை குறைத் தீர்வுக்கு மேலாக கொடுக்க வேண்டியிருக்கும் என்று கருதியே அழுத்தம் தரக்கூடிய மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை அரசு மறுக்கத் தொடங்கியுள்ளது.

அரசின் இந்த நிலைப்பாடு இராணுவத் தீர்விலேயே அதனை நாட்டம் கொள்ள தொடர்ந்து தூண்டும்!

## அதிரடி அய்யாத்துரை



*ஈராக்குக்கு மோனிகா தாசர் அடித்த அடியை நாடெல்லாம் காரசாரமாக கண்டித்துப் போட்டினம். நம் நாட்டு ஆள்வார்கள் மட்டும் உற்ற நண்பனை இதமாக பதமாக கண்டிக்கும் பாணியில் நுனிநாக்கால் கண்டித்திருக்கினம். விமானக் குண்டுவீச்சை ஒரு அளவுக்கு மேல் கண்டிக்க குறுகுறுப்பாக இருக்கும்தானே! முஸ்லிம் மக்களுக்காக உயிரை கொடுக்கும் அரசியல் ஜாம்பவான்களும் அடக்கித்தான் வாசித்தவை.*

***இரு தரப்பாரும் வன்முறையை** கைவிட்டு பேச்சு மூலம் பிரச்சனைகளைத் தீர்க்கவேண்டும் என்று அதிகாரத் தரப்பில் ஒருவர் அறிக்கை விட்டிருந்தார். வடமேல் மாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு விடப்பட்ட அறிக்கையாக்கும் என்று நினைத்து, மேற்கொண்டு படித்தால், அது அமெரிக்க, ஈராக் போர் பற்றி விடப்பட்ட அறிக்கை. பிழையெல்லாம் அமெரிக்காவில்தானே. அதையெல்லோ கண்டித்திருக்க வேண்டும். இத்தனைக்கும் அவரும் இஸ்லாமிய மதத்தினர்தான். மேலிடம் கோபிக்கும் என்று மென்மையாக பட்டும் படாமல் அறிக்கை விட்டிருக்கிறார். அவர் நல்லவர்தான். சூழல் அவரைக் கட்டிப்போட்டிருக்குது.*

***வவுனியா சாய்பாபா** ஆசிரமத்தில் பொறுப்பாளர் மாற்றப்பட்டுவிட்டாராம். பாராட்டக் கூடிய விஷயம்தான். இளம் ஆண்கள் இனி தயக்கமில்லாமல் அங்கு போய்வரலாம். கட்டிக் காட்டியதும் தட்டித் திருத்தியதற்கு இன்னொரு தரம் பாராட்டு.*

***மற்றுமொரு வவுனியா** அநியாயம். அங்குள்ள பிரசவ நிபுணர் ஒருவர் ஆடும் ஆட்டம் தாங்க முடியவில்லையாம். அரச மருத்துவமனையில் பணியாற்றிக்கொண்டு சொந்தமாக இரண்டு மருத்துவமனைகள் நகரில் நடத்துகிறாராம். அரச மருத்துவமனைக்கு வரும் கர்ப்பிணிகளிடம் பிள்ளை புரண்டு கிடக்கிறது, கை வளைந்து கிடக்கிறது என்றெல்லாம் மிரட்டி தனது மருத்துவமனையில் 'ஸ்கேன்' பண்ணிப்பார்க்க செய்துபோடுவாராம். கிழக்கின் தனித்துவ தலைவர் பெயரைக் கூறித்தான் பந்தா காட்டுகிறாராம். இயக்கம் ஒன்று பணம் கேட்டு கடத்தியதாம். தனித்துவத் தலைவர் தலையிட்டதால் பணம் கொடுக்காமல் வெளியே வந்ததாகவும் தகவல்.*

***தலைநகரில்** 96ம் ஆண்டிலிருந்து 98ம் ஆண்டுக்குள் மொத்த குற்றச் செயல்கள் சுமாராக ஐயாயிரம். அதாவது இதுவரை குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படாத குற்றச் செயல்கள்தான் இத்தனையும். சட்டமா அதிபரே கூறியிருக்கிறார். தலைநகரில் பொலிஸ் நிலையங்களில் தமிழ்ச் சனத்திடம் புகைப்படம் கேட்பதைவிட, குற்றவாளிகளின் புகைப் படங்களை சேகரிக்கலாமல்லோ? புலி வேட்டை என்று இவை அலைய, முயல் குட்டிகள் குறுக்காகப் பாய்ந்து திரியுது. முதலில் அதுகளை அமுக்குங்கோ!*

***பச்சை உடையினருக்கு** புதிதாக பொறுப்பு ஏற்றவர் தன் கீழ் உள்ளோருடன் மென்மையான போக்குக் கொண்டவராம். அதனால் சில வருடங்களுக்கு முன்னர் தனது பதவியைத் துறக்க முன்வந்தாராம். தனக்குக் கீழே உள்ளோர் கட்டுப்படுகிறார்கள் இல்லையென்று கூறி மனம் சலித்தாராம். அன்று பொறுப்பாக இருந்த 'ஜெரி' உற்சாகம் கொடுத்து இவரது முடிவை மாற்றினாராம். அப்படியானால் இன்று அவருக்குத்தானே இவர் நன்றி கூறவேண்டும்!*

***கொழும்பில் இந்துக்** கோவில்கள் கட்டட வேலைகள், கோபுரம் கட்டுதல், தேர் செய்தல் என்று களைகட்டுகின்றன. யாழிலிருந்து வந்துள்ள தமிழ் மக்களும் இதற்கு முக்கிய காரணம். உண்டியல்கள் நிரம்புவதற்கு பெரும் உபயம் அவைதானாம். வெளிநாடுகளுக்கு போனாலும் விட்டுக் கொடுப்பதில்லை. அங்கும் தேர் இழுப்புத்தான். உலகெங்கும் இடம் பிடித்து ஆங்காங்கே வடமும் பிடித்து, தம் இருப்பை தடம் பதிக்கிறார்கள்!*

***திருவானமலையின்** சம்பந்தமானவரின் ஒரே உரை ஒரே பத்திரிகையில் இரண்டு இடங்களில் வெளியாகி இருந்தது. அவர் இரண்டு பக்கத்தால் கொடுத்திருக்கிறார் போல கிடக்கு.*

***மலையான பகுதியின்** தனித்துவத் தலைவர் பழுத்த பழம்தான் என்று நிரூபித்துப்போட்டார். அதிகாரத் தரப்பார் வாக்கெடுப்பில் கலக்காமல் தன்னை கைவிட்டதை மறைத்து, பச்சைக்கட்சியை ஒரு பிடிபிடித்து அரசியல் பண்ணி அனுதாபம் தேடிப் போட்டார். பச்சைக்கட்சி எதிர்த்ததின் நோக்கம் இனவாதமல்ல என்று வெளியான அறிக்கையை பிரசுரித்த தமிழ்ப் பத்திரிகையை அவரது வட்டாரம் செல்லமாகக் கண்டித்ததாம். "அந்த அறிக்கையை ஏன் போட்டீர்கள்?" என்று கேட்கப்பட்டதாம்.*

**இந்தவாரப் பொன்மொழி**

**"எதிர்காலத்தை திட்டமிடுங்கள்!
உங்கள் வாழ்க்கையில்
மீதமுள்ள காலம் அதுதான்!"**



படிப்பகம்

www.padippakam.com



# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# மனித உறுப்புகள் சூறை!

# புலியான அவுஸ்திரேலிய பெண்மணி

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம். அவரது பாரியார் அடேல் பாலசிங்கம்.

அன்ரன் பாலசிங்கமும், அவரும் காதலித்து கைப்பிடித்தனர். வெளிநாட்டு பெண்ணாக இருந்தும்கூட புலிகளுடன் அடேல் தன்னை இணைத்துக் கொண்டார்.

கியூபாப் புரட்சியில் அர்ஜென்டினா நாட்டவரான சேகுவேரா பங்குகொண்டு முக்கிய பொறுப்பில் இருந்தார்.

பின்னர் பொலிவியாவில் சேகுவேரா கெரில்லாப் போர் நடத்தியபோது கியூபா நாட்டைச் சேர்ந்த போராளிகளும் அதில் பங்கு கொண்டனர்.

இந்த முன்னுதாரணங்களுடன் இலங்கைத் தமிழர்களது போராட்டத்தில் தானும் இணைந்து கொள்ள அடேல் முன்வந்தார்.

1991ல் 'இலண்டன்' கார்டியன் பத்திரிகை நிருபர் அடேலை யாழ்ப்பாணத்தில் சந்தித்து உரையாடினார்.

வெள்ளைக்கார பெண்மணி ஒருவர் கையில் ஏ.கே.47 துப்பாக்கியுடனும், கழுத்தில் தொங்கும் சயனைட் குப்பியுடனும் காட்சியளித்ததைக் கண்ட கார்டியன் செய்தியாளருக்கு வியப்பு தாளவில்லை. தனது வியப்பை அவர் கார்டியனில் பதிவு செய்திருந்தார், இப்படி:

"விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் சிறீலங்கா இராணுவத்திடமிருந்து கைப்பற்றப்பட்ட ஏ.கே.47, எம்.16 போன்ற இயந்திரத் துப்பாக்கிகளையும் கைக்குண்டுகளையும் வைத்திருக்கின்றனர்.

மோதல்களில் தமக்கு கிடைத்துள்ள அனுபவம், தேர்ச்சி குறித்து பெருமிதம் கொள்கிறார்கள்.

கடந்த மூன்றாண்டு காலத்தில் 30 பெண் போராளிகள் பலியாகியுள்ளனர். ஒரு சந்தர்ப்பத்தில் இந்தியப் படையின் ஆட்டிலெறித் தாக்குதல் மத்தியிலும் ஆறு பெண் புலிகள் தாம் இறக்கும் வரை ஒரு முக்கியத்துவம் வாய்ந்த பாலமொன்றை காப்பாற்றுவதற்காக போராடினார்கள்.



அடேல்

இப்பெண் போராளிகளை மாவீரர்கள் என்று அறிவிக்கும் படங்கள் பல பாகங்களில் ஒட்டப்பட்டிருந்ததை காணக்கூடியதாக இருந்தது.

உயிருடன் இருக்கும் பெண் போராளிகளில் ஒருவர் அடேல் பாலசிங்கம். 40 வயதுடைய இவர் அவுஸ்திரேலியாவில் பிறந்த பிரிட்டிஷ் பிரஜை.

பார்வைக்கு மிகவும் ஒல்லியாகவும், மென்மையாகப் பேசக்கூடியவராகவும் காணப்படுகிறார்.

தமது ஓய்வு நேரங்களில் மரக்கறித் தோட்டச் செய்கையில் இன்பம் காண்பதாகக் கூறினார். ஆனால் அவருடைய தோளில் மாட்டப்பட்டிருந்த ஏ.கே. வேறு விதமான கதை சொல்வது போல் இருந்தது.

## 48 மணிநேரம்

பத்து வருடங்களுக்கு மேலாக இரத்தம் ஆறுபோல ஓடிக்கொண்டிருக்கும் யுத்தத்தில் அடேலும் ஈடுபட்டிருக்கிறார். எல்லாவித மான கஷ்டங்களையும் அனுபவித்திருக்கிறார்.

ஒரு முறை இராணுவத்திடமிருந்து தப்புவதற்காக 48 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக நெல் வயல்களுக்கூடாகவும், சேறு சகதிகளுக்கூடாகவும் ஓடியிருக்கிறார்.

சவுத் பாங்க் பொலிடெக்னிக்கில் சமூக விஞ்ஞானம் படித்துக் கொண்டிருந்தபோது விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்தார். இருவரும் காதலித்து வாழ்க்கை துணைவர்களானார்கள்.

அடேல் கூறுகிறார்; "பெரும்பான்மை இனத்தினர் தமிழ் மக்களை எப்படி நசித்து அடக்கி ஆள்கிறார்கள் என்று பாலா விபரமாக எடுத்துக் கூறினார். நிலமையை நேரில் கண்டறிவதற்காக இலங்கைக்கு வந்தேன். உண்மை நிலையைப் பார்த்ததும் புலிகளுடன் சேர்ந்துவிட்டேன்" என்று கூறுகிறார்.

மூன்று வருட காலமாக கடும் ஆயுதப் பயிற்சியை முடித்துக் கொண்ட அடேல்,




இது வரை காலமும் ஒருவரையும் கொல்லாவிட்டாலும், நிர்ப்பந்தம் ஏற்பட்டால் அப்படிச் செய்யவும் தயங்க மாட்டேன் என்கிறார்.

"கொலை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டால் அதைச் செய்யவும் தயங்கமாட்டேன். தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றெடுக்க எதைச் செய்யவும் சித்தமாக இருக்கிறேன்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக எனது உயிரை அர்ப்பணித்துள்ளேன்.

ஆரம்பகாலத்தில் ஆயுதம் தாங்குவதை விரும்பாத நான், இப்பொழுது தமிழ் மக்களை பாதுகாக்க இதுதான் ஒரே வழி என்பதை உணர்ந்து அதற்கு ஆதரவும் கொடுக்கிறேன்.

'இந்த நாடு துப்பாக்கிப் பலத்தாலேயே ஆளப்படுகிறது. சிறீலங்கா பாதுகாப்பு படைகளிடமிருந்து தமிழ் மக்களை பாதுகாக்க ஆயுதங்களை பாவிப்பதைத் தவிர, வேறு வழி ஒன்றுமில்லை.

தமிழ் பிரதேசங்கள் இரவு, பகல் என்ற வித்தியாசம் இல்லாமல் குண்டுத் தாக்குதலுக்கு உள்ளாகின்றன. சிறீலங்கா அரசாங்கம் இதனை எங்களுக்கு எதிரான யுத்தம் என்று கூறுகிறது. ஆனால் உண்மையில் இது தமிழ் இனத்துக்கு எதிரான யுத்தம்" என்று அடேல் கூறினார்.

## குண்டுமாரி

நாம் யாழ்ப்பாணத்தில் உள்ள புலிகளின் முகாம் ஒன்றில் பேசிக் கொண்டிருந்த நேரம், அருகிலிருந்த கிராமம் ஒன்றின்மீது குண்டுமாரி பொழியப்பட்டது. அப்பாவிப் பொதுமக்கள் பலர் இறந்தனர்.

ஆனாலும் சிறீலங்கா அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் எவ்வித முன்னேற்றத்தையும் அடையவில்லை.

ஆயுதப் போராட்டத்தில் பெண்கள் ஈடுபடுவதை ஊக்கப்படுத்துகிறார் அடேல். "பெண்கள் நேரடியாகப் பங்குபற்றுவதை முக்கியமாகக் கருதுகிறேன் ஏனென்றால் கஷ்டங்கள் வரும் போது அவர்களும் சரிசமமாகப் பாதிக்கப்படுகிறார்கள்" என்று அவர் கூறுகிறார்.

"முகாமுக்கு முகாம், ஒரு மறைவிடத்திலிருந்து அடுத்த மறைவிடம் என்று மாறி மாறி வாழ்க்கை நடத்தும் என்னைப் பார்த்து, சில தமிழ்ச் சகோதரிகள்கூட, நான் எதற்காக இப்படிக் கஷ்டப்படுகிறேன் என்று நினைக்கக் கூடும் என்று கூறும் அடேலைப் பார்க்கும் போது, ஈழத்தை தமது தாயகமாக ஏற்றுக் கொண்டுவிட்டார் என்பது புலனாகிறது.

தமிழை நன்றாகப் பேசுகிறார். தமது பெற்றோர் தமது நிலைப்பாட்டை புரிந்து கொள்வார்கள் என்று நம்பிக்கை தெரிவித்த அடேல், 'இனிமேல் மேற்கு நாடுகளுக்கு போகப் போவதில்லை' என்று கூறுகிறார்.

"தமிழ் சமுதாயத்திற்கு நான் எவ்வளவு தேவைப்படுகிறேனோ, அதைப்போல எனக்கும் அவர்கள் தேவைப்படுகிறார்கள். கெரில்லா வாழ்க்கை நடத்தவும், தமிழ் மக்களின் இலட்சியத்திற்காக எனது உயிரைக் கொடுக்கவும் நான் தயார்" என்று தனது தோளில் மாட்டப்பட்டிருந்த ஏ.கே. 47ஐ சரி செய்து கொண்டார் அடேல்.

## அதிர்ச்சியான தகவல்

1991 மார்ச் மாதமளவில் வெளியான தகவல் ஒன்று அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

மனித உறுப்புக்களை சூறையாடி ஜப்பானுக்கு அனுப்புகிறார்கள். உலகிலேயே மனித உறுப்புக்களை சூறையாடும் ஊழல் நிறைந்த நாடாக இலங்கை மாறிவருகிறது. இலங்கையில் நடைபெறும் ஊழல்களிலும் இதுதான் முதலாவது பெரும் ஊழல் என்று அத் தகவல் கூறியது.

இதனை ஆய்வு செய்ய தலைசிறந்த புலனாய்வு நிருபரும் ஜப்பானியருமான அக்கியோ நகஜீமா கொழும்பு வந்தார்.

சிறுநீரகம், கண்கள் போன்ற உறுப்புக்களை கடத்துவதற்கு தரகராக உள்ளவர்கள் யார்? இந்த மாபெரும் அநீதிக்கு துணை போகிறவர்கள் யார் என்பனவற்றை கண்டறிய முற்பட்டார்.

அவர் கண்டறிந்த விஷயங்கள் அனைவரையும் திடுக்கிட வைத்தது.

நகஜீமாவின் அறிக்கை 'மைனிசி சிம்பன்' (MAINICHI SHIMBUN) என்னும் ஜப்பானிய சஞ்சிகையில் வெளியானது.

அதன் ஆங்கில மொழி பெயர்ப்பு ஆசிய பவுண்டேசன் என்னும் ஸ்தாபனத்தால் வெளியிடப்பட்டு, அமெரிக்கப் பத்திரிகையான சான் பிரான்சிஸ்கோ எக்சாமினரிலும் வெளிவந்துள்ளது.

## சந்தேகங்கள்

சிறீலங்காவில் மனித உறுப்புக்கள் கறுப்புச் சந்தையில் விற்கப்படுகின்றன. பிற நாடுகளுக்கு கடத்தப்படுகின்றன என்ற செய்தி பல சந்தேகங்களுக்கு இடமளித்தது.

ஜே.வி.பிக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் கொல்லப்பட்டோரின் உடல்கள் உடனுக்குடன் டயர் போட்டு எரிக்கப்பட்டது ஏன்?

வீதிகளில் தலையில்லாமல் கிடந்த உடல்களில் கண்கள் சூறையாடப்பட்டனவா? போன்ற சந்தேகங்கள் எழுந்தன.

ஜப்பானிய புலனாய்வு நிருபரும் தனது தகவலில் அதனை கோடிட்டுக் காட்டியிருந்தார்.

புலனாய்வு நிருபரான நகஜீமாவின் நண்பரான ஷிமாமோடா என்னும் ஜப்பானியர் கொழும்பில் தங்கியிருந்தார்.

ஜப்பானிய வெளிநாட்டு கூட்டுறவு சேவையாளராக அவர் பணிபுரிந்தார். தனது பணியின் நிமித்தம் அடிக்கடி விமான நிலையம் சென்று வருபவர் அவர்.

அந்த ஜப்பானியர் நிருபர் நகஜீமாவிடம் பின்வருமாறு கூறினார்:

"ஒவ்வொரு நாளும் காலையில் கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கும் கொழும்புக்கும் இடையிலான சாலையில் 20 முதல் 30 வரையிலான பிணங்கள் காணப்பட்டன.

அந்தப் பிணங்களில் தலைகள் இல்லாமலும், அரைகுறையாக எரிக்கப்பட்ட நிலையிலும் காணப்பட்டன.

இப்படியான உடல்களில் இருந்து கண் மற்றும் உள் உறுப்புக்கள் அகற்றப்பட்டு இரகசியமாக விற்கப்பட்டதாக உள்ளூர்வாசிகள் என்னிடம் தெரிவித்தனர்" என அவர் கூறினார்.



இதனையடுத்து கிழக்கு மாகாணத்தில் வந்தாறுமூலை அகதி முகாமில் கைதாகி காணாமல் போனோர் உட்பட, கிழக்கில் காணாமல் போன பல நூற்றுக் கணக்கான தமிழர்களது உறுப்புக்களும் சூறையாடப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டது.

உடல் உறுப்புக்களை களவாடுவதற்காகவே பல நூற்றுக்கணக்கானோர் காணாமல் போகச் செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகமும் இன்றுவரை அப்படியே இருக்கிறது.

1991ம் ஆண்டில் ஒவ்வொரு மனித உறுப்புக்குமான விலை மூவாயிரம் அமெரிக்க டொலர்கள். இன்றைய பெறுமதி கிட்டத்தட்ட இரண்டு இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய்.

கிழக்கில் கைதானோரின் உறுப்புக்களை சூறையாடியதால்தான் உடல்களைக்கூட உடனே புதைத்தனர். பின்னர் தோண்டப்படுவது பற்றி பேசப்பட்டபோது, குழிகளைத் தோண்டி உடல்களை எடுத்து அவசரமாக எரித்தனர், என்று நம்பப்பட்டது.

இன்றைய ஆட்சியினர் பதவிக்கு வந்த பின்னர் கொழும்பில் பொல்கொட வாவிகளில் தமிழ் இளைஞர்களது பிணங்கள் மிதந்தன.

அவற்றிலும் கண்கள் தோண்டப்பட்டும், சிறுநீரகம் சிதைக்கப்பட்டும் காணப்பட்டன. கிழக்கில் காணாமல்போன சம்பவத்தில் பங்குகொண்டவர்களே இச் சம்பவத்திலும் பங்கு கொண்டனர் என்பது ஊன்றிக் கவனிக்க வேண்டிய விஷயம்.



சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு, பின்னர் மிக இரகசியமாக விடுவிக்கப்பட்டனர்.

சரியான விசாரணை நடைபெற்றிருந்தால் பல உண்மைகளை வெளிக்கொண்டு வந்திருக்கலாம்.

## எதையும் வாங்கலாம்.

ஜப்பானிய நிருபர் மேலும் சில தகவல்களை வெளியிட்டார்.

மனித உறுப்பு கடத்தலில் விவாகப் பதிவுக்காரான ஒரு பெண் செயற்பட்டு வந்தாராம்.

இப் பெண் திருமணம் என்ற போர்வையில் சிறீலங்கா பெண்களை ஜப்பானியர்களுக்கு விற்பனை செய்து வந்தாராம்.

ஜப்பானில் 30 ஆயிரம் பேர் (1991இல்) சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

உறுப்புக்கள் தானம் செய்வோரின் பற்றாக் குறையால் வருஷம் ஒன்றுக்கு 600 முதல் 700 சத்திர சிகிச்சைகளே நடைபெறுகின்றன.

இன்றைய ஜப்பானியர் பணத்தாலே எதையும் வாங்கலாம் என்பதை அறிந்துள்ளனர்.

மனித உள் உறுப்புக்களை உள்ளூரில் பிரசாரம் செய்து சேகரிப்பதிலும் பார்க்க, வறிய நாடுகளில் விலைக்கு வாங்குவது சுலபமான காரியமாகும்.

இத் தகவல் வெளியானது தொடர்பாக இலங்கை அரசு பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

## சொத்துகள் கையேற்பு

யாழ் குடாநாட்டிலிருந்து வெளிநாடு சென்றோரின் வீடுகளை புலிகள் கையேற்க ஆரம்பித்தனர்.

வெளிநாடு செல்வோர் தமது வீடுகளை தங்களிடம் கையளித்துச் செல்லுமாறும் புலிகள் கூறினார்கள்.

வெளிநாடு சென்றோரின் வீடுகளில் குடியிருந்தவர்களிடம் புலிகளே வாடகையும் வசூலித்தனர். இயக்க நிதியாக அந்த வாடகை பெறப்பட்டது.

கையேற்கப்பட்ட வீடுகளில் கிழக்கு மாகாண உறுப்பினர்களது குடும்பத்தினர், பலியான உறுப்பினர்களது குடும்பத்தினர் ஆகியோர் குடியமர்த்தப்பட்டனர்.

வெளிநாடுகளுக்கு சென்றோரின் வீடுகளை தாம் கையேற்றது தொடர்பாக புலிகள் விளக்கம் ஒன்றை வெளியிட்டனர்.

"வெளிநாடு சென்றவர்களது அசையும், அசையாத சொத்துக்களை நாம் சுவீகரிக்கவில்லை.

சொத்துக்களின் மேலுள்ள உரிமை பறிக்கப்பட்டு, பறித்தவரின் கையில் போய்ச் சேருவதே சுவீகரிப்பு எனப்படும்.

இங்கு நடப்பது சுவீகரிப்பல்ல. குடும்பம் முழுவதுமாக வெளிநாடு சென்றவர்களது சொத்துக்களை வாடகையோ, குத்தகையோ இன்றி புலிகள் பயன்படுத்தி வருவர். சொத்துக்குரியவர்கள் இங்கு மீண்டும் வந்து அதைக் கோரும்போது அச் சொத்துக்கள் திரும்பவும் கையளிக்கப்படும்.

நாட்டின் நலனையும், அகதிகள் நலனையும், எமது இயக்கத்தின் தேவையை கருதியும் ஆக்கப்பட்ட ஒரு சட்டம்தான் இந்த கையேற்பு நடவடிக்கையாகும். இது சுவீகரிப்புச் சட்டமல்ல.

கிழக்கு மாகாண அகதிகள் பாடசாலைகளிலும், கோவில்களிலும் தங்கியிருக்கின்றனர். அவர்கள் இந்த வீடுகளில் தங்கியிருப்பதால் பாதகம் எதுவும் இல்லை.

ஆள் இல்லாத வீட்டையும், வளவையும் சண்டித்தனக்காரர்களும், கபடப் பேர்வழிகளும் தமதாக்கிக்கொள்வதைவிட, நம்மிடம் வீடுகள் இருப்பதால் எந்தப் பாதிப்பும் ஏற்படமாட்டாது." என்று புலிகள் கூறியிருந்தனர்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

## இலங்கை இனப்பிரச்சனை

# சோனியா என்ன செய்யலாம்?

அலசுவது– இராஜதந்திரி

இந்தியாவில் சோனியா அலை வீசத்தொடங்கியுள்ளது. பொதுத்தேர்தல் ஒன்று நடைபெறுமானால், சோனியா தலைமையிலான காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைக்கக்கூடிய அறிகுறிகளே தென்படுகின்றன.

பாரதிய ஜனதா கட்சி காங்கிரசுக்கு மாற்றாக அமையும் என்று மக்களிடையே ஏற்பட்ட எதிர்பார்ப்புக்களை வாஜ்பேயி அரசு நிறைவேற்றத் தவறியுள்ளது.

அதன் கூட்டணிக் கட்சிகளால் பாரதிய ஜனதாவின் செல்வாக்கு சரிந்து தரைமட்டமாகியுள்ளது.

சமீபத்திய சட்டசபைத் தேர்தல் முடிவுகள் காங்கிரஸ் கட்சி மறுபடி உயிர்த்தெழுந்து வருவதை எடுத்துக்காட்டியுள்ளன. சோனியாவின் தலைமையில் அக்கட்சி இழந்த கோட்டைகளை கைப்பற்றத் தொடங்கியுள்ளது.

ஏதாவது அதிசயம் நிகழ்ந்தால் தவிர, இனிமேல் பாரதிய ஜனதா அரசு உயிர்தெழுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படவில்லை.

இந்நிலையில் பாரதத்தின் பிரதமராக இத்தாலியப் பெண்மணியான சோனியா காந்தி பிரதமராகும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்பது உறுதியாகியுள்ளது.

சோனியாவின் எழுச்சியும், காங்கிரசின் உயிர்தெழுகையும் நம் இனப்பிரச்சனை விவகாரத்தில் ஏற்படுத்தப்போகும் தாக்கங்கள் எவ்வாறானதாக இருக்கப் போகின்றன? என்ற கேள்வியும் கூடவே எழுகிறது.

தன் கணவரது புகழைக் காக்கவும், நேரு குடும்ப பெருமையைக் காக்கவுமே சோனியா காந்தி அரசியலில் காலடி எடுத்து வைத்துள்ளார்.

காங்கிரஸ் கட்சி உட்பட பலரும் அவரை அரசியலில் ஈடுபடுமாறு அழைத்தபோதும் மறுத்துக் கொண்டேயிருந்தார். போர்பஸ் ஊழல் தொடர்பாக மறுபடி பிரஸ்தாபிக்கப்பட்டபோதே தன் கணவரின் சார்பாக அரசியலில் குதித்திருந்தார்.

ஆகவே, சொந்த விருப்பு வெறுப்பு, தன் குடும்பம் என்பவற்றுக்கு அப்பாற்பட்ட கண்ணோட்டத்தை உடனடியாக அவரிடம் எதிர்பார்க்க இயலாது.

அவ்வகையில் இலங்கைத் தமிழர் பிரச்சனையில் சோனியாவின் அணுகுமுறைகள் இங்குள்ள தமிழ் மக்களது அபிலாசைகளுக்கும் எதிர்பார்ப்புக்களுக்கும் ஏற்றதாக அமையப்போவதில்லை.

பாரதிய ஜனதா அரசும் இன்றுவரை இலங்கைத் தமிழர் பிரச்சனையில் குறிப்பிடத்தக்க ஈடுபாட்டைக் காண்பிக்கவில்லை. எனினும் இலங்கை அரசுக்கு பாரதிய ஜனதா அரசு தொடர்பாக உள்ளூர சந்தேகம் இருந்து வருகிறது.

சோனியா பதவிக்கு வந்தால் அத்தகைய சந்தேகம் இலங்கை அரசுக்கு இல்லாமல் போகலாம்.

இலங்கை இனப்பிரச்சனையில் தலையிடுவதில்லை, புலிகளுக்கு உதவுவதில்லை என்று பாரதிய ஜனதா அரசு சில உத்தரவாதங்களை வழங்கியுள்ளதாக 'இந்து' ஆங்கிலப் பத்திரிகை தகவல் வெளியிட்டிருந்தது.

உள்நாட்டுப் பிரச்சனையில் தலையிடமாட்டோம் என்பது பொதுவாக இராஜதந்திர ரீதியாக கூறப்படுகின்ற கூற்றேயாகும்.

ஆயினும் பாரதிய ஜனதா அரசில் பாதுகாப்பு அமைச்சராக இருப்பவர் புலிகளின் உறுதியான அனுதாபியான ஜோர்க் பெர்னான்டஸ் என்பது ஒன்றும் இரகசியமல்ல. அவர் புலிகளது அனுதாபி என்பது தெரிந்தும்தான் பாரதிய ஜனதா அரசு பாதுகாப்பு அமைச்சை அவரிடம் கையளித்தது என்பது முக்கியமான விடயமாகும்.

அதுமட்டுமன்றி வை.கோவுக்கு அமைச்சுப் பதவி கொடுக்கவும் பாரதிய ஜனதா முன்வந்தது. வை.கோ.அதனை ஏற்க மறுத்திருந்தார். எனினும் பாரதிய ஜனதா தலைவர்களுடன் வை.கோ.மிக நெருக்கமான உறவு கொண்டிருக்கிறார்.

அமெரிக்காவுக்கு சென்று ஐக்கிய நாடுகள் சபைவரை இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் குறித்து வை.கோ. எடுத்துக் கூறியிருக்கிறார்.

இன்று வன்னிக்கு நிவாரண வெட்டை அரசு தளர்த்தியுள்ளதற்கும் வை.கோவின் ஐ.நா.சபைக்கான விஜயமும் ஒரு காரணம் என்று கூறலாம். உலக அரங்கில் வன்னி அவலம் அம்பலமாகி வருவதாலேயே இலங்கை அரசு தனது தடையைத் தளர்த்த முன்வந்தது.

வை.கோ.வின் ஐ.நா பயணத்திற்கு பாரதிய ஜனதா அரசின் மறைமுகமான ஆதரவும் இருந்திருக்கிறது.

பாரதிய ஜனதாவின் கூட்டாளியான ஜெயலலிதா தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் அதிகரித்துவிட்டதாக கூறி வருகிறார். தி.மு.க. ஆட்சியை கலைப்பதற்காக பொய்யான காரணம் ஒன்றை அவர் ஜோடித்து வருகிறார்.



எனினும் பாரதிய ஜனதா கட்சியினர் அவரது கருத்தை ஏற்கவில்லை என்பதும், அவருடன் இணைந்து அவ்வாறான கதை கட்டுவதற்கு ஒத்துழைக்க முன்வரவில்லை என்பதும் உற்று நோக்கத்தக்கதாகும்.

எனவே, விடுதலைப் புலிகளுக்கு உதவாவிட்டாலும், அவர்களுக்கு விரோதமான எண்ணம் எதனையும் பாரதிய ஜனதா கட்சியோ, அதன் ஆட்சியோ கொண்டிருக்கவில்லை.

இலங்கை இனப்பிரச்சனை தீர்வுக்கு வேறு நாடுகள் உதவி செய்வதற்கு இந்தியா குறுக்கே நிற்காது என்றும் பாதுகாப்பமைச்சர் ஜோர்ஜ் பெர்னான்டோ கூறியிருந்தார்.

அவ்வாறு கூறியதானது, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு சாதகமாக இந்திய அரசு மறைமுகமாக காட்டிய பச்சைக் கொடியேயாகும்.

இலங்கை இனப்பிரச்சனையில் உதவி செய்யாவிட்டாலும் உபத்திரவம் செய்யாமல் இருக்கும் அரசாகவே பாரதிய ஜனதா அரசு விளங்குகிறது.

நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சியும், பின்னர் வந்த தேவகௌடா, மற்றும் குஜ்ரால் தலைமையிலான அரசுகளும் இலங்கை அரசுக்கு மறைமுகமாக உதவியும் வந்தன.

பாக்குநீரிணையில் இலங்கை கடற்படையுடன் கூட்டாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபட நரசிம்மராவ் தலைமையிலான அரசு முன்வந்திருந்தது.

புலிகளின் முக்கிய பிரமுகரான கிட்டு பயணம் செய்த 'டொங் நோவா' கப்பலையும் 1993 இல் இந்திய கடற்படை வழிமறித்தது. கிட்டு உட்பட பத்துப் புலிகள் கப்பலையும் தகர்த்து தாமும் பலியானார்கள்.

14.02.1996ல் புலிகளின் ஆயுதக் கப்பலான 'ஹொரிசோன்' முல்லைக்கடற் பகுதியில் வைத்து தாக்கியழிக்கப்பட்டது. இக்கப்பல் தொடர்பாக தகவல் கொடுத்ததுடன், தாக்குதல் நடத்தவும் இந்தியக் கடற்படையினர் உதவியிருந்தனர்.

இவ்வாறான உதவிகள் பாரதிய ஜனதா அரசினால் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

உள்நாட்டு அரசியல் ஊசலாட்டத்தால் தன்னை பாதுகாப்பதே பெரும்பாடாகிவிட்ட நிலையில், இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக பாரதிய ஜனதா அரசால் வெளிப்படையானதும், தெளிவானதுமான நிலைப்பாட்டை எடுக்கமுடியாமல் போய்விட்டது. ஆயினும் இலங்கைத் தமிழ் மக்களது அபிலாசைகளுக்கு மாறான அணுகுமுறை எதனையும் மேற்கொள்ளவில்லை.

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சனைகள் பற்றி நன்கறிந்தவர்களும், அனுதாபிகளும் பாரதிய ஜனதா அரசுக்குள்ளும் அதன் நட்புச் சக்திகள் என்ற வட்டத்திற்குள்ளும் இருப்பதால் பாரதிய ஜனதா அரசு இலங்கை அரசுக்கு எவ்வகையிலும் உதவ முன்வரப்போவதில்லை.

எனவே, இந்தியாவில் பாரதிய ஜனதா ஆட்சி தொடர்வதே இலங்கைத் தமிழ் மக்களுக்கு சாதகமானதாகும். ஆனால் இந்திய அரசியல் களத்தில் பாரதிய ஜனதா அரசு ஆட்டம் காணத் தொடங்கிவிட்டது.

காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை அக் கட்சியின் தலைவியும், முன்னாள் பிரதமருமான இந்திரா காந்தி தவிர வேறு எவருமே இலங்கைப் பிரச்சனையில் பரிவான கண்ணோட்டத்தை கொண்டிருக்கவில்லை.

எனினும் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆட்சியில் இருந்த காலத்தில் அவருடன் இந்திரா காந்தியும் நல்லுறவையே கொண்டிருந்தார். அக் காலகட்டத்தில் தமிழ் மக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட ஒடுக்குமுறைகள் தொடர்பாக இந்திரா அம்மையாரும் கவனம் செலுத்தவில்லை.

1983 இனக்கலவரம், தமிழக மக்களின் எழுச்சி, இந்தியாவில் அடைக்கலம் புகுந்த அகதிகள் போன்ற காரணங்களாலும், ஜே.ஆரின் அமெரிக்க சார்பு போன்ற இந்திய நலனுக்கு பாதகமான நிலைப்பாடுகளுமே இந்திராவும், இந்திய அரசும் இலங்கைத் தமிழர் பிரச்சனையில் தலையிடும் நிர்ப்பந்தத்தை உருவாக்கியிருந்தன.

அவ்வாறான நிலையில்கூட காங்கிரஸ் கட்சியில் உள்ள தமிழக தலைவர்கள்கூட இலங்கைத் தமிழர் பிரச்சனையில் உணர்வுபூர்வமான ஈடுபாட்டை காண்பிக்கவில்லை.

காங்கிரசின் இலங்கை தொடர்பான நிலைப்பாடு அக் கட்சிக்கு யார் தலைவராக இருக்கிறாரோ அவரால் மட்டுமே தீர்மானிக்கப்படும் ஒன்றாகவே அமைந்து வந்துள்ளது.

ஆகவே, சோனியாவால் வகுக்கப்படும் இலங்கை தொடர்பான நிலைப்பாடு, ராஜீவ் காந்தியின் மனைவி என்ற நிலையில் இருந்து வகுக்கப்படும் நிலைப்பாடாகவே இருக்கும்.

அதனால், நரசிம்மராவ் ஆட்சிக் காலம்போல இலங்கை அரசுக்கு மறைமுகமான உதவிகள் கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கும்.

எனினும் பகிரங்கமாக இலங்கை அரசுக்கு சோனியாவும் ஆதரவு தெரிவிக்க இயலாது. இலங்கை அரசின் இராணுவத்தீர்வு முனைப்புகளுக்கு பச்சைக்கொடி காண்பிக்கவும் இயலாது.

இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் கண்டிக்க ஆரம்பித்துள்ளன.

சமீபத்தில் அமெரிக்க காங்கிரசின் மனித உரிமைக்கான குழுவும் தவிர்க்க முடியாத நிலையில் கண்டிக்கும் அளவுக்கு இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் வெளிப்பட்டு வருகின்றன.

தென்னாபிரிக்கா உட்பட பிரிட்டன் போன்ற நாடுகள் இனப் பிரச்சனை தீர்வுக்கு உதவவும், மத்தியஸ்தம் வகிக்கவும் முன்வந்துள்ளன.

இனப்பிரச்சனை தீர்வுக்கும், இலங்கைத்தீவில் சமாதானம் தோன்றுவதற்கும் விடுதலைப் புலிகளே தீர்க்கமான சக்திகள் என்பதையும், அவர்களை அரசியல், இராணுவ தலைமையாகவும் வெளியுலகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

இவ்வாறாக மாறிவரும் சூழ்நிலையில், புலிகளை ஒடுக்குதல் என்ற பொது வேலைத்திட்டம் வகுத்து இலங்கை அரசுடன் சோனியா இணைந்து செயற்படுவதற்கான சாத்தியங்கள் காணப்படவில்லை.

ராஜீவ்காந்தி பலியான சூட்டோடு சோனியா பதவிக்கு வந்திருந்தால், அவ்வாறான பொதுவேலைத் திட்டத்தோடு புலிகளுக்கு எதிராக இலங்கை அரசுடன் இணைந்து நின்றிருக்க முடியும்.

இன்னொரு முக்கிய விடயத்தையும் கவனித்தாக வேண்டும். தென்னாசியாவில் தளம் காணத் துடிக்கும் அமெரிக்காவுடன் இலங்கை அரசு கைகோர்த்து நிற்கிறது.

ஈராக்கை அமெரிக்காவும், பிரிட்டனும் மேலாதிக்க நோக்கத்தோடு தாக்கியதை உலக நாடுகள் பல காட்டமாக கண்டித்திருக்கின்றன.

இலங்கை அரசு மிக மென்மையான வார்த்தைகளால், மிகவும் நிதானமாக ஒரு பெயருக்காக கண்டித்திருந்தது. அந்தக் கண்டனம்கூட ஜனாதிபதி சந்திரிக்காவால் வெளியிடப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தியாவில் பிரதமர் வாஜ்பேயி நேரடியாக கண்டித்ததுடன், சோனியாவும் காங்கிரஸ் கட்சியினரும் எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டமும் நடத்தியிருந்தனர்.

ஈராக்மீதான தாக்குதல் பரவலாக கூறுப்படுவதுபோல மோனிகா விவகாரத்தை திசை திருப்புவது மட்டுமல்ல. அவ்வாறு திசை திருப்பும் நோக்கம் கிளின்ரனுக்கு இருந்தாலும்கூட, உலகை தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரும் அமெரிக்காவின் நீண்டகால திட்டத்தின் ஒரு பகுதியாகவும் அத் தாக்குதல் அமைந்துள்ளது.

இந்தியா போன்ற நாடுகளுக்கு மறைமுகமான மிரட்டலும் இத்தாக்குதலில் அடங்கி உள்ளது.

அதேசமயம் இந்தியா போன்ற நாடுகள் தமது தற்காப்பை வலுப்படுத்தும் அவசியமும், தமது அண்டை நாடுகளில் அமெரிக்கா குந்தியிருப்பதையிட்டு விழிப்பாக இருக்க வேண்டிய தேவையும் எழுந்துள்ளது.

எனவே, இலங்கை அரசும், அமெரிக்காவும் கொண்டுள்ள நெருக்கமான உறவு இந்திய பாதுகாப்புக்கான சவால்களில் ஒன்றாகவே விளங்கப்போகிறது.

இந்த சவாலைப் புறக்கணித்து, இந்திய நலனுக்கு விரோதமாக சோனியாவால் வெளியுறவு கொள்கையை உருவாக்க முடியாது.

இலங்கை அரசும் தன் நெடுநாள் கூட்டாளியான அமெரிக்காவை கைவிட்டு இந்தியாவுடன் கைகோர்க்க இயலாது.

அவ்வாறு கைகோர்த்தால் அமெரிக்க நட்பு நாடுகளது நிதி, மற்றும் ஆயுத உதவிகள் கூட கிடைக்காமல் போய்விடும்.

என்வே, சோனியா பதவிக்கு வந்தாலும் இலங்கை அரசுடன் கைகோர்த்து செயற்படத்தக்க நிலையோ, இலங்கை இனப்பிரச்சனையில் முன்புபோல தலையிடத்தக்க சூழலோ தோன்றப்போவதில்லை.

அவ்வாறிருப்பதும் இங்குள்ள தமிழர் தரப்புக்கு சாதகமானதே. ஏனெனில் இந்திய அரசு தனது நலனின் அடைப்படையில்தான் இங்கு தலையிடும். இந்திய அரசு என்று கூறும்போது, இந்தி பேசும் அதிகாரிகள்தான் கொள்கைகளை வகுப்பார்கள்.

அந்த அதிகாரிகளுக்கு தமிழகத்தில் உள்ள தமிழர்கள்மீதும் பலதத சந்தேகம் இருக்கிறது. இலங்கைத் தமிழர்களுக்கு கிடைக்கக்கூடிய அதிகாரங்கள் தமிழ்நாடு மாநிலத்திற்கு உள்ள அதிகாரங்களைவிட அதிகமாகிவிடக்கூடாது என்றுதான் அவர்கள் கருதுவர். இங்கு அதிகாரங்களை கூடுதலாகப் பெற்றுக் கொடுத்தால் அங்கு தமிழ்நாட்டுக்கும் அதிகாரங்களை கூடுதலாக தரவேண்டியிருக்கும் என்றே நினைப்பர்.

இந்த மனப்போக்குத்தான் இந்திய-இலங்கை ஒப்பந்தம் அவசரத்தில் அள்ளித் தெளித்த கோலமாக அமைந்ததுக்கும் காரணமாகும்.

மாறாக, தென்னாபிரிக்கா போன்ற நாடுகள் மத்தியஸ்தம் வகிக்குமானால் இத்தகைய மனப்போக்கு எழுவதற்கு இடமில்லை.

இந்தியாவையும் பகைத்துக் கொள்ளாமல், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளின் மத்தியஸ்தத்தை பெறுவதற்கே தமிழ் பேசும் தரப்பு முயற்சிக்கவேண்டும்.

ஏனெனில், இலங்கையில் யுத்தத்தை சாக்காக வைத்து அமெரிக்கா மூக்கை நீட்டாமல் இருக்கவேண்டுமானால், இங்கு அமைதி தோன்றுவது முக்கியமானதாகும். இந்தியா அதனைச் செய்யக்கூடிய சூழல் இல்லை.

சோனியா மத்திஸ்தம் வகிப்பதானால் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் அவர் சந்தித்து பேசியாக வேண்டும். அது சாத்தியமில்லை. ராஜீவை தாக்கிப்பேசியவர் என்பதால் பிரேமதாசாவையே சந்திக்க மறுத்தவர் சோனியா.

ஆகவே, இந்தியாவுக்கு பாதகமில்லாத மூன்றாம் தரப்பு ஒன்றின் ஊடாக அரசியல் தீர்வு காணும் முயற்சியை சோனியாவும் ஆதரித்தேயாக வேண்டியராகிறார். ●

## சந்திக்கு வராத சங்கதிகள் — நக்கீரன்

### வாக்குறுதிக்கு வயது ஒன்று

யாழில் காணாமல் போனோர் விவகாரம் பற்றி அரசு சார்பாக தமிழ்க் கட்சிகள் கூறிய உத்தரவாதங்கள் காற்றில் பறந்துவிட்டன. இவர்களை அரசு ஏமாற்ற, இவர்கள் மக்களை ஏமாற்ற ஒரு சுற்று வட்டமாக ஏமாற்று தொடர்கிறது.

1997 டிசம்பர் மாதம் 29ம் திகதி யாழில் காணாமல் போனோரின் உறவினர்கள் ஜனாதிபதி சந்திரிக்காவை சந்தித்தனர்.

உடனடியாக விசாரணைக் கமிஷன் அமைக்கப்படும். இரண்டு மாதங்களில் முடிவு வெளியாகும் என்று ஜனாதிபதி கூறியதாக பத்திரிகைகளுக்கு காணாமல் போனோர் சங்கம் சார்பாக கூறப்பட்டது.

இந்த டிசம்பர் 29ம் திகதியுடன் அந்த வாக்குறுதிக்கு வெற்றிகரமான ஒரு வயது.

கமிஷனும் வரவில்லை. கதியும் அறியவில்லை. காணாமல் போனாரின் உறவினர்களுக்கு பிற மாவட்டங்களில் அரசால் நஷ்ட ஈடு வழங்கப்பட்டுள்ளது. அதுகூட யாழில் காணாமல் போனோரின் உறவினர்களில் ஒருவருக்குக்கூட வழங்கப்படவில்லை.

'யாழில் காணாமல் போனோர் விவகாரத்தில் உறவினர்கள் ஏமாற்றப்படுகின்றனர். இறுதியில் நஷ்டஈடுகூட கிடைக்காது' என்பதை இதே பகுதியில் நாம் கூறியிருந்தோமே. நினைவிருக்கிறதா?

எப்போது கூறினோம் தெரியுமா? 1997 டிசம்பரில் ஜனாதிபதியுடனான சந்திப்புப் பற்றி காணாமல் போனோரின் சங்கம் பத்திரிகைகளுக்கு புளுகிப் புளுகி செய்திகள் கொடுத்தபோதுதான் கூறியிருந்தோம்.

செம்மணி விவகாரத்தில் அரசு புதைகுழிகளை தோண்டாமல் இழுத்தடிக்கும். எனவே தடயங்கள் மறையும் ஆபத்து உண்டு என்பதையும் 'முரசு' மிகத் தெளிவாக கூறியது அல்லவா.

தமிழ்க் கட்சிகள் என்ன கூறின? ஜனாதிபதி இவர்களிடம் என்ன கூறினாரோ நாமறியோம். ஆனால் இக்கட்சிகள் ஜனாதிபதி உடன் தோண்டுவதாக கூறியுள்ளார். உத்தரவு பறந்திருக்கிறது என்றெல்லாம் கூறிக் கொண்டிருந்தன.

ஐந்து நாட்களுக்குள் புதைகுழிகளையும் தோண்டி, விசாரணைகளையும் முடித்திருக்கலாம். ஆனால் ஐந்து மாதங்களை மிகச் கச்சிதமாக இழுத்தடித்திருக்கிறார்கள்.

சமீபத்தில் ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெந்தியை சந்தித்தபோது, யாழ் நீதிமன்றம் இயங்கத் தொடங்கியதும் செம்மணி விசாரணைக்கு உத்தரவு பெறப்படும் என்று கூறியதாக செய்திகள் வெளியாகின.

ஜனாதிபதியின் செயலாளர் சட்டத்தை நன்கறிந்தவர். அவர் ஏன் இப்படிக் கூறவேண்டும்? யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்படும் தமிழ் இளைஞர்களை அநுராதபுரம் நீதிமன்றத்தில் நிறுத்தி சிறையில் போட முடிகிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள செம்மணி புதைகுழி விசாரணைக்கு அநுராதபுர நீதிமன்றத்தில் ஏன் அனுமதி பெற முடியாது? பெற முடியும். சட்டத்தில் இடமுண்டு. தவிர அரசு நினைத்தால் சட்டமா அதிபர் மூலம் எத்தனையோ வழி முறைகளை உருவாக்கியும் கொடுத்திருக்கலாம்.

ஆக, ஜனாதிபதியின் செயலாளர் சட்டம் தெரிந்தும்கூட, தப்பான விளக்கத்தை கொடுத்திருக்கிறாரா?

ஆரம்பம் முதலே செம்மணி விவகாரத்தில் அரசின் போக்கு சந்தேகத்தையும், அவநம்பிக்கைகளையுமே தோற்றுவித்துள்ளது.

செம்மணியில் தடயங்கள் அகற்றப்பட்டுவிட்டன. முழுச் சுத்தம் செய்யவே காலத்தை இழுத்தடிக்கின்றனர் என்று மக்கள் சந்தேகப்படுகின்றனர். தமிழ்க் கட்சிகளுக்கு மட்டும் சந்தேகம் ஏன் வரவில்லை?!

▫▫▫

தொண்டமானை எதிர்த்தால் இனவாதம். இது புதுமொழி.

இரத்தினபுரியில் தோட்டத் தமிழ் மக்களை தாக்கியது யார்? ஒரு பெண் அமைச்சர் பின்னால் நின்றார் என்றும் கூறப்பட்டது.

இரத்தினபுரி சம்பவத்திற்கு இன்றுவரை தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

பசறை தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்த விவகாரத்தில் இ.தொ.கா மீதுதான் பழிபோடப்பட்டது.

இவையெல்லாம் இனவாதம் என்பதற்குள் அடங்காதோ? சரி, போகட்டும்.

வாக்கெடுப்பில் தோல்வி கண்ட தொண்டா பதவி விலக வேண்டும் என்று அரசாங்கத்தின் முன்வரிசை அமைச்சரே பகிரங்கமாக கூறியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சிகூட பதவியை விட்டு விலகுமாறு கேட்கவில்லை. அமைச்சர் கேட்டிருக்கிறார். அதுவும் இனவாதத்தில் சேராதோ?

குறிப்பிட்ட அமைச்சர்தான் எதிர்த்தரப்பையும் உஷார்படுத்தி எதிராக வாக்களிக்கும் யோசனை சொன்னதாக கூறப்படுகிறது.

ஆனால், இ.தொ.கா. இந்த உண்மைகளை மறைத்து, மலையக மக்களுக்கு அட்டகாசமாக பூச்சுற்றுகிறது. ஆளும் அணியும் பின்னால் நின்று தூண்டிவிட்டுள்ளது.

"ராஜினாமா செய்யுமளவுக்கு இது ஒன்றும் பாரதூரமான விடயமல்ல" என்று தொண்டமான் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்துள்ளார். பின்னர் ஏன் மலையகத்தில் ஊர்வலங்கள்? வேலை நிறுத்தங்கள்?! முடியைப் பிய்க்கலாம் போலிருக்கிறது. ■

www.padippakam.com

உண்மைத் தொடர்

# அதிர் இடி 41

**கடந்தவாரம்**

**வெளிநாட்டு அமைச்சராக மைக்கேல் ஒண்டேகா என்பவரை நியமிக்கிறான் இடி அமீன். பின்னர் அவரை பதவியில் இருந்து விரட்ட நினைக்கிறான். மைக்கேல் தனது பாதுகாப்புக்கு தனியான ஆட்களை நியமிக்கிறார்.**

**இனி....**

# இடி அமீன்

மைக்கேலின் மெய்க்காப்பாளர்களில் ஒருவர் திடீரென்று காணாமல்போய் விட்டார்.

பணி முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த அமீனின் ஆட்கள் குண்டுக் கட்டாகத் தூக்கிக் கடத்திச் சென்றனர்.

**"சொர்க்கத்துக்கு அனுப்பி வையுங்கள்!"** என்று அமீன் கூறிவிட்டான்.

மைக்கேல் தன் மெய்க்காப்பாளரை கண்டுபிடித்துத் தருமாறு அமீனிடம் புகார் செய்தார்.

அமீன் சிரித்தான். வஞ்சகச் சிரிப்பு என்பதன் அர்த்தத்தை அன்றுதான் மைக்கேல் தன் கண்களால் கண்டார்.

**"மெய்க்காப்பாளருக்கே பாதுகாப்பாளர் தேவைப்படுகிறது. நாடு கெட்டுப் போய்விட்டது. இது எதிரிகளின் சதி முயற்சிதான்!"** என்று படபடவென்று பேசினான்.

"நான் அப்படி நினைக்கவில்லை" என்றார் மைக்கேல்.

**"வேறெப்படி நினைக்கிறீர்?"** என்றான் குரலை உயர்த்தி.

மைக்கேல் சமாளித்து, "தீர விசாரித்தால்தானே தங்களுக்கு உண்மை புரியும். தாங்கள்தான் இதில் தலையிடவேண்டும்" என்றார்.

**"ஜனாதிபதிக்கு வேறு வேலை எதுவும் இல்லை என்று நினைத்துவிட்டீரா?"** என்று அதட்டலாக கேட்டவன், மறு நொடியே இடியெனச் சிரித்து; "சும்மா தமாஷ் பண்ணினேன், பயந்து விட்டீரா? தேடிக் கண்டுபிடிக்க வேண்டியது என் பொறுப்பு" என்றவன், விடை கொடுக்கும் போது சொன்னான்;

**"உங்கள் மனைவியை விசாரித்ததாக கூறுங்கள்"**

மைக்கேல் சென்ற பின்னர் அமீனின் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளர் அவசரமாக உள்ளே வந்தார்.

**"என்ன யாராவது அமைச்சர்கள் தப்பியோடி விட்டார்களா? அதுதான் இராணுவ அதிகாரிகளையும் அமைச்சர்களாக போட்டிருக்கிறேனே. அவர்களுமா ஓடுகிறார்கள்?"** என்று கேலியாக கேட்டான் அமீன்

"ஓடவில்லை. உள்ளிருந்தே சூழ்ச்சி செய்வதாகத் தகவல்!" என்றார் புலனாய்வுப் பொறுப்பாளர்.

**"அதாவது துரோகம் செய்கிறார்கள். மன்னிக்க முடியாத குற்றமாயிற்றே"** என்றவன் அவர்களது பெயர்களைக் கேட்டான்.

எரிநாயோ ஒலியெமா, மற்றும் சாள்ஸ் ஒபோத் ஒ.:.பும்மி ஆகியோரின் பெயர்களைக் கூறினார் புலனாய்வு பொறுப்பதிகாரி.

சகல அமைச்சர்களது தொலைபேசிகளையும் ஒட்டுக் கேட்குமாறு புலனாய்வு பிரிவினருக்கு அமீன் கூறியிருந்தான்.

தேவைப்பட்டால் அமைச்சர்களை பின் தொடர்ந்து தகவல்கள் பெறவும் அதிகாரம் அளித்திருந்தான்.

தொலைபேசியில் சந்தேகப்படும்படி சங்கேத வார்த்தைகளை உபயோகித்து பேசினார்கள்.

இலண்டனிலிருந்து தொலைபேசி அழைப்புக்கள் அடிக்கடி வந்திருக்கின்றன போன்ற விபரங்கள் இரண்டு அமைச்சர்கள் தொடர்பாகவும் சேகரிக்கப்பட்டிருந்தன.

**"ஓ. அப்படிப் போகிறதா கதை. இலண்டனில் இருந்து வீசிய தூண்டிலில் இந்த மீன்கள் இரண்டும் சிக்கிவிட்டதா? அப்படியானால் பிடித்து கறியாக்கிவிட வேண்டியதுதான். தூண்டிலில் சிக்கிய மீன்களை அதிகநாள் விட்டு வைத்தால் செத்து நாறிப்போகும். சுற்றாடல் கெட்டுப்போகும். அதனால்...."** என்று நிறுத்தி தன் வழக்கமான சிரிப்பை உதிர்த்தான்.

குறிப்பை புரிந்துகொண்ட புலனாய்வுப் பொறுப்பாளர் கேட்டார்: "எப்போது அவர்களை இலண்டனுக்கே அனுப்புவது?"



அந்த இருவரையும் தீர்த்துக் கட்டுவதற்கு 'இலண்டனுக்கு அனுப்புதல்' என்று குறிப்பிட்டது அமீனுக்கு பிடித்தமாக இருந்தது.

அதனால் புலனாய்வுப் பொறுப்பாளரை பாராட்டுவது போல புன்னகைத்தபடியே; **"நான் சொல்லும்போது விசா கொடுத்தால் போதும்"** என்று சிரித்தான்.

மறுநாள் அமீன் செய்த செயலால் புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளருக்கே குழப்பம் வந்துவிட்டது.

உகண்டாவின் அசோலி இனத்தின் பாரம்பரிய நடனம் ஒடோல் நடனம் என்றழைக்கப்படும்.

அந்த நடனமாடுவதில் அமீனுக்கு விருப்பம் இருந்தது. அந்த நடன நிகழ்ச்சிக்கு அமீனால் அழைக்கப்பட்டவர்களில் புலனாய்வுப் பிரிவால் குற்றம் சாட்டப்பட்ட இரண்டு அமைச்சர்களும் இருந்தனர்.

அவர்களும் அமீனுடன் இணைந்து நடனமாடினர். அவர்களுடன் சந்தோசமாகப் பேசி ஜோக்கெல்லாம் அடித்தான் அமீன்.

அமீனும் அவனது அமைச்சர்கள் இருவர் உட்பட முக்கிய இராணுவ அதிகாரிகளும் நடனமாடிய காட்சிகள் மறுநாளே பத்திரிகைகளில் வெளியாகின.

அமீனுக்கு வேண்டப்பட்ட பத்திரிகையாளர்கள் சிலர் இருந்தனர். அதேபோல சில பிரசாரகர்களும் இருந்தனர். அவர்கள் அமீனின் ஆட்கள் என்பது சாதாரண மக்களுக்கு தெரியாது.

குறிப்பிட்ட இரண்டு அமைச்சர்களுக்கும் மேலும் சில புதிய பொறுப்புக்கள் வழங்கப்பட உள்ளதாக பத்திரிகை ஒன்றில் ஊகம் வெளியானது. அவர்கள் இருவரும் அமீனுக்கு நெருக்கமானவர்கள் என்பதற்கு அடையாளமாக, அமீனுடன் நடனமாடிய படத்தையும் அப்பத்திரிகை பிரசுரித்திருந்தது. இது அமீனின் ஏற்பாடு.

புலனாய்வுப் பொறுப்பாளருக்கு தலையே வெடித்துவிடும் போலிருந்தது. அமீனிடம் சென்று சங்கடமாக நெளிந்துகொண்டிருந்தார்.

**"ஏன் வளைந்து நெளிகிறீர், கேட்க வந்ததைக் கேட்கலாம்"** என்று அமீன் கூறிய பின்னரும், அவர் தயங்க, அமீனே;

**"சதி செய்வதாக நீர் சுட்டிக்காட்டிய அமைச்சர்களுடனேயே குலாவுகிறேனே ஏன்? அதுதானே உமது சந்தேகம்?"** என்று கேட்டான்.

"ஆம்" என்றார் தயக்கமான குரலில்.

அமீன் கட கட வென்று சிரித்தான். அவரது அறியாமை அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. தனது தந்திரம் பற்றி தனக்குள்ளேயே மெச்சிக்கொண்டான்.

**"வெட்டப்படப்போகும் ஆட்டுக்கு விழா எடுத்திருக்கிறேன். பாவம், அவர்கள் சாகப் போகிறார்கள். அமீனின் வெறுப்பால் சாகமாட்டார்கள். விபத்தில் சாகப்போகிறார்கள்!"** என்றுவிட்டு சிரித்தபோதுதான் புலனாய்வுப் பொறுப்பாளருக்கு நிம்மதியே வந்தது.

தன் ஆய்வில் சந்தேகப்பட்டு ஆய்வுக்கு நேர்மாறாக அந்த அமைச்சர்களை அமீன் தட்டிக் கொடுக்கிறானோ என்ற சந்தேகம் தீர்ந்ததால் ஏற்பட்ட நிம்மதி அது.

**"விபத்தை உருவாக்க வேண்டியது உமது பொறுப்பு"** என்று கூறியவன், தன் நெற்றியை விரலால் தட்டிவிட்டு, **"மறந்தே போனேன். பிஷப்பாண்டவர் பற்றி ஒரு அறிக்கை அனுப்பிவைத்தாய் அல்லவா?"**

"ஆம். அவர் தனது பிரசங்கத்திலும் துணிந்தும், துடுக்காகவும் தங்களை குறைகூற தொடங்கிவிட்டதாக தகவல்."

**"பிஷப்பாண்டவர், விரைவில் மாண்டவராகப் போகிறார். ஏன் இப்படிச் செய்தால் என்ன?"**

எப்படி என்பதுபோல கண்களை விரித்த புலனாய்வுப் பொறுப்பாளரிடம் அமீன் கூறினான்: "அந்த இரண்டு அமைச்சர்களும், பிஷப் பாண்டவரும் ஒரே வாகனத்தில் பயணம் செய்தபோது, வாகனம் விபத்தாகிவிட்டது. அதனால் நாடே கலங்கக்கூடிய சோகச் சம்பவம் நிகழ்ந்துவிட்டது!" என்று குரூரமாகச் சிரித்தான் அமீன்.

மறுநாளே இரவோடு இரவாக பிஷப்பாண்டவரும், இரு அமைச்சர்களும் கடத்திச் செல்லப்பட்டனர்.

தனியான இடம் ஒன்றில் அவர்களை கட்டி வைத்தனர். சுட்டுக் கொல்ல முன்னர் பிஷப்பாண்டவருடன் அமீன் தொலைத் தொடர்பு கருவி மூலம் பேசினான்.

**"எல்லாம் வல்ல ஆண்டவன் உங்களை ரட்சிப்பான் என்ற நம்பிக்கையில் சுட்டுக்கொல்லப் போகிறோம். உங்கள் சொர்க்கப் பயணத்திற்கு என் வாழ்த்துக்கள்! பேசாமல் ஆண்டவனைப் பற்றி பக்தர்களுக்கு கூறுவதுடன் நிறுத்தியிருக்கலாம். இந்த அமீனைப் பற்றி கூறியதால், சொர்க்கத்திற்கு விரைவாகப் போகப் போகிறீர்."** என்றான்.

அமீன் அவருடன் உரையாடி முடிந்ததும், இரு அமைச்சர்களும் பிஷப்பாண்டவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இரு அமைச்சர்களுடன் மட்டும் எதுவும் பேச விரும்பவில்லை அமீன். மூவரும் சுடப்பட்டதும் அமீனுக்கு தகவல் கூறப்பட்டது.

**"நன்றாகப் பாருங்கள். மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்தாலும் இருப்பார்கள்"** என்றான்.

அன்றிரவே பத்திரிகைகளுக்கு தகவல் தரப்பட்டது. விபத்து என்று காண்பிக்க கார் ஒன்றை நொறுக்கியும் வைத்திருந்தனர்.

பிஷப்பாண்டவர் பலியான செய்தி உலகெங்கும் சந்தேகத்தை உருவாக்கியது.

பத்திரிகையாளர்களை அழைத்த அமீன், இரு அமைச்சர்களும், பிஷப்பாண்டவரும் விபத்தில் கொல்லப்பட்டனர் என்று அடித்துக் கூறினான்.

தரையில் அமர்ந்திருந்த பத்திரிகையாளர்கள் அமீன் நாற்காலியில் அமர்ந்திருந்து கூறியதை குறிப்பெடுத்தனர்.

(இடி தொடரும்)

தருவது ரசிகன்



# முத்தச் சாமியார்



இந்தியாவில் கேரள மாநிலத்தில் பெண் சாமியார் ஒருவர் பிரபலமாகி வருகிறார். இவரது அணுகு முறைதான் பிரபலத்துக்கு காரணம்.

ஆண், பெண் என்ற பேதம் இல்லாமல், தன் பக்தர்களை இறுகத் தழுவி முத்தமிடுகிறார். அப்போது அவரது வலது கை மென்மையாக பக்தர்களின் இடது கையின் தோள்பட்டையில் இருந்து கையின் அடிப் பாகம்வரை தொடர்ந்து தடவிக் கொடுக்குமாம். அப்போது பக்தியுணர்வு, மின்சார அலையாக உடலெங்கும் பாய்வதாக பக்தர்கள் கூறுகிறார்கள்.

வெள்ளையுடையில், வெள்ளைக்கல் மூக்குத்தியுடன் தோன்றும் இந்தச் சாமியார் பெயர்: மாதா அமிர்தானந்தமயி தேவி. வெளிநாடுகளிலும் இவருக்கு கிளைகள் இருக்கிறதாம்.

# ஈராக் பெண்களின் எழுச்சி

அமெரிக்காவும், பிரிட்டனும் ஈராக்மீது நடத்திய தாக்குதல் தோல்வியில் முடிந்திருக்கிறது.

ஐ.நா.சபையை மதிக்கவில்லை என்று ஈராக்கை குற்றம் சாட்டியது அமெரிக்கா.

அதே அமெரிக்கா ஐ.நா.சபையின் அனுமதி பெறாமலும், ஐ.நா.பாதுகாப்புக் கவுன்சிலுக்கு தெரிவிக்காமலும் ஈராக்மீது தாக்குதல் நடத்தியிருக்கிறது.



ஐ.நா.சபையின் முடிவுகளை மதிக்குமாறு ஈராக்குக்கு உபதேசிக்க இனி அமெரிக்காவுக்கு தகுதி கிடையாது.

அமெரிக்காவும், பிரிட்டனும் குண்டுகளை வீசியபோதும், ஈராக் மக்கள் துணிந்து நின்றனர். ஈராக் பெண்களின் ஆவேசம் தான் அனைவரையும் பிரமிக்கச் செய்தது.

குண்டு வீச்சுக்கள் மத்தியிலும் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். "ஒரு சதாம் இல்லையானால் நூறு சதாம்கள் உருவாகுவார்கள்" என்று ஈராக் பெண்கள் சூளுரைத்தனர்.

"நகரங்கள் அழியலாம். நாங்கள் பட்டினிகூட கிடக்கலாம். ஆனால் அமெரிக்காவின் மிரட்டலுக்கு பயந்து மானமில்லாத மக்களாக வாழ மாட்டோம்" என்று ஈராக் மக்கள் சதாம் உசேனின் பின்னால் அணி திரண்டு நிற்கின்றனர்.

தனது உறவினரை விமானக் குண்டுவீச்சில் பலி கொடுத்த பெண் ஒருவர் அமெரிக்காவை திட்டித் தீர்த்த காட்சி இங்கு காணப்படுகிறது. இவ்வாறு பல பெண்கள் ஆவேசமாக கிளர்ந்தெழுந்தனர்.

ஈராக் மக்கள்மீது குண்டுத் தாக்குதல் நடத்தினால், சதாமை மக்கள் எதிர்ப்பார்கள். அமெரிக்காவுக்கு அடிபணிந்து நடக்குமாறு கேட்பார்கள் என்று அமெரிக்கா நினைத்தது. அந்த நினைப்பு பரிதாபகரமாக தோற்றுப்போனது.

முன்பைவிட இப்போது ஈராக் மக்கள் அமெரிக்காவை அதிகமாக வெறுக்கிறார்கள். மன்னிக்கவும் மாட்டார்கள்.

# மறுபக்கம்



உலகின் மிகப் பெரும் பணக்காரராக மாறி வருகிறார் பில் கேட்ஸ். கம்பியூட்டர் துறை மூலம் ஆயிரம் கோடிகளுக்கு மேல் சம்பாதித்திருக்கிறார்.

இவரைப் போலவே வரவேண்டும் என்று இளைஞர்கள் பலர் அயராது உழைக்கிறார்கள். அமெரிக்காவில் உள்ள இவரது கம்பனியில் வேலைக்கு சேர ஆண்களும், பெண்களும் கியூவில் நிற்கின்றனர்.

சமீபத்தில் வெளியாகியுள்ள இவர் பற்றிய புத்தகம் ஒன்று வில்லங்கமான விவகாரங்களை வெளியே காட்டிவிட்டது.

'பில் கேட்ஸ் போதை மருந்துக்கு அடிமை. தினமும் ஒரு பெண் கண்டிப்பாக இவருக்கு தேவை. தொழிலில் தனது போட்டியாளர்களை எப்பாடு பட்டாவது அழித்துவிடுவார்' என்று பல்வேறு தகவல் கள் காணப்படுகின்றன.

எந்த பிரபலத்திடமும் ஒரு பலவீனம் காணப்படும். ஆனால் பில்கேட்ஸிடம் ஒன்றுக்கு மேற்பட்ட பலவீனங்கள்.

# அட்டைக்காக

வார இதழ் ஒன்று தன் அட்டைப் படத்தில் பமீலா ஆண்டர்சனை வெளியிட எண்ணியது.

'பேவாச்' படத்தில் நடித்து பலகோடி ரசிகர்களின் தூக்கத்தைத் திருடியவர்தான் பமீலா ஆண்டர்சன்.

பமீலா கேட்ட தொகை பன்னிரண்டு இலட்சம். அந்த வார இதழும் சளைக்காமல் எண்ணிக் கொடுத்திருக்கிறது.

பமீலாவிடம் அந்தளவுக்கு மோகம். அதனால் கேட்டதும் கொடுக்கிறார்கள்.



# ஹீரோ யார்?



இந்தியாவில் தொலைக்காட்சி ஒன்று இளைஞர்களிடம் கேட்ட கேள்வி, "உங்களுக்கு பிடித்தமான ஹீரோ யார்?"


பெரும்பாலான இளைஞர்களும், இளைஞிகளும் கூறிய பதில் என்ன தெரியுமா? டெண்டுல்கர் என்றா நினைக்கிறீர்கள். அல்ல. அல்ல. ஷாருக்கான்தான் அவர்களது ஹீரோ.

மான்களை வேட்டையாடி மாட்டிக் கொண்டதால் சல்மான்கான் மதிப்பு கொஞ்சம் இறங்குமுகம்.

சரி, ஷாருக்கானை ஏன் பிடிக்கிறது? டெண்டுல்கரை ஏன் பிடிக்கவில்லை? என்று கேட்டால் சட்டென்று வருகிறது பதில்; டெண்டுல்கருக்கு காதலிக்க தெரியாது. அஞ்சலியைக்கூட தவிக்கவிட்டு அடிக்கடி கிரிக்கெட் பயணம் போய்விடும் ஒருவரை எங்கள் ஹீரோவாக எப்படி நினைப்பது? இக் கேள்வியை வீசி டெண்டுல்கரை கிளீன் போல்ட்டாக்கியது இளைஞர்களல்ல. இளைஞிகள்தான்.

www.padippakam.com

# சிறுத்தைப் பாய்ச்சல்



பாருங்கள் இதுதான் சிறுத்தைப் பாய்ச்சல்: கட்டம் ஒன்று. காத்திருந்து. ஆடு வந்ததும் ஒரே பாய்ச்சல். கச்சிதமாக கழுத்தில் கப்பென்று ஒரு கௌவல். கட்டம் இரண்டு: அதனை மர உச்சிக்கு காவிச் செல்கிறது. குறி தவறாத தாக்குதல்.

விலங்குகளில் அதிவேகமாக ஓடக் கூடியது சிறுத்தை. சிறுத்தைகளில் மட்டும் 30 ரகங்கள் உள்ளன. சிறுத்தைகள் முதல் 4 மீட்டர் தூரத்திலேயே 50 கிலோமீட்டர் வேகத்தை எட்டிவிடும். அடுத்த மூன்று மீட்டரை எட்டுவதற்குள் அதன் வேகம் 90 கிலோமீட்டரைத் தொடும். 10 மீட்டர் தூரத்தை தொடும்போது அதிகபட்ச வேகமான 104 கிலோமீட்டரைத் தாண்டும். புலிக்குடும்பத்தில் அதிவேக விலங்கு சிறுத்தைதான்.

சிறுத்தைகள் அணி அணியாகவே வாழும். தனியாக வாழாது. துல்லியமான பாய்ச்சல், வேகம் என்பவற்றுடன், 35 முதல் 68 கிலோவரையான இரையை கௌவியபடி மர உச்சிக்கு செல்ல வல்லவை. இவற்றின் தோற்றமும், நடையும் கம்பீரமாக இருக்கும். தலை சிறியதாக இருக்கும். நரிபோல ஊளையிடும். சிறுத்தை அணிகளைக் கண்டால் எதிர் விலங்குகளுக்கு வயிற்றில் புளி கரைத்த மாதிரித்தான்.



# இனிமேல் பறக்காது

என்ன புதுமை செய்வது? என்று மூளையைக் கசக்கிக் கொண்டிருப்பதே சிலரது வாடிக்கை. அப்படியான ஒருவரால் உருவாக்கப்பட்ட வேடிக்கையான வீடுதான் இது.

அமெரிக்காவைச் சேர்ந்த கேம்பல் பழைய விமானம் ஒன்றை வாங்கி அதன் இறக்கைகளை கழற்றிவிட்டு, பல மாற்றங்கள் செய்து வீடாக மாற்றிவிட்டார். வித்தியாசமான விமானவீடு.

# தகவல் பெட்டி

## நீள் கூந்தல் அழகி



13ம் நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்த தமிழ், சிங்கள பெண்களுக்கு நீண்ட அடர்த்தியான கூந்தல் இருந்ததாக மகாவம்சம் கூறுகிறது. ஆனால் 13ம் நூற்றாண்டில் மட்டுமல்ல 21ம் நூற்றாண்டிலும், கூந்தல் வளர்ச்சி பெற்ற பெண்கள் இங்கும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இதற்கு உதாரணம் கொஸ்லந்தை நகருக்கு அருகாமையிலுள்ள உடுமுல்ல கிராமத்தில் வசிக்கும் திருமதி குசும் சந்திரிகா சுபரத்ன. நாகரிக வளர்ச்சிக்கேற்ப கூந்தலை குட்டையாக்கிக் கொள்ளும் இக்காலத்தில், தன் நீண்ட கூந்தலை கவனமுடன் பாதுகாத்து வருகிறார் குசும்.

ஐந்தரை அடி நீளம் கொண்ட இவரது கூந்தல் வளர்ந்ததுக்கு நவீன கூந்தல் தைலங்களோ, ஷாம்புகளோ காரணமல்ல. அவற்றை இவர் தொட்டே பார்த்ததில்லை. இயற்கையான பராமரிப்புத்தான்.

சுத்தமான தேங்காய் எண்ணெய்தான் இவர் கூந்தலின் செழிப்புக்கும், வளர்ச்சிக்கும் காரணம்.

கூந்தலை நீளமாக வளர்ப்பதற்கு இப்போது ஆண்களும் ஆசைப்படுகிறார்கள். அவர்களுக்கும் சுத்தமான தேங்காய் எண்ணெய் உபயோகப்படும்.

உலக சாதனை படைத்த நீளக் கூந்தல்காரப் பெண்மணியின் பெயர்: மாதாஜெகதாம்பா. இந்தியாவைச் சேர்ந்தவர். கூந்தல் நீளம் 21 அடி.

# கட்டழகு









உலக அழகுராணிப் போட்டிகளில் தேவையானது நளினம். மிஸ் ஒலிம்பியா போட்டிக்கு தேவையானது கடினம். இந்த ஆண்டுக்கான மிஸ் ஒலிம்பியாவின் மூன்று அட்டகாச தோற்றங்களை இங்கு காண்கிறீர்கள்.

இந்த வைர அழகிக்கு 22 வயது. செக் குடியரசைச் சேர்ந்தவர். வாயில் நுழைய கஷ்டமான பெயர்: ஜிட்சா ஹரா மோவா. இவரிடம் வாலாட்ட யாருக்குத்தான் துணிச்சல் வரும்?!

அருகிலுள்ள கட்டழகரின் பெயர் மெல்வின் அந்தனி. அமெரிக்காவில் அதிபாரப் பிரிவில் மூன்றாம் இடத்திற்கு வந்த கருங்கல் மேனியர் இருவரும் பிரமிக்க வைக்கிறார்கள் அல்லவா.



படிப்பகம்

www.padippakam.com

## காதோடு சொல்லுகிறோம்

**கோ**வையைச் சேர்ந்த நகைச்சுவை நடிகை தயாரிப்பாளர் ஒருவரின் அன்புப் பிடியில் சிக்கியிருக்கிறார். அந்தத் தயாரிப்பாளருக்கும். சமீபத்தில் விவகாரமான கசட்டுக்களுடன் மாட்டிய கும்பலுக்கும் இடையே தொடர்பு இருக்கிறதாம்.

**ந**ட்சத்திர தம்பதியின் மகள் நடித்த மூன்றாவது படம் திரைக்கு வராமல் பெட்டிக்குள் கிடக்கிறது. ஏற்கனவே வந்த இரண்டு படங்களும் தோல்வி கண்டன. அதனால் நடிகையைக் கண்டால் தயாரிப்பாளர்கள் ஓட்டம் பிடிக்கிறார்களாம். ராசியில்லாத நடிகை என்ற முத்திரையை இறுக்கி குத்திவிட்டார்கள். நட்சத்திர தம்பதி இடிந்துபோய் இருக்கிறது.

**அ**மெரிக்காவில் இருந்து திரும்பிய 'அம்' நடிகை சொந்தமாக படம் தயாரிக்கப் போகிறாராம். அதற்காக பசையுள்ள புள்ளிகளை நோக்கி வலை வீசியுள்ளாராம்.

**வெ**ற்றி காந்த நடிகரைக் காதலித்து பின்னர் காதல் தோல்வி கண்டவர் ரயில் 'ரா' நடிகை. இப்போது அவரது அமெரிக்க கணவர் சொந்த நாட்டுக்கே கம்பி நீட்டிவிட்டார். அதனால் மறுபடி 'வெற்றி காந்த' நடிகரின் தயவையும், நட்பையும் நாடியிருக்கிறார் நடிகை. நடிகரின் மனைவிக்கு தெரிந்தால் பூகம்பம்தான்.

**'மா**வீரன்' பெயர் கொண்ட நடிகரிடம் தாய்க்குலம் உதவிகேட்டால் தட்டாமல் செய்வாராம். சமீபத்தில் தனது குழந்தைக்கு மருத்துவம் பார்த்த பெண் டாக்டருக்கு 'கார்' ஒன்றைப் பரிசளித்துள்ளாராம்.

## குஷ்பு-சுந்தர் காதல் முறிவு?

தமிழக தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தனக்கு மிகவும் பிடித்தவர் கார்த்திக் என்று குஷ்பு கூறியிருந்தார்.

உங்கள் திருமணம் எப்போது? என்ற கேள்விக்கு குஷ்பு அளித்த பதில் புருவத்தை உயரச் செய்திருக்கிறது.

'திருமணம் நடந்தாலும் சந்தோசம். நடக்காவிட்டாலும் சந்தோசம்' என்ற ரீதியில் பதிலளித்தார் குஷ்பு.

இது தொடர்பாக பத்திரிகையாளர்கள் சுந்தர்.சியுடன் தொடர்பு கொண்டனர். "அப்படியா, நீங்கள் அவரிடமே கேட்டுக்குங்க தம்பி. சொந்த வாழ்க்கையை பொது மேடையாக்க நான் விரும்புவது கிடையாது!" என்று கூறினாராம் சுந்தர்.சி.

## திரையுலக மறுபக்கம் 83 முதுபெரும் இயக்குநர் கொடுத்த

**அ**ந்த இயக்குநர் இப்போது முதுபெரும் இயக்குநராகிவிட்டார். அவர் பற்றிய மறுபக்கத் தகவல்கள் நம்பமுடியாதவை. அவரா அப்படி? என்றுதான் அனைவரும் ஆச்சரியப்படுவர்.

அவரிடம் பழகிய நடிகைகளும் அவருடன் 'குரு பக்தி கொண்டிருப்பதால் அவரது மறுபக்கம் வெளியே தெரியாமல் இருந்தது. எனினும் ஒரு சில நடிகைகள் மூலம் உள் விஷயங்கள் கசிந்தும் இருக்கின்றன.

பின்னழகு எடுப்பாக உள்ள நடிகைகள் என்றால்தான் அந்த இயக்குநருக்கு பிடிக்குமாம். அவ்வாறு பார்த்தே பலருக்கு வாய்ப்பும் கொடுத்தாராம்.

அவர் அறிமுகப்படுத்திய நடிகைகளில் மூன்றெழுத்து நடிகை ஒருவர்தான் நீண்டகாலமாக இயக்குநரின் செல்ல நடிகையாக ஈடுகொடுத்தார். அந்த நடிகைக்கும் சிறப்பான கதாபாத்திரங்கள் கொடுத்து முன்னுக்கு கொண்டுவந்தார் இயக்குநர். அந்த நடிகையின் பெயரை ஆங்கிலத்தில் எழுதினால் முதல் எழுத்து 'எஸ்'.

அந்த நடிகை மட்டுமன்றி 'ஸ்ரீ'யில் ஆரம்பமாகும் நான்கெழுத்து நடிகையும் இயக்குநரின் அன்பை பெற்று அவரது ஆஸ்தான நடிகையாக இருந்தவர்தான்.

தமிழ் நாட்டில் தொலைக்காட்சியில் செய்தி வாசிக்கும் ஒரு பெண்மணி நடிகையாகவும் மாறினார். அவரை நடிகையாக மாற்றியவர் அந்த இயக்குநர்தான். இயக்குநர் எதிர்பார்க்கும் 'தகுதி' அந்த செய்தி வாசிப்பாளரிடம் இருந்தது. அதனால் இயக்குநரின் மோதிரக்கை அவர்மீது பட்டது.

இந்த இயக்குநருக்கு 'பூ' நடிகைமீதும் ஒரு கண் இருந்தது. 'பூ'நடிகை அப்போது உச்சத்தில் இருந்த நேரம்.

'பூ'நடிகையை அழைத்தார் இயக்குநர். முதுபெரும் இயக்குநர் அழைக்கிறார். நடிகைக்கு இன்ப அதிர்ச்சி.

பண்பானவர். முதியவர் என்ற மரியாதையுடன் விரைந்து போனார் நடிகை. அன்பாக வரவேற்ற இயக்குநர், வரவேற்கும் சாக்கிலேயே நடிகையை அணைத்து கன்னத்தில் முத்தமிட்டிருக்கிறார்.

முத்த இயக்குநர், எந்த விரசமும் இல்லாமல் அன்போடு முத்தமிட்டதாக நினைத்துக் கொண்டார் நடிகை.

பெரும் நடிகர் ஒருவருடன் தான் தயாரிக்கும் வாய்ப்புத் தரப் போவதாக கூறினார் இயக்குநர் கொள்ளாத மகிழ்ச்சி.

### இவரா இப்படி?

நடிகையின் மகிழ்ச்சியை மனதில் பதிவு செ இயக்குநர், பேசிக் கொண்டே, நடிகையின் பின்பு யிருக்கிறார். நடிகைக்கு பேரதிர்ச்சி. 'இவரா இப் அவரால் ஜீரணிக்க முடியவில்லை.

இயக்குநர் தன் மூக்குக் கண்ணாடியூடாக நட முகக் குறிப்பை பார்த்துவிட்டு, சுற்றி வளைக்காமல் யாகவே தன் அடி மனதில் உள்ளதை கூறியிருக்

அதிர்ச்சி ஏற்பட்டாலும் மறுக்க முடியாத நி பெரிய இயக்குநரை பகைத்துக் கொண்டால் நிலை முடியாதே. நடிகை சம்மதித்தார்.

'பூ' நடிகையுடன் முதுபெரும் இயக்குநர் அன் பாக இருக்கும் சங்கதி வெளியேயும் கசிந்தது. நடிகையே தனக்கு நெருக்கமான மேக் அப் பெண் ஒருத்தியிடம் இயக்குநரின் வக்கிரமான தொல்லைகளை கூறிப் புலம்பினார். அந்தப் பெண் மூலம் பலர் காதுக்கு விஷயம் போனது.

பிரபல சஞ்சிகை ஒன்று அந்த இயக்குநருக்கும் நடிகைக்கும் திருமணம் என்று செய்தி வெளியிட்டது. இயக்குநர் ருத்ரதாண்டவமாடினார். வழக்குப் போடுவேன் என்று மிரட்டினார்.

அந்தரங்கத்துக்கு சாட்சி இருக்காது என்ற நம்பிக்கையில்தான் அவர் மிரட்டினார். சஞ்சிகையும் வேறு வழியின்றி மன்னிப்புக் கேட்டது. ஆனால் உண்மையை சம்பந்தப்பட்ட நடிகையும், இயக்குநரும் அறிவார்கள்.

திரையுலகினரும், சினிமாப் புள்ளிகளும் பணம் படைத்தவர்கள். செல்வாக்கு வாய்ந்தவர்கள். ஆதாரமில்லாமல் தப்பு செய்வார்கள். நேரடியாக பத்திரிகைகள் சுட்டிக் காட்டினால் வழக்கு என்று மிரட்டுவார்கள். அதனால்தான் கிசு கிசு பாணியில் அவர்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களை பத்திரிகைகள் எழுதவேண்டியிருக்கிறது.



நெப்போலியன்-நக்மா
படம்: மாயா

## காமராசுவாக முரளி மறுபடி சர்ச்சையா?

முரளி நடித்த 'தேசிய கீதம்' படம் பலத்த சர்ச்சைகளை கிளப்பியது. படமும் தோல்வி. அரசியல் படம், கருணாநிதியை கிண்டல் செய்யும் படம் என்று ஏகப்பட்ட சர்ச்சைகள். இயக்குநர் சேரன் ஆடிப் போயிருக்கிறார்.

இப்போது முரளி நடிக்கும் படம் ஒன்றுக்கு சூட்டப்பட்டுள்ள பெயர்: 'காமராசு'.

தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருந்தவர் அமரர் காமராஜர். தமிழக மாநில காங்கிரஸ் கட்சியினர் 'காமராஜர் ஆட்சி அமைத்தே தீருவோம்' என்று கூறிவருகின்றனர். இதனால் தி.மு.க. ஆட்சியுடன் பிணக்குகளும் தோன்றியுள்ளன.

இந்த நேரத்தில் முரளி நடிக்கும் படத்திற்கு காமராசு என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. தி.மு.க ஆட்சிக்கு இது பிடிக்குமா? முரளிக்கு நெருக்கடிகள், தொல்லைகள் ஏற்படுமா?

காமராசு அரசியல் படமா? காதல் கதையா? என்பது தெரியவில்லை. படத்தை தயாரிப்பவர் ஆர்.பி. சௌத்திரி. 'புதுவசந்தம்', 'சூர்யவம்சம்', 'சொல்லாமலே' போன்ற வெற்றிப்படங்களை தயாரித்தவர்.

கதாநாயகி தேர்வு நடந்துவருகிறது. இயக்குநராக அறிமுகமாகிறார் பி.சி. அன்பழகன். இ[illegible] எஸ்.ஏ.ராஜ்குமார்.

## எப்போது அழகு?

புதிய கதாநாயகன் அஜய், சிவாஜி கணேசனுடன் இணைந்து நடித்துவரும் படம் 'பூப்பறிக்க வருகிறோம்'. இப்படத்தின் ஒரு பாடல் கேள்வி பதிலாக இடம் பெறுகிறது.

சூரிய நாராயணனாக நடிக்கும் சிவாஜி, தன் பேரனிடம், 'டேய் எப்பொழுது பெண்கள் அழகு?' என்று கேட்கிறார். உடனே பேரன் பாடுகிறார்: 'எட்டில் அழகு, பதினெட்டில் அழகு, எந்தப் பெண்ணுமே இருபதில் இரட்டை அழகு' என்று பாடுகிறான். எத்தனை பெரிய கண்டுபிடிப்பு?!



ரோஜா

## இவர் வருவாரா?

இங்கு எழிலா
தோற்றம் தரும் அ
ஸ்மிருதி. இந்திய அ
யாக தேர்வு செ
பட்டவர்.

விளம்பரப்
களில் நடித்
இந்த வானவ
அழகி தயா
குஞ்சமோக
மில் பட்டு
படியே அ
வந்து
படத்தி
ஆசை

வை
'கே
படத்
வரு
மோ
படத்
எபி
எபி
தால்

திப்
நடி
வந்
குள்
கள்
திரு
இ
மறு

## அ
## சிவ

தீவிபத்
சவு
இருந்த
தெரிவா
இர
இலட்ச
இது கு
சவுந்தர்
'எம்
குறைந்த

## விஜய் பாடினார் நண்பனுக்கு சிபாரிசு

விஜய்யின் தந்தையாரான எஸ்.ஏ.சந்திரசேகர் விஜயகாந்தை வைத்து இயக்கும் படம்: 'பெரிய அண்ணா'.

இப்படத்தில் இன்னொரு கதாநாயகனாக யாரைப் போடலாம் என்று சந்திரசேகர் யோசித்த போது, விஜய் உறுதியாக சிபாரிசு செய்தது சூர்யாவை. மகன் பேச்சுக்கு மறுபேச்சுண்டோ? சூர்யாதான் கதாநாயகன்.

விஜய்யும் சூர்யாவும் கல்லூரித் தோழர்கள். நேருக்கு நேர் படத்தில் இணைந்தும் நடித்தனர்.

சூர்யாவுக்கு சிபாரிசு செய்ததுடன், அவருக்காக மூன்று பாடல்களும் பாடிக் கொடுத்திருக்கிறார் விஜய். இதுவரை தனது படங்களில், தனக்காக மட்டும் பாடியவர், இப்போது தான் இன்னொரு கதாநாயகனுக்காக பாடியுள்ளார். நட்புக்குண்டோ தடுக்கும் தாழ்.

## ரோஜா தூது

ரோஜாவுக்கும் கார்த்திக்கும் இடையே ஏற்பட்ட நெருக்கத்தால், இயக்குநர் செல்வமணிக்கும் ரோஜாவுக்கும் இடையே விரிசல் ஏற்பட்டது. தற்போது ரோஜா தரப்பில் சமரச முயற்சிகள் நடக்கிறதாம்.

கார்த்திக்குடன் 'சின்னராஜா' படத்தில் படு தாராளமாக ஒட்டி நடித்துள்ளார் ரோஜா. அந்தக் காட்சிகளை புகைப் படத்தில் கண்ணுற்ற செல்வமணி சூடாகிவிட்டாராம். 'இனிமேல் என்னிடம் வராதே' என்று ரோஜாவுக்கு ஃபோனில் கூறிவிட்டாராம்.

கார்த்திக் உறவு தொடராது என்பதை தெரிந்து கொண்ட பின்னரே, ரோஜா செல்வமணியிடம் சமரச தூது விட்டிருக்கிறாராம்.

www.padippakam.com

## ...திர்ச்சி

...தில் நடிகைக்கு
...கைக்கு நிலை
...கொண்ட
...் தட்டி
...என்று
...ின்
...டி

## மூன்று நாயகர்கள்

கலைப்புலி தாணு துணிச்சலான தயாரிப்பாளர். விளம்பரம் செய்து கலக்கி படங்களை ஒடவைத்துவிடுவார்.

சமீபத்தில் அவரது மகள் திருமணம் பிரமாண்டமாக நடந்தது. வை.கோ. கட்சிக்காரரான தாணுவின் மகள் கல்யாணத்திற்கு கலைஞர் கருணாநிதியும் சென்று சோபிக்கவைத்தார்.

தாணு அடுத்து தயாரிக்கும் படத்தில் மூன்று கதாநாயகர்கள். மம்முட்டி, பிரசாந்த், சக்கரவர்த்தி. மூவருக்கும் முத்தான, சத்தான ஜோடிகள்.

மம்முட்டிக்கு மீனா, பிரசாந்த்துக்கு மனிஷா ...காய்ராலா, சக்கரவர்த்திக்கு சவுந்தர்யா. இயக்கம் ...ஜிவ்மேனன். இசை: ஏ.ஆர்.ரகுமான். பயங்கரமான ...வில் உருவாகப்போகிறது. பெயர் இன்னமும் ...ாகவில்லை.

## நக்மாவின் துணிச்சல் சரத்குமார் சீற்றம்

நெப்போலியனும் சரத்குமாரும் நடிகர் சங்க விவகாரத்தில் ஒன்றாக நின்றவர்கள். நட்சத்திர தம்பதியான விஜயகுமார் மஞ்சுளா வீட்டிற்கு ஒன்றாக சென்று வருமளவுக்கு நண்பர்கள்.

இந்த நண்பர்கள் இடையே இப்போது இடைவெளி. அதற்கு காரணம் நக்மா.

சரத்குமாரும் நக்மாவும் பிரிந்த **பின்னர்** நக்மா மும்பாய்க்கு ஒடினார். சரத்குமாரால் தன் உயிருக்கு ஆபத்து நேரலாம் என்று தமிழக முதல்வரிடம் முறையிட்டார். மும்பாயிலிருந்து திரும்பிய நக்மா இப்போது நெப்போலியனின் பாதுகாப்பில் இருக்கிறார். 'மாயா' படத்தில் அவருடன் நடிக்கிறார்.

ஒரேநாள் கவனிப்பில் நெப்போலியனை ஒரேயடியாக சரித்துவிட்டார் நக்மா. அவருக்காக சரத்தையும் பகைக்க தயாராகிவிட்டார் நெப்ஸ்.

நெப்ஸின் துணிச்சலில் சரத்குமாரைப் பற்றி கிண்டல் பண்ணிப் பேசுகிறாராம் நக்மா. அந்தரங்கமான குத்தல்களும் விடுகிறாராம். பார்ப்பதற்கு பெரிய நாட்டமைமாதிரி இருந்தா போதுமா. காரியத்தில் காட்ட வேண்டாமா?

என்று நக்மா அடித்த கிண்டலை அறிந்த சரத் வெகுண்டு நிற்கிறார்.

'அவளை சென்னைப் பக்கமே வராமல் செய்கிறேன் பார்' என்று மீசையை முறுக்கி மிருக்கிறார் சரத்.

நெப்ஸ் அசகாய சூரர். அவர் பாதுகாப்பில் எனக்குப் **பயமில்லை** என்கிறாராம் நக்மா.

**முகப்பில்:** கீர்த்தனா 'முதல் எச்சரிக்கை'
சரத்குமார் படம்: சிம்மராசி

## மினி சினி

* 'புதுமைப்பித்தன்' படத்தை இயக்கிய புதிய இயக்குநர் ஜீவா, புதிய பட வேலைகளில் இறங்கி விட்டார். இப்படத்திற்கு 'ஜங்ஷன்' என்று பெயரிட்டுள்ளார்.

* சுரேஷ் கிருஷ்ணா இயக்கத்தில் சரத்குமார் நடிக்கும் 'அருவன்' படத்தில் சரத்குமாருக்கு ஜோடியாக இந்தி நடிகை பூஜாபத்ரா நடிக்கிறார்.

* 'உன்னைத்தேடி', 'அத்தை மகன்', 'அழகர் சாமி' ஆகிய மூன்று படங்களை இயக்கி வரும் சி. சுந்தர், அடுத்து விஜயகாந்த் நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார்.

* 'ஜீன்ஸ்', 'காதல் கவிதை' ஆகிய படங்களை அடுத்து விஜய் அமிர்தராஜ் தயாரிக்கும் அடுத்த படத்திலும் பிரசாந்த்தான் நாயகன்.

* கே. பாலசந்தரின் 'கல்கி' படம் மூலம் தமிழில் அறிமுகமான கன்னட நடிகை சுருதி, அண்மையில் திருமணம் செய்துள்ளார்.

* அரவிந்தசாமி நாயகனாக நடிக்கும் 'என் ஜினியர்', படத்தில், 'மகாபிரபு', 'நிலாவே வா' போன்ற படங்களை இயக்கிய ஏ. வெங்கடேசன் முக்கிய வேடமொன்றில் நடிக்கிறார்.

* பார்த்திபன் தயாரித்து இயக்கி நடிக்கும் 'ஹவுஸ்ஃபுல்' படத்தில் சுவலட்சுமி, சுவாதி, ஐஸ்வர்யா ஆகிய மூன்று நாயகிகள் நடிக்கிறார்கள்.

* சேரன் இயக்கிய 'பொற்காலம்' தெலுங்கில் தயாராகி வருகிறது. தெலுங்கு 'பொற்காலத்திற்கு 'மாணிக்கம்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

* 'வீட்ல விசேஷங்க' படத்தில் அறிமுகமான பிரகதி, படவாய்ப்புக்களின்றி சின்னத்திரையில் தலைகாட்டினார். இப்போது 'ராஜஸ்தான்' படத்தின் மூலம் மறுபடி பெரிய திரைக்கு வந்துள்ளார்.

* ஷாலினி, ஷாமிலி ஆகியோரின் அண்ணன் ரிச்சர்ட் 'சொப்பன லோகம்' என்ற தெலுங்குப் படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமாகிறார்.



ராமராஜன்-சங்கீதா
படம்: பூமணமே வா

## 'பந்தன்' ஓட்டம்

ரம்பா இந்தியில் நடித்த 'பந்தன்' படம் பிய்த்துக்கொண்டு ஒடுகிறது. நாயகன் சல்மான்கான். இனிமேல் இந்தியிலேயே **கவனம்** செலுத்தப்போகிறாராம்.

தமிழில் தற்போது ஊதியம் 20 இலட்சம். இந்தியில் 30 இலட்சம். ஆகவே இந்தியில் கலைச்சேவையாற்ற முடிவு செய்துவிட்டாராம்.

## திருநாள் நிறுத்தம்

சத்யராஜ் நடிக்க குருதனபால் தயாரித்து இயக்கவிருந்த படம் 'திருநாள்'. இப்போது அப்படம் எடுக்கும் தீர்மானத்தை மூட்டை கட்டிப்போட்டுவிட்டார் குருதனபால்.

சத்யராஜ் நடித்த பொண்ணு வீட்டுக்காரன் திரைக்கு வராமல் பெட்டிக்குள் தூங்குகிறது. சத்யராஜ் மார்க்கெட் ஒரு நிலைக்கு வந்த பின்னர் படத்தை தொடரலாம் என்று நினைக்கிறாராம் குருதனபால்.



ஸ்மிருதி

...ங்
...ரும்
...உடல்
...ாளர்
...ார்வை
...ார். அப்
...கொண்டு
அடுத்த
...ாயகியாக்க
...கிறார்.
மகனை
தற்போது
...ஸ் வரன்'
தயாரித்து
...ர் குஞ்சு
அடுத்த
...ும் மகன்
நாயகன்.
...ிந்த அழகி
...ஜாடி.
...ருதிக்கு இந்
...ங்களிலும்
அழைப்பு
...ம். அங்
...கதாநாயகர்
...்றி அறிந்
...மையால்,
...து நடிக்க
...விட்டாராம்.

## சினி விசிட்



அஜித்குமார்-தேவயாணி
படம்: தொடரும்

## ...பா படையப்பா ...ஜிக்கு 30 இலட்சம்

படையப்பாவில் ரஜினிக்கு அப்பா சிவாஜி. ரஜினியும் இரண்டு பிள்ளைகளுக்கு அப்பா. ஒருவர் அப்பாஸ். இன்னொருவர் விஜயசாரதி. இவர் ...பலியான நடிகர் சசிகுமாரின் மகன்.

...ர்யாவுக்கு முன்னர் சிம்ரானை அழைத்தனராம். வயதான கெட்-அப்பிலும் நடிக்க வேண்டி...், சிம்ரான் தயங்கினாராம். ஆகவே மோகன்பாபுவின் பலமான சிபாரிசுடன் சவுந்தர்யா ...ாராம்.

...டாம் கட்டப் படப்பிடிப்பு டிசம்பர் 7ம் திகதி சென்னையில் ஆரம்பமாகிவிட்டது. சிவாஜிக்கு 30 ...பா ஊதியமாக கொடுக்கப்பட்டுள்ளது. ஏனைய படங்களில் சிவாஜி வாங்கிய ஊதியத்தை விட ...சல். ரஜினி படம் என்பதால் குறைத்து வாங்கினாராம். பிரகாஷ்ராஜ், மன்சூரலிகான் மற்றும் ரம்யா கிருஷ்ணன் ஆகியோருக்கும் குறைந்த சம்பளம்தான் கொடுத்திருக்கிறார் ரஜினி.

...ஆர்.தனது சொந்தப் படம் என்றால் அதிக சம்பளம் கொடுப்பார். ரஜினி தன் படங்களில் ...ம்பளம் தருகிறாரே' என்று ஒரு நடிகர் முணு முணுத்தாராம்.

## நினைவிருக்கும் வரை

பிரபுதேவாவும், கீர்த்தி ரெட்டியும் இணைந்து தூள்கிளப்பும் படம் 'நினைவிருக்கும் வரை'. தைப்பொங்கல் வெளியீடாக வருகிறது. கே.சுபாஸ் இயக்கியுள்ளார்.

'லவ் 99' படமும் 'என் உயிர் நீயம்மா' என்ற பெயரில் தமிழில் மொழிமாற்றப்பட்டு வெளியாக தயார் நிலையில் உள்ளது. இதில் பிரபுதேவாவுக்கு பலே ஜோடி ரம்பா.

## ஒத்துழைப்பாரா சங்கீதா?

நடிகர் ராமராஜன் எம்பியான பின்னர் தயாரிப்பாளர்கள் துணிந்து பணம் கொடுக்கிறார்களாம். அதனால் முன்னர் நின்றுபோன 'பூமணமே வா' படப்பிடிப்பை தொடர முடிவு செய்துள்ளாராம்.

இப்படத்தில் ராமராஜனுக்கு ஜோடி சங்கீதா. பார்த்திபனுக்கு கசப்பு ஏற்பட்ட பின்னர் ராமராஜனுடன் சங்கீதாவுக்கு நெருக்கம் ஏற்பட்டது.

தனது ராசிப்படி இரண்டாவதாக சங்கீதாவையும் திருமணம் செய்தால்தான் நல்ல காலம் பிறக்கும் என்றும் ராமராஜன் புலம்பித்திரிந்தது பழைய கதை.

இப்போது ராமராஜனுடன் சங்கீதாவுக்கு ஊடல். அதனால் நின்றுபோன படத்தில் நடித்துக் கொடுப்பாரா? என்பது தெரியவில்லை.

## டாக்டர் மாப்பிள்ளை

தனது இரண்டாவது பெண்ணையும் சினிமா தொடர்பே இல்லாத மாப்பிள்ளைக்கு திருமணம் செய்து கொடுக்கப் போகிறார் கவுண்டமணி.

டாக்டராகவோ, பொறியியலாளராகவோ மாப்பிள்ளை இருக்க வேண்டுமாம். தன்னால் மாப்பிள்ளைக்கும், அவரால் தனக்கும் மதிப்பும், பெருமையும் இருக்க வேண்டும் என்கிறாராம் கவுண்டமணி.

www.padippakam.com

# சிவில் நிருவாகம்

வட பகுதியில் சிவில் நிருவாகம்
சீராக நடக்கிறது!
திருமலையிலும் காங்கேசனிலும்
வீடு திரும்ப முடியாமல் விதியை நொந்தபடி
தாங்கள் நான்கு வருடங்களுக்குமுன்
கனவு கண்ட சமாதான தேவதையை
கூவி அழைக்கிறார்கள்! வட பகுதி மக்கள்!

அம்மா!
அன்று உன் பின்னணியில் வெண்புறாவோடு
வெளிக்கிட்ட உனக்கு
இன்று வேள்விக்கு காத்திருக்கும்
விலங்குகள்போல்
வீடு போய்ச் சேர முடியாமல்
அனாதரவாக அலையும் எங்கள்
அவலக் குரல் கேட்கிறதா?

சீருடைப் பிரதிநிதி சொல்கிறார்:
"வடபகுதியில் சிவில் நிருவாகம் சீராக
நடக்கிறது"
சிவில் நிருவாகமே
சீருடைக் கூடாரத்துக்குள்தானே நடக்கிறது!
ஏனெனில்,
நிருவாகமென்ன, நீதித்துறையே ஒரு கடிதத்தால்
ஓய்வெடுத்துக் கொள்கிறதே!

மனித உரிமைகள் பற்றிச் சொல்ல
வேண்டியதில்லை!
செம்மணியைத் தோண்டுவதிலிருந்து;
சிறைக் கைதிகள்
சுருக்கிட்டுத் தற்கொலையாவது வரை!
மனித உரிமைகள் மதிக்கப்படும் விதமே தனி!

முன்னைய ஆட்சிக் காலம் போலல்ல!
தங்கள் ஆட்சியில் படை வீரர் ஒழுக்கம்!
அது நூறு வீதம் சுத்தம்!

நீங்கள் உருவாக்கிவிட்ட
உள்ளூராட்சி சபைகள்!
இனிமேல் தாங்கள் வழங்கவிருக்கும்
படைக்கலன்களோடு
பவனிவரப் போகும் குறுநில மன்னர்களல்லவா!
இனி அவர்கள் போதும் உங்கள்
சிவில் நிருவாகத்தைச் சீர்படுத்த!
ஆயினும், அவர்களின்
வெற்றிடத்தை நிரப்ப
உள்ளூரில் ஆச்சிகளாவது
மிஞ்சியாக வேண்டும்.

குழந்தை சுவாமி, மட்டக்களப்பு.

## ஓ...நெஞ்சே மறந்துவிடு!

பிரிய சகி....
நேற்றைய
நினைவுகள்
நெஞ்சினில்
நெருப்பாய்
சுடு(தொ)டாகிறது....!
o*o
காலம் பல
காததிருந்து
பூத்திருந்து
நெருங்கி வந்த
சந்திப்பின்
சந்தோஷங்கள்
சருகாய்....
சாம்பலாய்....?
o*o
முடிந்து போன
நிமிடம் வரை
புரியாத உறவாய்
இருந்த நீ....
இனி
பிரியாத உயிராவேன்
என்கிறாய்....!
o*o
ஆனால்... இதயத்தில்
இடமிருந்தாலும்
இறுதிவரை
இணையாத
இருகரைகள்
தானே(ா)
நம்
கதையும்....?

'குறிஞ்சி நிலா' எஸ். கல்யாணி, கொழும்பு.

## தேன் கிண்ணம்



## தொலைத்து விட்டேன்!

இதயத்தை
எங்கோ
உதயமான
உதடுகளில்
தொலைத்துவிட்டு...!
•*•
கனவுகளை
அவள்
கண்களிரண்டிலும்
தொலைத்துவிட்டு....!
•*•
எண்ணங்களை
அந்த
கன்னங்களில்
தொலைத்துவிட்டு....!
•*•
வாா்த்தைகளை
அவள்
மௌனத்தில்
தொலைத்துவிட்டு....!
•*•
பற்றுக்களை
நீளும்
நெற்றியில்
தொலைத்துவிட்டு....!
•*•
காலத்தை
அவள்
நிழலிற்காய்
தொலைத்துவிட்டு....!
•*•
இன்னல்களை
புதியவளின்
பின்னலுக்குள்
தொலைத்துவிட்டு....!
•*•
என்னையே
பெண்மையில்
இலக்கணத்திடம்
தொலைத்துவிட்டு....!
•*•
இன்று
அவளையே
தொலைத்துவிட்டேன்;
காலத்தின்
கட்டாயத்தால்!

இணுவையூர் இராகுலன்.

## அந்த நாள் ஞாபகம்





தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் இளமைக்கால தோற்றம். இன்றும் இளமையுடன் பூப்பந்து விளையாடும் காட்சியும் இருக்கிறது. என்றும் சுறுசுறுப்பு. அதுதான் கலைஞர்.





கலைஞரின் மூன்றாவது மனைவி ராசாத்தி அம்மா. அவர்களது மகள் கனிமொழி. நாடகங்களில் நடித்து வந்த ராசாத்தியை காதலித்து கைப்பிடித்தார் கலைஞர்.

"'இருவர்' படத்தில் எங்கள் காதலை சற்று மிகைப்படுத்தி காட்டிவிட்டனர்" என்று கூறுகிறார் ராசாத்தி அம்மாள்.

படத்தில் சின்னக் குழந்தையாக உள்ள கனிமொழிக்கு இப்போது திருமணமாகி விட்டது. பத்திரிகை உலகில் இருந்தவர் தற்போது கணவருடன் சிங்கப்பூரில் வசிக்கிறார்.

# வீரப்ப விசாரணை

சந்தனக் கடத்தல் வீரப்பனை பிடிக்க முடியாமல் தமிழக, கர்நாடக அரசுகள் திணறுகின்றன. வீரப்பனை மோப்பம் பிடிக்க தமிழக அரசு அனுப்பிய கந்தவேலு என்ற ஒருவரை பிடித்து சமீபத்தில் சுட்டுக் கொன்றுள்ளான் வீரப்பன்.

தனது கூட்டாளியான பேபி வீரப்பனை சுட்டுக்கொன்றதும் கந்தவேலுதான் என்று கூறியிருக்கிறான் வீரப்பன்.

கந்தவேலுவுக்கு எப்படி தண்டனை வழங்கப்பட்டது என்பதை கசட்டில் பதிவு செய்து, நக்கீரன் சஞ்சிகைக்கு அனுப்பி வைத்தான் வீரப்பன்.

அவனே நீதிமன்றம் நடத்தி அவனே நீதிபதியாக (?!) இருந்து வழங்கிய தீர்ப்பு இது. கசட்டில் பதிவான விசாரணை இதோ.

துப்பாக்கி ஏந்திய கூட்டாளிகள் சுற்றி நிற்க, வீரப்பனுக்கு முன்னால் விசாரணை கைதியாக கந்தவேலு.

வீரப்பன்: கந்தவேலு... என்ன நடந்துச்சுன்னு முழுசா சொல்லு. உண்மையை மரியாதையா சொல்லு.

கந்தவேலு: ஆண்டவன் சத்தியமா நான் எந்த பொய்யும் பேசலை.

வீரப்பன்: முடியோட முடி புரண்டாலும் மூச்சு விடாதடான்னு பழமொழி சொல்லுவாங்க. நீ மரியாதையா உண்மையை சொல்லிடு. உண்மை பூரா எனக்குத் தெரியும். மாமா, மாமான்னு உன்னிடம் இருந்தானே பேபி, அவன் துப்பாக்கி எடுத்து அவன் நெஞ்சிலேயே சுட்டியேடா படையாச்சி... படையாச்சி... டேய் படையாச்சி...

கந்தவேலு: அண்ணே... இல்லேண்ணா...

வீரப்பன்: உன்ன தகப்பன் மாதிரி நெனச்சானே.. அவன் நெஞ்சை பாத்து சுட எப்படிடா மனசு வந்துச்சு.

(சுற்றி நின்றவர்கள் துப்பாக்கி கட்டையால் ஓங்கி ஓங்கி அடிக்கும் சத்தம்... 'அடிக்காதீங்க அடிக்காதீங்க' என அலறுகிறான் கந்தவேலு.)

வீரப்பன்: உண்மையை பேசுடா... கலைஞர் மன்னிப்பு தர்றாருன்னு சொன்னப்ப நீ என்கிட்டே வந்து, நான் அய்யன்துரை பங்காளி கந்தவேலுன்னு சொன்னே... உன் பொண்டாட்டி, மக எல்லோரையும் பொலிஸ் புடிச்சு கற்பழிச்சு சித்ரவதை செஞ்சதையும் அப்புறமா நடராசன் டாக்டர்கிட்டே கூட்டிட்டுப் போய் ஊசி போட்டு பொண்டாட்டி வயித்திலே இருந்த பொலிஸ்காரன் விந்து எல்லாத்தையும் எடுத்ததா சொன்னே...
நான் உனக்கு
உடை
கொடுத்து,
ஆகாரம்
கொடுத்து,
செலவுக்கு
பணம்
கொடுத்தேன்.
துப்பாக்கி
வேணும்னு
கேட்டே அதுவும்
கொடுத்தேன்.

கந்தவேலு: ஆமாண்ணே...

வீரப்பன்: என்கிட்டேயிருந்து போன உன்னையை பொலிஸ் மறுபடியும் புடிச்சது. அப்புறம் நீ அவங்க ஆளா மிட்டே...

கந்தவேலு: இல்லேண்ணே.

வீரப்பன்: நான் பேசி முடிக்கிறவரைக்கும் நீ உம்முனு இருக்கணும்.. எதிரி (பொலிஸ்) பேச்சைக் கேட்டு ஒரு வீரனை சுட்டு கொன்னுட்டு, இப்ப இந்த மாவீரனை சுடுறதுக்குன்னு வந்திருக்கே.





கந்தவேலு: அர்ஜெண்டா நீங்க கூப்பிட்டதா சொன்னதால தாண்ணே வந்தேன். நான் யாரையும் சுடலேண்ணே...

வீரப்பன்: சாகும்போதாவது உண்மையைப் பேசு. உண்மையைச் சொன்னால் உயிரோடு போவே! பாவத்தில் ஈடுபட்டது உண்மைதான், என்னை சுட்டுப் போட்டாலும் சரி; வாழ்வு கொடுத்தாலும் சரின்னு சொல்லிட்டு உண்மையை பேசு. சொல்லுடா உண்மையை... எனக்கு உண்மை தெரிஞ்சு போனபிறகு எதையும் மறைக்காதே.

கந்தவேலு: உன்கிட்டே மறைக்க கடவுளாலும் முடியாதுண்ணே...

வீரப்பன்: என்னை சரிகட்ட நினைக்காதேடா நாயே... பெத்த மகன் மாதிரி உன்கிட்டே இருந்தவனை கொன்னுட்டே... இப்ப என்னை கொல்றதுக்காக சயனைடு கொண்டு வந்திருக்கே... அதையும் கண்டு பிடிச்சு நாங்க எடுத்துட்டோம். இப்பவாவது உண்மையைச் சொல்லுடா. இல்லேன்னா மரத்திலே கட்டிடுவோம். உண்மை பேசு. பேபியை ஏன் சுட்டே... எந்த அதிகாரி சுடச் சொன்னான்... எவன்டா உன்னை அனுப்பினான். அரை தாடி (மோகன் நிவாஸ்) அனுப்பினானா... சொல்லுடா டேய்.. நீ படையாச்சியாடா... உன்னையெல்லாம் நம்பி இந்த ராமதாசு ஆயுதம் ஏந்த சொன்னாரு... உன்னையை நம்பினா அவரு உயிரோட இருக்கமுடியுமா... அவரு தலையை ஒன்னரை ரூபாய்க்கு பொலிஸ்காரன் கிட்டே வெட்டிக் கொடுத்திருப்பீங்கடா... த்தூ... அதனாலதான் அவரு ஒதுங்கிட்டாரு... இப்ப சொல்லு... பேபியை எப்படி சுட்டே... அரசியல்வாதிகள் கொல்லச் சொன்னாங்களா... டேய்... பொலிஸ்காரன் பல ரூபத்திலே வருவான். பலதை பேசுவான். சினிமா நடிகைகளை அம்மணமா ஆடவிட்டு மயக்குவான்... அவனுங்க கூட சேர்ந்து பேபியை சுட்டுட்டியேடா உண்மையைச் சொன்னா சீக்கிரம் சாவே...

கந்தவேலு: இல்லண்ணே... நான் இல்லேண்ணே...

வீரப்பன்: எந்திரிடா... எந்திரி... ஏய்... இவனை புடிச்சிட்டு போப்பா...

அடுத்த சில நிமிடங்களுக்கு கந்தவேலு அலறுகிற சத்தம் கேட்கிறது. அதைத் தொடர்ந்து துப்பாக்கிச் சத்தம் பலமாக கேட்கிறது.

'கோட்' விசாரணையையும் தண்டனை நேர சமிக்ஞைகளையும் ஆடியோ கேசட்டில் பதிவு செய்து நமக்கு அனுப்பியிருக்கும் வீரப்பன், விசாரணை முடிவில் கந்தவேலு கொல்லப்பட்டுக்கிடக்கும் படத்தையும் அனுப்பியுள்ளான்.

## சயனைட்!

காட்டு 'கோர்ட்'டில் விசாரிக்கப்பட்ட கந்தவேலுவையும் பாட்சா பாயையும் வீரப்பன் ஆட்கள், மரத்தில் கட்டிப்போட்டு சோதனையிட்டுள்ளனர். "அவனுங்களை சோதனை போட்டப்ப, கந்தவேலுவோட அண்ட்ராயர் பாக்கெட்டில் ஒரு சின்ன டப்பா இருந்தது. அதை திறந்து பார்த்தப்ப உள்ளே 5 சயனைட் சுருள் வச்சிருந்தான். என்னைக் கொல்றதுக்காக பொலிஸ்காரனுங்க சயனைட் கொடுத்து அனுப்பியிருக்கானுங்க" என்கிறான் வீரப்பன் தன் கடிதத்தில். சயனைட்டையும் டப்பாவோடு நக்கீரனுக்கு அனுப்பியிருக்கிறான்.



படிப்பகம்

www.padippakam.com

# விருந்தோ விருந்து

- விருந்துக்கு அழைத்தவருடன் பேசத் தொடங்கும் போது, ஓர் இனிய புன்னகை, இதமான விசாரிப்பு இவற்றுடன் ஆரம்பிக்க வேண்டும்.
- உணவு அருந்தும்போது ஏதோ ஓர் உணவு வகையில் காரமோ, உப்போ சற்றுக் கூடுதலாக இருந்துவிட்டது என்றால்கூட அதை வெளிப்படையாகக் காண்பித்துக் கொள்ளக்கூடாது.



- தேவையான அளவே பரிமாறச் சொல்லிச் சாப்பிட வேண்டும். அதிகமாகப் போட்டு விட்டு அவ்வளவையும் சாப்பிட முடியாவிட்டால் வீணாக எறிய வேண்டி வரும்.
- எல்லோருடனும் ஒன்றாகப் பேச வேண்டும். இருவர் மூவராகக் கூடி இரகசியமாகப் பேசிக்கொண்டிருக்கக்கூடாது.
- நீங்கள் ஒப்புக்கொள்ள முடியாத கருத்துக்களை மற்றவர்கள் வெளியிட்டாலும் அதற்கு மறுப்புத் தெரிவித்து விவாதத்தை வளர்க்க வேண்டாம். விருந்து விவாத மேடையாகிவிடும்.
- வேறு யாருக்கிடையிலோ உள்ள ஒரு தகராறினை, உங்களுக்குள் பங்கு பிரித்துக்கொண்டு குரலை உயர்த்திப் பேசி மற்றவர்களது கவனத்தைக் கவருவதும் சரியல்ல.
- சென்ற இடத்தில் உங்களது வியாதிகளையோ அல்லது துன்பங்களையோ வரிசைப்படுத்தி பட்டியல் போட்டு பிரச்சனைகளை விவாதிப்பது தேவையற்றது.
- குறிப்பிட்ட நாளில் அந்த விருந்துக்குப் போக வசதிப்படாது இருந்தால் நாசுக்காகச் சொல்லி மறுத்து விடுவது நல்லது. அப்படிச் செய்யாமல் கடைசி நேரத்தில் போகாமல் இருப்பது அழைத்தவர்களை அவமதிப்பது போலாகும்.
- விருந்து முடிந்து விடைபெறும்போது நல்ல சுவையான விருந்துக்காகவும், பலரைச் சந்தித்து இனிமையாகப் பொழுது போக வாய்ப்பளித்ததற்காகவும், அழைத்தவருக்கு நன்றி சொல்ல மறக்கவேண்டாம்.

## பரிசு வென்றவர்



முரசின் பட்டுச்சேலை பரிசு பெற்ற அதிஷ்டசாலிகளில் ஒருவர் இவர்:-
**செல்வி. எல். கஜேந்திராதேவி**
**கன்னகியம்மன் கோயிலடி, திமிலை, சிலாபம்.**

# தொப்பைக்குத் தடை

ஆண்களின் அழகுக்கு பெரும் பிரச்சனையை ஏற்படுத்துகிறது தொப்பை. வாலிபர்களாக இருக்கும்போது வனப்புடன் காணப்படுகிறவர்கள் திருமணமானதும் இந்தத் தொப்பைத் தொல்லைக்கு ஆளாகிவிடுகிறார்கள்.



இது அழகுக்கு மட்டுமல்ல ஆரோக்கியத்திற்கும் பிரச்சனைதான். வேகமாக நடக்க முடியாது. பஸ்களில் ஏறி இறங்க தொல்லை ஏற்படும்.

தொப்பையைக் குறைக்க எளிய வழிகள்:

- ★ உணவில் சேர்க்கும் உப்பின் அளவைக் குறையுங்கள்.
- ★ சிப்ஸ், ஊறுகாய் போன்றவற்றை அதிகம் சேர்க்காதீர்கள்.
- ★ உடலில் இயற்கையாக இருக்கும் தண்ணீர்த் தன்மையை குறைக்கும் விதத்திலான மருந்துகளை உபயோகிக்கக் கூடாது.
- ★ போஞ்சி, முட்டைக்கோவா போன்றவற்றை அதிகம் சாப்பாட்டில் சேர்க்கக்கூடாது.
- ★ குண்டானவர்கள் அரை வயிறு அளவு சாப்பிட்டால் போதும். மூக்குப்பிடிக்கச் சாப்பிடாமல் இருப்பது நல்லது.
- ★ உருளைக்கிழங்கு, கடலை, பருப்பு வகைகளை உணவில் சேர்ப்பதைப் பெருமளவு குறையுங்கள். அல்லது சாப்பிடாமல் விட்டுவிடுங்கள்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.
☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** EY

பெயர்:..........................
முகவரி:..........................
..........................
தொழில்:..........................
கையொப்பம்:..........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 02-01-1999**
அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 67

புவனா

விவாகரத்துக்குப் பின்னர் டயானா பின்வருமாறு கூறினார்:

"ஏமாற்றப்பட்ட காலம் ஓடி மறைந்தது. கடந்த பல ஆண்டுகளாக நான் பலவற்றைப் படித்துவிட்டேன். இனிமேல் நான் எனக்காக வாழப்போகிறேன். நான் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்று எனக்கு கட்டளையிட்டோரின் தாளத்துக்கு நான் இனிமேல் ஆட்டம்போடவேண்டியதில்லை.

நான் நானாகவே இருக் கப்போகிறேன்!" என்று கூறினார்.

தங்கக் கூண்டுக்குள் இருந்து விடுபட்ட உணர்வோடும், தனது சிறகுகள் மறுபடி கிடைத்துவிட்ட சந்தோஷத்திலும் தன் புதிய வாழ்க்கையை ஆரம்பித்தார்.

டயானா அடுத்தடுத்து மேற்கொண்ட நடவடிக்கைகள் அவரது புகழை உயர்த்தின. அரச குடும்பமும், டயானாவை ஆடம்பரப் பிரியை என்றவர்களும் புருவங்களை உயர்த்தினர்.

அரச வைபவங்களில் கலந்து கொள்வதற்காக என்று பெரிய ஆடம்பரக்கார்கள் டயானாவுக்கு வழங்கப்பட்டிருந்தன. "அந்தக் கார்களை இனிமேல் பயன்படுத்தமாட்டேன்!" என்று கூறினார்.

அக்கார்களின் சாரதிகளையும் அவர்களது குடும்பத்தினரையும் தன்மாளிகைக்கு அழைத்தார்.

அனைவருக்கும் விருந்து கொடுத்தார். அவர்களுடன் அமர்ந்து தானும் உணவருந்தி மகிழ்வித்தார்.

கணிசமான பணம் கொடுத்து சாரதிகளுக்குப் பிரியாவிடை கொடுத்து அனுப்பினார்.



### கலங்கி நின்றனர்

தனது நிழலாகத் தொடர்ந்த மெய்க்காவலர்களுக்கும் பிரியாவிடை கொடுக்க விரும்பினார்.

அவர்களை அழைத்து தன் முடிவைக் கூறினார்.

அவர்களில் பலர் டயானாவின் தீவிர அனுதாபிகள்; அவர்மேல் பாசம் கொண்டவர்கள்.

டயானாவைவிட்டு விலகிப் போவதை நினைக்கவே, அவர்களது விழிகள், அவர்களையறியாமலேயே ஈரமாகிவிட்டன.

ஆனால் டயானா தன் முடிவில் உறுதியாக நின்றார். பிரியாவிடை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தார்.

மெய்காப்பாளர்களில் சிலர் டயானாவை தனியாகச் சந்தித்தனர்.

"அரசு தரும் இந்தப் பாதுகாப்பு உங்களுக்கு வேண்டாம் என்றால் கூறுங்கள், நாம் அரசுப் பணியை விட்டுவிலகி தனிப்பட்ட பாதுகாவலர்களாக உங்களிடம் பணிபுரிகிறோம்!" என்று அவர்கள் கூறினர்.

அவர்கள் தன்மேல் கொண்டிருந்த- பிரதியுபகாரம் கருதாத அன்பில் நெகிழ்ந்து போனார் டயானா.

"அரச குடும்பத்துடன் உறவு முறிந்தரல் டயானாவை யாரும் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டார்கள்!" என்று வம்பு பேசியவர்களையும் நினைத்துப் பார்த்தார்.

"உங்கள் அன்புக்கு நன்றி. தேவைப்பட்டால் அழைக்கிறேன். தற்போது எனக்கு எந்தப்பாது காப்பும் தேவையில்லை. நான் ஒரு பறவைபோல என் இஷ்டப்படி சிறகடிக்கப்போகிறேன்!" என்று தலையை ஒருபக்கம் சாய்த்தபடி இதமாகப் புன்னகைத்தார்.

பிரியாவிடை நிகழ்ச்சியில் சோகம்தான் நிலவியது. டயானா சிரித்துப் பேசியபோதும், மெய்காவலர்கள் முகங்களில் சோகம் நாற்காலி போட்டு அமர்ந்திருந்தது.

பிரியும் நேரத்தில் ஒவ்வொருவராக டயானாவின் கரத்தில் முத்தமிட்டனர். தனது கரங்களில் அவர்களது கண்களில் இருந்து விழுந்த கண்ணீரின் ஈரத்தை உணர்ந்தார் டயானா.

பிரியாவிடை பெற்றவர்களுக்கு மட்டுமல்ல, பரியாவிடை கொடுத்த டயானாவுக்கும் பேசுவதற்கு நா எழ மறுத்தது.

இறுக்கமான அந்தச் சூழல் டயானா தன்னிடம் பணியாற்றியவர்களை எந்தளவுக்கு மதித்தார், எந்தளவுக்கு அன்பு செலுத்தினார் என்பதற்கு எடுத்துக்காட்டு.

மெய்காப்பாளர்களாக இருந்து கொண்டு அரச குடும்பத்திற்கு தகவல் கொடுத்த சிலரும் இருந்தனர். அவர்களும் தமது செயலுக்காக அன்றுதான் வருந்தினார்கள்.

# ஏலத்தில் விடப்பட்ட உடைகள்

### ஏலத்தில் விடப்பட்டவை



தனது ஆடம்பர உடைகளில் பலவற்றை ஏலம்விட முன்வந்தார் டயானா.

தனக்குள்ள செல்வாக்கோ, தனக்குள்ள மதிப்போ சற்றும் குறையவில்லை. விவாகரத்தால் தன்மீதுள்ள அபிமானம் சரிந்துவிடவில்லை என்று அரச குடும்பத்திற்கு நிரூபிக்கவும் அதனை ஒரு வாய்ப்பாகக் கொள்ள நினைத்தார்.

தனது உடைகளை விற்று பெறப்படும் பணம் எய்ட்ஸ், புற்றுநோய், தொழு நோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டோருக்கும், அநாதைகளுக்கும் பயன்படும் எனவும் டயானா அறிவித்தார்.



இம்ரான்கான் மனைவியோடு டயானா.

1997ம் ஆண்டின் மத்தியில் டயானாவின் உடைகள் அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் ஏலத்தில் விடப்பட்டன.

தனது உடைகளை டயானா ஏலம் விடுவதை அறிந்த கோடீஸ்வரர்கள் பலர் அவற்றை வாங்குவதற்குப் போட்டி போட்டனர்.

பெண்களும் டயானாவின் உடையை வாங்குவதற்கு போட்டி போட்டனர். "அவர்கள் அணிந்து பார்க்கலாம். ஆனால் ஆண்கள் ஏன் போட்டி போட்டனர்?" என்று பத்திரிகைகள் கேலியான கேள்வி எழுப்பி, தாமே பதிலும் கூறின.

"டயானாமீது மோகம் கொண்ட கோடீஸ்வரர்கள், அவரது உடைகளை தங்கள் படுக்கையறையில் வைத்து மகிழப்போகிறார்கள்.

தங்களுக்கு விருப்பமான பெண்களை தங்க ளால் தொட முடியாதபோது, இவ்வாறு தங்கள் ஆசைகளைத் தணித்துக் கொள்வது சிலரது பழக்கம். இது ஒருவிதமான மனோ வியாதி.

அந்த மனோவியாதியால் நோயாளர்களுக்கு நிதி திரண்டுள்ளதே என்றளவில் திருப்திப்பட்டுக் கொள்ளலாம்!" என்று எழுதியிருந்தன.

### இம்ரான்கான் அழைப்பு

பாகிஸ்தான் முன்னாள் கிரிக்கெட் வீரரும், முன்னாள் கப்டனுமான இம்ரான் கான் டயானாவுக்கு அழைப்பு ஒன்றை விடுத்தார்.

பாகிஸ்தானில் தனது தாயாரின் நினைவாகத் திறக்கப்படும் மருத்துவமனையை பார்வையிடவே டயானாவை அழைத்திருந்தார்.

அந்த அழைப்பை மகிழ்வுடன் ஏற்ற டயானா பாகிஸ்தானுக்குச் சென்றார்.

அங்கு நடந்த நெகிழ்வான சம்பவங்களை இம்ரான்கான் கூறியிருந்தார்:

"எனது மனைவியின் தாயான அன்னா பெல்லை டயானா அழைத்து, மருத்துவமனையில் உள்ளவர்களுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்ய விரும்புவதாகக் கூறினார்.

மருத்துவமனையை சுற்றி பார்வையிடவும் விரும்பினார்.

அந்த சிறுவனுக்கு முகத்தில் புற்றுநோய் கட்டி இருந்தது. அக்கட்டி பெரிதாகி சீழ் வடிந்து கொண்டிருந்தது. அதனால் அவன் பெரும் துன்பப்பட்டுக் கொண்டிருந்தான்.

அச்சிறுவனுடைய புண்ணிலிருந்து, வெகு தூரம் வரை கெட்ட வாடை வீசிக் கொண்டிருந்தது. அதனால் அவனைத் தனியான இடத்தில் வைத்திருந்தனர்.

அவனை டயானா பார்வையிடுவதற்காக கண்ணாடி மறைப்புக் கொண்ட அறையில் வைத்திருந்தனர்.

ஆனால் டயானா எவருமே எதிர்பாராத காரியத்தைச் செய்தார். கண்ணாடி கதவைத் திறந்து சிறுவனிடம் சென்று அவனைத் தூக்கிக் கொண்டார். எமக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை," என்று இம்ரான்கான் கூறுகிறார்:



டாக்டர் ஜி.எம்.ஷா இவ் வாறு கூறுகிறார்:

"அச் சிறுவன் வாய்திறக்க முடியாமல் இருந்தான். பொறுக்க முடியாத துர்நாற்றம். ஆனால் டயானா அன்றைய நிகழ்ச்சி முழுவதும் அச் சிறு வனைத் தன் மடியில் வைத்திருந்தார்."

(அடுத்த வாரமும் வரும்)

### இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

**பதுளை வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்
**பி. நவஜோதி,**
271, 3ம் கட்டை, பசறைவீதி, பதுளை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


படிப்பகம்

www.padippakam.com





உப்பென்றும் சீனி என்றும்
உள்நாட்டுச் சேலை என்றும்,
செப்பித் திரிவா ரடீ!– கிளியே!
செய்வ தறியா ரடீ!

–சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# ஒரே ஒரு வரம்

ஓர் ஊரில் ஒரு பிச்சைக்காரன் இருந்தான். அவனுக்குக் கண்பார்வை கிடையாது. காலும் நொண்டி. அவன் பிச்சை எடுத்து தனது மனைவியையும், பிள்ளைகளையும் காப்பாற்றி வந்தான்.

அவனது உடலில் ஊனம் இருந்தாலும் மிகவும் புத்தி சாதுர்யம் மிக்கவன். அவன் தினமும் பல இடங்களுக்குச் சென்று பிச்சையெடுத்து வருவான்.

இவன் பிச்சையெடுக்கச் செல்லும் போது வழியில் உள்ள ஓர் ஆலமரத்தைத் தினமும் கடந்து செல்வான்.

அந்த ஆலமரத்தில் இருந்த தேவதை ஒன்று பிச்சைக்காரன் படும் கஷ்டங்களைப் பார்த்து வந்தது.

ஒருநாள்–

பிச்சைக்காரன் தனது இருப்பிடத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்தான். இரவானபடியால் வீதியில் மக்களின் நடமாட்டம் இல்லாமல் இருந்தது. பிச்சைக்காரன் ஆலமரத்தின் அருகே வந்தபோது, தேவதை அவன் முன் வந்தது.

அவன் முன், அந்தத் தேவதை வந்து, "நீ தினமும் கஷ்டப்படுவதை நினைத்து, உனக்கு உதவி செய்ய வந்திருக்கும் தேவதை நான். உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேள் தருகிறேன். ஆனால் நீ ஒரே ஒரு வரம் தான் கேட்க வேண்டும்" என்று நிபந்தனை போட்டது.

பிச்சைக்காரன் யோசித்தான். கண் பார்வை கேட்பதா? கால் குணமாகக் கேட்பதா? பணக்காரனாகக் கேட்பதா? என்று அவன் மனதில் கேள்விகள் தோன்றின.



ஒன்று மட்டும் தான் கேட்கலாம். ஒன்று மட்டும் கிடைத்தால் மற்றவை இல்லாமல் போகுமே என்ன செய்வது என யோசனை செய்தான்.

இறுதியாக ஒரு முடிவுக்கு வந்து,

"தேவதையே! குருடாகவும், நொண்டியாகவும் நிற்கும் நான் எனது வீட்டு மூன்றாவது மாடிக்கு ஏறிப்போய் நின்று, தெருவில் விளையாடும் எனது பிள்ளைகளைப் பார்க்க வரம் வேண்டும்" என்று கேட்டான்.

அவ்வாறே தேவதையும் வரம் அளித்து விட்டு மறைந்தது.

ஒரே வரத்தில் கண்பார்வை கிடைத்து, கால் ஊனம் நீங்கி, பணக்காரனாகி விட்டான், அந்தப் பிச்சைக்காரன்.

இந்தத் தேவைகளை எல்லாம் பிச்சைக்காரன் ஒரே வரத்தின் மூலம் தேவதையிடமிருந்து பெற்றது, பிச்சைக்காரனின் புத்திக் கூர்மையைக் காட்டுகிறதல்லவா?

# அதிசயம் – ஆனால் உண்மை!



ஆபிட்ஸ் எனப்படும் தேன் உண்ணும் பூச்சிகள் ஒரு வகை எறும்புடன் நட்பாக இருக்கும். இந்தப் பூச்சிகளுக்கு ஏதாவது ஆபத்துவரும்போது எறும்புகள் இவற்றைக் காப்பாற்றும். அதற்கு நன்றியாக இந்தப் பூச்சிகள் தான் உண்ட தேனை வெளியேற்றி எறும்புகளுக்குக் கொடுக்கும்.

இத்தாலி நாட்டைச் சேர்ந்த மில்லா பெர்டெல்லி என்ற பெண் ஒரு பழைய கட்டடத்தின் உயர்த்தி (லிப்ட்)யில் சென்றபோது, உயர்த்தி பழுதடைந்து நின்று விட்டது. 2 1/2 நாட்களுக்குப் பிறகு அந்தப் பெண் மீட்கப்பட்டார்.





மாவீரன் அலெக்ஸாண்டர் இறந்ததும், அவனது உடல், ஒரு பெரிய தேன் நிறைந்த சாடிக்குள் வைக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டது.



மணல் என்றால் வெள்ளையாக அல்லது பழுப்பாக இருக்கும். அவுஸ்திரேலியாவில் உள்ள சிம்ஸன் பாலைவனத்தில் உள்ள மணல் சிவப்பாக இருக்கும்.

# வாரம் ஒரு நாடு

## ஆப்கானிஸ்தான்



தலைநகர்– காபூல்
பரப்பு– 6,47,497 சதுரகிலோமீட்டர்.
மக்கள் தொகை– 2.28 கோடி
மொழி– புஷ்து, தாரி, பெர்ஷியன்
சமயம்– இஸ்லாம்
நாணயம்– ஆப்கானி
எழுத்தறிவு– 32%
தனிநபர் வருமானம்–150 டொலர்

**அமைவிடம்:**

மத்திய ஆசியாவில் நான்கு புறமும் நிலப்பகுதிகளால் சூழப்பட்ட நாடு. கிழக்கிலும் தெற்கிலும் பாகிஸ்தான்; மேற்கில் ஈரான்; வடக்கில் ரஷ்யா; வடகிழக்கில் சீனா ஆகிய நாடுகளை எல்லைகளாகக் கொண்டுள்ளது.

**வரலாறு:**

துவக்க காலத்தில் அரியானா என்று வழங்கப்பட்டது. 1979ல் சோவியத் கண்காணிப்பில் ஒரு அரசு அமைந்தது. நஜிபுல்லா தலைமையில் 1989ல் இராணுவ ஆட்சி. என்றாலும் ஆப்கான் கிளர்ச்சியாளர்கள் போட்டி அரசை வெளியில் இருந்து நடத்தினார்கள். 1996 செப்டெம்பரில் தீவிரவாத தலீபான் படைகள் காபூலைக் கைப்பற்றின. முன்னாள் அதிபர் நஜிபுல்லா கொல்லப்பட்டார்.

**பொருளாதாரம்:**

விவசாயம் முக்கிய வருமான மூலம். கால்நடைகள், பழங்கள், கம்பளி போன்றவை முக்கிய ஏற்றுமதிகள்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **02.01.1999.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **277**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 275

**பரிசுக்குரியவர்:**
அருமை நாயகம் ஸ்டீபன்,
கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம், நுவரெலியா.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| கே. கமல்நாத், பம்பலபிட்டி இந்து கல்லூரி, கொழும்பு-04. | ஆர். சுரேஸ்குமார், புனித சில்வெஸ்டர் கல்லூரி, கண்டி. |
| இரா. யோகராணி, தம்பேத்தன்னை த.க.வி., அப்புத்தளை. | ரா. திவ்யா, சென் ஜோசப் தமிழ் மகா வித்., மஸ்கெலியா. |
| நிஷாந்தினி ரட்ணம், இ/ப/தமிழ் மகா வித்தியாலயம், பலாங்கொடை. | ஐ. சாகிரா, அல்-ஹிலால் மத்திய க., பெரியமுல்லை, நீர்கொழும்பு. |
| பாத்திமா நிஷ்மா நஜீம், ஒக்ஸ்போட் சர்வதேச பாடசாலை, பலாங்கொடை. | எஸ். சோபனா, மட்/சக்தி மகா வித்தியாலயம், முனைத்தீவு. |
| எஸ். பிரதீபா, ஆண்டிமுனை, உடப்பு, சிலாபம். | பி. ஜனாத்தனி, மட்/விநாயகர் வித்தியாலயம், விளாவட்டவான். |

# கனிவளங்கள்

ஆழ்கடலில் உள்ள கனிவளங்களும், அவை எவ்வளவு காலத்திற்குப் போதுமானது என்பது பற்றிய விபரங்களும் வருமாறு:

**அலுமினியம்:**

4.3 கோடி தொன் அலுமினியம் கடலில் உள்ளது. இது 20 ஆயிரம் ஆண்டுகளிற்குப் போதுமானது. தற்போது 90 ஆண்டுகள் தேவைக்கே நிலத்தில் உள்ளது.

**செம்பு:**

79 இலட்சம் தொன் செம்பு கடலில் உள்ளது. இது ஆறாயிரம் ஆண்டுகளுக்குப் போதுமானது. இப்போது நிலத்தில் உள்ள செம்பு 30 ஆண்டுகால தேவைக்கே போதுமானது.

**மங்கனிஸ்:**

35.8 கோடி தொன் மங்கனிஸ் உள்ளது. இது 4 இலட்சம் ஆண்டுகளுக்குப் போதுமானது. இப்போது நிலத்தில் உள்ளது 90 ஆண்டுகளுக்கே போதுமானது.

**கோபால்ட்:**

52 இலட்சம் தொன் கோபால்ட் கடலில் உள்ளது. இது 2 இலட்சம் ஆண்டுத் தேவைக்குப் போதுமானது. இப்போது 30 ஆண்டுத் தேவைக்குப் போதுமான கோபால்ட்டே நிலத்தில் உள்ளது.

**நிக்கல்:**

1.47 கோடி தொன் நிக்கல் உள்ளது. இது 1 1/2 இலட்சம் ஆண்டுகளுக்குப் போதுமானது. தற்போது நிலத்தில் உள்ள நிக்கல் 90 ஆண்டுகள் தேவைக்கே உள்ளது.

# புஷ் பேபி (BUSH BABY)



புஷ்பேபி என்பது அணிலைப் போன்ற ஒரு சிறிய பாலூட்டி விலங்கு. இதன் முகம் பார்ப்பதற்கு ஆந்தையைப் போல் தோற்றமளிக்கும். இதன் குரல் குழந்தை அழுவதைப் போன்றிருக்கும்.

இதனால் தான் அடர்ந்த புதரில் வாழும் இதற்கு புஷ்பேபி என்று பெயர் வந்தது.

இதன் பார்வை சக்தி மிகக் கூர்மையானது. அடர்ந்த இருட்டிலும் நன்றாகப் பார்க்கக் கூடியது. நீண்ட காதுகள் மூலம் துல்லியமாக ஒலியை இதனால் கேட்க முடியும்.

சிறு சிறு பூச்சிகள் தான் இவற்றின் உணவு. ஆபிரிக்காவிலும், தென்கிழக்கு ஆசியாவிலும் இவை அதிகம் காணப்படுகின்றன.

# உயரமான எரிமலை



ஈகுவடோர் நாட்டின் தலைநகரான குயிட்டோ, மலைகள் சூழ்ந்த ஒரு நகரம். 6 ஆயிரம் மீட்டர் உயரமுள்ள மலைகள் இங்குள்ளன.

குயிட்டோ நகரில் இருந்து 60 கிலோ மீட்டர் தொலைவில் கொட்டபாக்ஸி எரிமலை உள்ளது. உலகின் மிக உயரமான எரிமலை இதுதான். இந்த எரிமலையின் உயரம் 5897 மீட்டர்.

எப்போதும் பனி படர்ந்து காணப்படும் இந்த எரிமலையை பகல் நேரத்தில் தெளிவாகப்பார்க்க முடியும். மேற்புறத்தில் இந்த எரிமலை பனியைப் போர்த்திக் கொண்டிருந்தாலும் உட்புறத்தில் நெருப்புக் குழம்புகளைக் கொண்டு உயிரோட்டமுள்ள எரிமலையாக இருக்கும்.

# நின்றபடி தூக்கம்

மனிதர்களில் சிலர் கதிரையில் இருந்தபடியே தூங்குவார்கள். ஆனால் நின்றபடி தூங்க அவர்களால் முடியாது. நின்ற படியே தூங்கும் உயிரினம் எது என்று உங்களுக்குத் தெரியுமா?



குதிரைகள்தான் நின்றபடியே தூங்கும் ஒரே உயிரினம். இவைகள் நின்றபடி தூங்கும் போது, தூக்கத்தில் கால்கள் மடங்கி விழுந்து விடாதா? என்ற கேள்வி உங்களுக்குத் தோன்றியிருக்கும்.

குதிரைகள் தூங்கும்போது அவற்றின் தசைநார்கள் சோர்ந்து விடும். தசை நார்கள் சோர்வடைந்ததும் உறுதியுடன் நிற்கும் கால்கள் மடங்கும் நேரத்தில் அவை சுதாரித்துக் கொள்ளும்.

எனவே நின்றபடி தூங்கும்போது குதிரைகள் விழுந்துவிடாது. நின்றபடியே தூங்கினால் தான் அவைகளால் நிம்மதியாகத் தூங்க முடிகிறதென்று விலங்கியல் அறிஞர்கள் கூறுகிறார்கள்.

# என்ன பெயர்?

- வளிமண்டலத்தில் நீராவி நிலைபற்றி ஆராய்ந்து சொல்லும் துறைக்கு 'அட்மலொஜி' என்று பெயர்.
- முப்பரிமாண உருவங்களை உண்டாக்கும் நிழற்படக் கருவிக்கு 'ஹலோகிராம்' என்று பெயர்.
- செயற்கைக்கோள் மூலம் தகவல் அறியும் முறைக்கு 'ஜி.டி.எஸ்.' என்று பெயர்.
- வாய் நோய் பற்றிய மருத்துவப் பிரிவுக்கு 'ஸ்டோ மோட்டலொஜி' என்று பெயர்.
- பட்டாசு, வாணவெடிகள் ஆகியவற்றைப் படிக்கும் படிப்பிற்கு 'பைரோ டெக்னிக்ஸ்' என்று பெயர்.
- பூகம்பம் உருவாகப் போவதை முன்கூட்டியே அறிவுக்கும் கருவிக்கு 'மைக்ரோ சீஸ்மோ க்ராப்' என்று பெயர்.

www.padippakam.com

# மர்மம், காதல் குடும்ப நயம் கலந்த விறு விறு தொடர்

# டிசம்பர் பௌர்ணமி

## 09

**க்ரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்**

**இதுவரை**

பிரபல தொழிலதிபர் ருத்ரமூர்த்தியின் ஒரே மகன் நித்தியன். பம்பாயில் சிறையிலிருந்து விடுதலையாகி வருபவனை வெளிநாட்டில் இருந்து வருபவனாகக் கூறி விசாலிக்கு மணம்முடிக்க திட்டமிடுகிறார். நித்தியனோ சாந்தாவைக் காதலிக்கிறான். நித்தியன் சிறையில் இருந்து வந்தவன் என்ற விடயம் விசாலி வீட்டுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அவ்வாறு இருந்தும் கல்யாணம் செய்ய சம்மதம் என்கின்றனர். நித்தியனோ சாந்தாவை கல்யாணம் செய்ய விரும்புகிறான். சாந்தாவை கல்யாணம் செய்தால், தான் தற்கொலை செய்வேன் என்று தந்தை ருத்ரமூர்த்தி மிரட்டுகிறார். நித்தியன் பணிவதாக நடிக்கிறான்.

**இனி......**

"நீங்கதானே சாந்தா?" என்று கேட்ட அந்த இளைஞனை தன் பிறை நெற்றி சுருங்க ஏறிட்டுப் பார்த்தாள் சாந்தா.

"ஆமா...."

"நித்தியனுக்காக நீங்க இப்போ வெயிட் பண்ணிட்டிருக்கீங்க இல்லையா?"

"ஆமா..."

"நித்தியன் இப்போ இங்கே வர மாட்டார்."

"ஏன்?"

"இப்போ அவர் என் வீட்டுலதான் இருக்கார். வர்றீங்களா... போகலாம்."

"நீங்க யாரு? அவர் ஏன் வரலை?"

அந்த இளைஞன் புன்னகைத்தான். "என் பேர் முகுந்தன். நித்தியனும் நானும் காலேஜ்ல படிக்கும்போது கிளாஸ் மேட்ஸ்."

அவனை நம்பாத பார்வை பார்த்தாள். அந்த இளைஞன் தன் புன்னகையின் பரப்பைப் பெரிதாக்கினான்.

"என்னை நீங்க நம்பலைன்னு உங்க பார்வையே சொல்லுது. நோ... ப்ராப்ளம்... இந்தாங்க. என்னோட செல்ஃபோன்." சொன்னவன், தன் சட்டைப் பைக்குள் வைத்திருந்த செல்ஃபோனை எடுத்து சாந்தாவிடம் நீட்டினான்.

"இது எதுக்கு?"

"நான் சொல்ற நம்பரை அதுல டயல் பண்ணுங்க. உங்கக்கூட நித்தியன் பேசுவார்."

சாந்தா தயக்கமாய் செல்ஃபோனை வாங்கிக் கொள்ள அந்த முகுந்தன் எண்களைச் சொன்னான். சாந்தா டயல் செய்து விட்டு, செல்ஃபோனை காதுக்குக் கொடுக்க சில வினாடிகளுக்குப் பிறகு, மறு முனையில் நித்தியனின் குரல் கேட்டது.

"ஹலோ!"

"என்னங்க... நான் சாந்தா"

"சாந்தா! நீ உடனே என் ஃப்ரண்ட் முகுந்தனோடு புறப்பட்டு வா"

"எதுக்காக இப்படி? ஏதாவது பிரச்சனையா?"

"நேர்ல வா... சொல்றேன்"

"என்னங்க... எனக்கு பயமாயிருக்கு."

"பயப்படாமே வா... சாந்தா. நான் எதுக்கு இருக்கேன்?" நித்தியன் செல்ஃபோனை அணைத்துவிட சாந்தா, தன் கையிலிருந்த செல்ஃபோனை மௌனமாய் முகுந்தனிடம் நீட்டினாள்.

அவன் கேட்டான்.

"இப்ப என் மேல நம்பிக்கை வந்ததா?"

"ம்..."

"போலமா?"

"ம்...."

"வாங்க! காரை பக்கத்து ரோட்ல பார்க் பண்ணியிருக்கேன்."

முகுந்தன் நடக்க ஆரம்பித்து விட, சாந்தா குழப்பம் மண்டிய முகத்தோடு அவனைப் பின் தொடர்ந்தாள்.

கார் பெசண்ட் நகருக்குள் நுழைந்து கலாஷேத்ரா காலனியின் எல்லையைத் தொட்டு போகன் வில்லா பூக்கள் பூத்துக் கொட்டிய ஒரு பங்களாவுக்குள் பிரவேசித்தது. போர்ட்டிக்கோவுக்குள் நின்றது.

முகுந்தனும், சாந்தாவும் காரைவிட்டு இறங்கினார்கள்.

"வாங்க... சாந்தா..."

உள்ளே கூட்டிப் போனான்.

பங்களா நிசப்தமாக இருந்தது. ஹால் பெரிதாய் விரிந்து ரெண்டு பக்கமும் வளைந்து செல்லும் மாடிப்படிகளைக் காட்டியது.

ஹாலுக்குள் நுழையும் போதே, பக்கத்து அறையிலிருந்து வெளிப்பட்டான் நித்தியன்.

"வா... சாந்தா...!"

"என்னங்க இதெல்லாம்...?" முகம் முழுக்க வியர்த்து பொடிந்து இருக்க, சாந்தா அழுகைக்குரலோடு கேட்டாள். முகுந்தன் நகர்ந்து போய்விட, புன்னகை செய்தான் நித்தியன்.

"டோண்ட் கெட் டென்ஷன்! மொதல்ல இப்படி வந்து உட்கார்." சோபாவைக் காட்டினான்.

சாந்தா உட்கார்ந்தாள். அவளுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தபடியே நித்தியன் கேட்டான்.

"இன்னிக்குக் காலையில ஒன்பது மணிக்கு உனக்கு ஒரு ஃபோன் வந்திருக்குமே?"

"ஆமா...."

"ஃபோனில பேசினவர் என்னைப்பத்தி மோசமா பேசியிருப்பாரே?"

"ஆமா! உங்களுக்கும் விசாலிக்கும் நேத்து ராத்திரி சோழா ஹோட்டலில் நிச்சயதார்த்தம் ஆயிட்டதா சொன்னார்."

"அப்புறம்?"

"நீங்க ஜெயிலுக்குப் போகக் காரணம் பம்பாய் ஏர்போர்ட்ல ஒரு பெண்ணை கற்பழிக்கப் பார்த்தீங்களாம்."

"அவ்வளவுதானா?" நித்தியன் சோபாவுக்கு சாய்ந்து கொண்டு சிரிக்க, சாந்தா கவலையாய் கேட்டாள்.

"ஃபோன்ல பேசினது யாருங்க?"

"சொன்னா உனக்கு ஆச்சரியமாயிருக்கும்"

"யாரு?"

"உன்னோட வருங்கால மாமனார்."

"உங்க அப்பாவா?"

"அவரேதான்! நான் குளியலறையில இருக்கிறதா நெனைச்சுக்கிட்டு, அவர் கார்ட்லஸ் டெலிஃபோனை மொட்டை மாடிக்குக் கொண்டு போய் பேசிட்டிருந்ததை நான் கேட்டேன்.

"நம்ம காதல் விஷயம் உங்கப்பாவுக்குத் தெரியாதுன்னு சொன்னீங்க?"

"நானும் அப்படித்தான் நினைச்சுட்டிருந்தேன். பட் அவருக்கு எப்படியோ தெரிஞ்சிருக்கு."

"எப்படி?"

"தெரியலை! அதைப் பத்தி நாம இப்போ கவலைப்பட வேண்டிய அவசியமும் இல்லை... அந்த ஜெக்தீஷ் மூலமா விஷயம் தெரிஞ்சிருக்கலாம்."

"ஜெக்தீஷா.... யாரது?"

"விசாலிக்கு 'ரூபா'ன்னு ஒரு ஃபிரண்ட். அந்த ரூபாவோட ஹஸ்பெண்ட் பேர் ஜெக்தீஷ். அவனுக்கு நம்ம காதல் விஷயம் தெரிஞ்சிருக்கு! நேத்து ஹோட்டல்ல பார்ட்டியிலேயே வெச்சு என்கிட்ட தனியா கேட்டான்."

"ஜெக்தீஷுக்கு விஷயம் தெரிஞ்சிருந்தா அது ரூபாவுக்கும் ரூபாகிட்டேயிருந்து விசாலிக்கும் தெரிஞ்ச மாதிரிதானே?"

"இந்த சந்தேகத்தை ஜெக்தீஷ்கிட்டே நானும் கேட்டேன். அவன் இந்த விஷயம் வேற யாருக்கும் தெரியாதுன்னு சொன்னான்."

"ஜெக்தீஷ் பொய் சொல்றான்னு நினைக்கிறேன்."

"நோ.... நோ.... விசாலிக்கு நம்ம காதல் விவகாரம் தெரிஞ்சிருந்தா இத்தனை சந்தோஷமா இருக்க மாட்டா."

"ஜெக்தீஷ் அவ்வளவு ஸ்ட்ரிக்டா இருக்கிற பட்சத்தில் உங்க அப்பாசிட்டேயும் சொல்லியிருக்க மாட்டார். உங்கப்பாவுக்கு முன்னாடியே நம்ம காதல் தெரிஞ்சிருக்கும்னு நினைக்கிறேன்."

"அப்படியும் இருக்கலாம். இல்லேன்னா, என்னோட கல்யாண விஷயத்துல இவ்வளவு ஆர்வம் காட்ட மாட்டார். ஒரு பொய் நாடகத்தையும் என்கிட்டே ஆடிக் காட்டியிருக்கமாட்டார்."

"பொய் நாடகமா?"

"ம்... நாடகம்தான் போட்டார். ஓரங்க நாடகம். கம்பெனி நஷ்டத்துல ஓடிக்கிட்டு இருக்காம். ஏகப்பட்ட நஷ்டமாம். அந்த நஷ்டத்தையெல்லாம் சரி செய்ய விசாலியோட அப்பா ஒத்துக்கிட்டாராம். அந்த நன்றிக்காக நான் விசாலியைக் கல்யாணம் பண்ணிக்கணுமாம். நான் கல்யாணம் பண்ணிக்க மறுத்தா அவர் துப்பாக்கியால சுட்டுகிட்டு தற்கொலை பண்ணிக்குவாராம்."

"அய்யய்யோ..."

"என்ன அய்யய்யோ"

உங்கப்பா சொன்னது உண்மையா இருந்துடப் போகுதுங்க"

"அது உண்மையில்லைன்னு நேத்து ராத்திரி ஹோட்டல்ல பார்ட்டி நடக்கும் போதே தெரிஞ்சுக்கிட்டேன்."

"எப்படி?"

"என்னோட அப்பாவை பார்ட்டி முடிஞ்சதும் வழியனுப்பறதுக்காக விசாலியோட அப்பா காருக்குப் பக்கத்துல வந்தார். விசாலி கொஞ்சம் தள்ளி என்கிட்டே 'தொண தொண'ன்னு ஏதேதோ பேசிக்கிட்டிருந்தா. அவ பேசறதை நான் காது கொடுத்து கேட்காமலே எங்கப்பா என்ன பேசிட்டிருக்கார்ங்கிறதை உன்னிப்பா கவனிச்சேன். அதுல அவர் பேசின ஒரு வாக்கியம் எல்லா உண்மைகளையும் வெளியே கொண்டு வந்துருச்சு"

சாந்தா நிமிர்ந்தாள்.

"அவர் என்ன சொன்னார்?"

"நான் போட்ட பிஸ்டல் நாடகம் நல்லாவே ஓர்க் பண்ணியிருக்குன்னு சொன்னார். அந்த நிமிஷத்திலிருந்தே நான் ஜாக்கிரதையாயிட்டேன். அவரோட நடவடிக்கைகளை கண்காணிக்க ஆரம்பிச்சேன். இன்னிக்கு காலைல எட்டு மணியிலிருந்தே என்னை குளிக்கப் போகலையா... குளிக்கப் போகலையான்னு கேட்டுக்கிட்டு இருந்தார். நான் குளிக்கப்போகிற நேரத்தில் இவர் என்னத்தான் பண்ணப் போகிறார்னு தெரிஞ்சிக்கிறதுக்காக பாத்ரூமுக்குள்ளே நுழைஞ்சு ஷவரை திருப்பிட்டு வெளியே வந்து அவரை வாட்ச் பண்ணினேன். அவர் கார்ட்லெஸ் டெலி ஃபோனோட மாடிக்குப் போனார். நானும் ஃபாலோ பண்ணிப் போய் அவரை அப்ஸர்வ் செய்தேன். அவர் உனக்கு ஃபோன் பண்ணி மிரட்டினதையும் கேட்டேன். எனக்கு ஒரே ஷாக்."

சாந்தா குறுக்கிட்டு கேட்டாள்.

"சரி... நீங்க சொன்னபடி பத்து மணிக்கு பனகல்பார்க் பஸ் ஸ்டாப்புக்கு ஏன் வரலை?"

"அவர் என்னோட காரை ஃபாலோ பண்ண டிரைவரை ஏற்பாடு பண்ணியிருக்கிற விஷயத்தைத் தெரிஞ்சுகிட்டேன். ஆனா, எதையும் காட்டிக்காம குளிச்சு சாப்பிட்டுட்டு காரை எடுத்தேன். டிரைவரும் இன்னொரு கார்ல என்னை ஃபாலோ பண்ணினான். நான் அவனை ஏமாத்துறதுக்காக சிட்டியை ரெண்டுதரம் ரவுண்ட் பண்ணிட்டு ஒரு ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் கட்டட பார்க்கிங்கில் காரை நிறுத்திட்டு காம்ப்ளக்ஸுக்கு உள்ளே போய் அந்தக் கட்டட பின்பக்க வழியா வந்து பனகல் பார்க் வர்றதுக்காக ஒரு ஆட்டோ தேடிட்டு இருந்தேன். அந்த சமயத்துல என் ஃப்ரண்ட் முகுந்தன் அந்த வழியா கார்ல வந்தான்." நித்தியன் மேற்கொண்டு பேச்சைத் தொடர்வதற்குள் கூல்ட்ரிங்க்ஸ் பாட்டில்களோடு முகுந்தன் உள்ளறையிலிருந்து வந்தான்.

"விஷயம் என்னான்னு கேட்டேன். சொன்னான். சரி... நீ என் வீட்ல இரு... நான் போய் பஸ் ஸ்டாண்டில் காத்துக்கிட்டிருக்கிற உன் 'ஜோடி' சாந்தாவை கூட்டிட்டு வர்றேன்னு சொல்லி, நித்தியனை இந்த வீட்ல டிராப் பண்ணிட்டு உங்கசிட்டே வந்தேன்."



சாந்தாவின் முகம் இப்போது அதிகமான வியர்வையில் இருக்க குரலில் கலவரம். நித்தியனை ஏறிட்டாள்.

"என்னங்க!"

"ம்..."

"இவ்வளவு பிரச்சனைகளுக்கு நடுவில் நாம கல்யாணம் பண்ணிக்கத்தான் வேணுமா?"

"கண்டிப்பா! இன்னும் ரெண்டு நாள்ல வரப்போற பௌர்ணமிக்கு நம்ம கல்யாணம்."

"..........."

(பௌர்ணமி தொடரும்)

---

# சதாம் உசேன்

## 21

**அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை**

நிறைய வளைவு, சரிவுக்குப் பின் ஜீப் குலுங்கி நின்றது.

விருந்தினர்கள் இருவரும் கீழே இறக்கப்பட்டார்கள். அவர்கள் கண்களை மறைத்திருந்த கட்டு அவிழ்த்துவிடப்பட்டது.

வெகு நேர இருட்டுக்குப்பின் வெளிச்சத்தைக் கண்ட விருந்தினர்கள், கண்ணைக் கசக்கிக் கொண்டு சுற்று முற்றும் பார்த்தார்கள். அது என்ன இடம் என்பதை அவர்களால் யூகிக்கமுடியவில்லை. வட ஈராக்கிலுள்ள சற்று தலை மறைவான பகுதி என்று மட்டும் தெரிந்தது.

போர்ராளிகளின் முகாமுக்கு வெளியே நின்று கொண்டிருந்த பர்ஸானி அவர்களை வரவேற்றார்.

தங்களை சி.ஐ.ஏ. ஏஜெண்டுகள் என்று பர்ஸானியிடம் அறிமுகம் செய்து கொண்டார்கள் விருந்தினர்கள்!

"குர்து இன விடுதலைக்காக நீங்க நடத்துற போராட்டத்தைப் பத்தி துண்டு துண்டா நிறையச் செய்திகள் கேள்விப்பட்டிருக்கோம். அதை முழுசா புரிஞ்சுக்கலாமேனு வந்தோம்..." என்று பீடிகை போட்டார்கள் சி.ஐ.ஏ. ஏஜெண்டுகள்.

"உட்காருங்க, பேசுவோம்"- நீள பெஞ்சை சுட்டிக் காட்டினார் பர்ஸானி. ஏஜெண்டுகள் உட்கார்ந்தார்கள்.

பர்ஸான் ஆரம்பித்தார்:

"நாங்க அரேபியர்கள் இல்ல. குர்து இனத்தைச் சேர்ந்தவங்க..."

"ஆனா, நீங்களும் முஸ்லிம்தானே?" ஒரு ஏஜெண்ட் கேட்டார்.

"ஆமா! எங்க இனத்துல, ஏறக்குறைய எல்லோருமே முஸ்லிம்கள்தான். ஆனா, குர்து இனத்து முஸ்லிம்கள். ஈராக் ஜனத்தொகையில் 20 சதவிகிதம் நாங்கதான். நாங்க மைனாரிட்டி இனம். வட ஈராக்கில் காலங்காலமா வாழ்ந்துக்கிட்டிருக்கோம்...!

அரேபியர் எல்லோரும் ஓரினம்னு சொல்றாங்க. அதுபோல குர்து எல்லோரும் ஓரினம்னு நாங்க சொல்றோம். அரேபியர் எல்லோரும் ஒரே தேசம்னு அவங்க சொல்ற மாதிரி நாங்களும் குர்துகளுக்கு- குர்து இனத்துக்கு ஒரு நாடு வேணும்னு சொல்றோம். இது தப்பா? சொல்லுங்க!" என்றார் பர்ஸானி.



**ராஜையா**

"தப்பில்லை" என்று தலையைக் குலுக்கினார்கள் சி.ஐ.ஏ. ஏஜெண்டுகள்.

பர்ஸானி சிரித்தார். "இப்படித்தான் அந்தக் காலத்துல வெள்ளைக்காரங்களும் சொன்னாங்க!"

"வெள்ளைக்காரங்களா?"

"ஆமா! முதல் உலகப் போர் ஆரம்பிச்சப்ப வெள்ளைக்காரங்க இங்கு வந்தாங்க. எங்க இனத் தலைவர்களைச் சந்திச்சுப் பேசினாங்க. 'உங்க நாட்டை நாங்க பிடிக்கப் போறோம். எங்களுக்கு ஆதரவு குடுங்க'ன்னு கேட்டாங்க. அப்படி ஆதரவு குடுத்தா, வெள்ளைக்காரங்க ஆட்சி வந்ததும் குர்து இன மக்கள் நிறைய இருக்கிற பகுதிகளையெல்லாம் ஒண்ணா இணைச்சு, உங்களுக்குன்னு ஒரு தனி நாடு உருவாக்கித் தர்றோம்னு சொன்னாங்க. வெள்ளைக்காரங்க பேச்சை எங்க ஆளுக அப்படியே நம்பி அவங்களுக்கு ஆதரவு குடுத்தாங்க. வெள்ளைக்காரங்களும் ஜெயிச்சு ஆட்சிக்கு வந்தாங்க. ஆனா, எங்களுக்கு குடுத்த வாக்குறுதியைத்தான் காத்துல பறக்க விட்டுட்டாங்க..." என்றார் பர்ஸானி. அவர் முகத்தில் வேதனையும், ஆத்திரமும் குழம்பித் தெரிந்தது.

"வெள்ளைக்காரங்களை விரட்டியடிச்ச பிறகு ஆட்சிக்கு வந்த எந்த அரசும் குர்து இன மக்களோட நியாயமான கோரிக்கையை ஏத்துக்கல. நாங்க தனிநாடு கேட்டுப் போராட்டம் நடத்தும் போதெல்லாம் ராணுவத்தை அனுப்பி எங்க ஜனங்களை கொன்று குவிச்சாங்க. பக்கர் சதாம் ஆட்சியும் அதே பாதையில்தான் போகுது. எங்க இனம் கௌரவமா தலைநிமிர்ந்து வாழணும்னா எங்களுக்குன்னு ஒரு தனி நாடு வேணும். அதை சாதிக்கிறதுக்காக தலைமுறை தலைமுறையா ஆயுதப் போராட்டம் நடத்திக்கிட்டேதான் இருப்போம்!" என்றார் பர்ஸானி ஆவேசத்துடன்.

அவர் சொன்னதை முழுக்க ஏற்றுக் கொள்வது போல் தலையாட்டினார்கள் ஏஜெண்டுகள்.

"உங்க பக்கம்தான் நியாயம் இருக்கு. அதைப் பக்கரோ, சதாமோ எந்தக் காலத்துலயும் புரிஞ்சுக்கவே முடியாது. அவங்க ஆட்சியை எதிர்த்து நீங்க ஆயுதப் போராட்டம் நடத்துறது ரொம்பச் சரி. உங்க லட்சியம் நிறைவேற நாங்க ஏதாவது உதவி செய்யணுமா? சொல்லுங்க!" ஏஜெண்டுகள் நைசாக வலை விரித்தார்கள்.

(தொடர்ந்து வரும்)


படிப்பகம்

www.padippakam.com

# உதட்டில் ஒரு முத்தம்

## 10

**இதுவரை**

அரவிந்த் ஒரு பைலட்.
அவனது மனைவி ஜ்யோதி.
அவர்களது நண்பன் விக்ரம்.
அவனுக்கு ஜ்யோதி மீது ஆசை.
இதற்கிடையே அரவிந்த், அமைச்சர் பிரகாஷ் குப்தாவுடன் பைலட்டாக ஓடக்கரை கிராமத்திற்குச் செல்கிறான்.
அக்கிராமத்தை வளைத்துப்போட அமைச்சர் திட்டமிட அதை எதிர்க்கிறார்கள் கிராம இளைஞர்கள்.
பொலிஸ் சுடுகிறது.
சீனு காயமடைகிறான்.
அவன் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறான்.
கிராம இளைஞர்கள் கொதிக்கின்றனர்.
அமைதி வழி சரிப்படாது என்று ஆயுதம் ஏந்த முடிவு செய்கின்றனர்.
நிலத்தை அபகரிப்பதில் அமைச்சர் தீவிரம் காட்டுகிறார்.
அமைச்சரைக் கொல்ல இளைஞர்கள் திட்டமிடுகின்றனர்.
சீனு மருத்துவமனையில் இறக்கிறான்.

இனி....

அரவிந்த் மேஜைமீது இருந்த விக்ரமின் புறங் கையைப் பிடித்து அழுத்தினான். "எனக்கு உன் மேல் எந்த வருத்தமும் இல்லை விக்ரம். உன் இடத்தில் நான் இருந்திருந்தால் இன்னும்கூட மோசமாக நடந்து கொண்டிருப்பேனோ என்னவோ?"

"இப்பொழுது எதற்காக வந்திருக்கிறாய்?" விக்ரம் உறுமினான்.

"எனக்குக் கோபமூட்ட வேண்டுமென்று பார்க்கிறாய், விக்ரம். கோபம் வராது. ஏனென்றால் நம் நட்பு அப்படி... ஏழு வருடம் ஒன்றாய் உருண்டிருக்கிறோம். ஒன்றாய் புரண்டிருக்கிறோம். நம் நட்பைப் பார்த்து ஏர்ஃபோஸில் எத்தனையோ பேர் பொறாமைப் பட்டிருக்கிறார்கள். ஜ்யோதியின் அப்பாகூட எப்படிக் கிண்டலடித்திருக்கிறார்? ட்வின் டாம்ஸ் என்றுதானே ஜ்யோதியே நம்மைக் கலாட்டா செய்திருக்கிறாள்."

"என் தோளில் கை போட்டு வேறு திசையைப் பார்க்க வைத்துவிட்டு, நீ ஜ்யோதியைத் தட்டிப் பறித்து விட்டாய்."

"வாட் நான்சென்ஸ்? ஜ்யோதியை விரும்புவதாக நீ ஒருமுறை கூட என்னிடம் சொன்னதில்லை. சொல்லியிருந்தால் விலகியிருப்பேன். ஜ்யோதி என்னை விரும்பினாள். அவளை நான் விரும்பினேன்... தப்பா?"

"நான் விரும்புவது தப்பா?"

"தப்பே கிடையாது விக்ரம். பாழாய்ப் போன இந்தக் காதலில் இரண்டுபேர் சேர்ந்து தீர்மானத்திற்கு வரவேண்டியிருக்கிறது. என் யமஹாவைக் கேள். இங்கேயே விட்டுவிட்டுப் போய்விடுவேன். அதற்கு அரவிந்த் யார், விக்ரம் யார் என்று தெரியாது. ஆனால் ஜ்யோதி மெஷின் இல்லை. அவளுக்கு மனசு இருக்கிறது. விருப்பு வெறுப்பு இருக்கிறது. அவள் உன்னிடம் எவ்வளவு நட்பாக இருந்தாள். எவ்வளவு நட்பாக இருக்க விரும்புகிறாள்!".

"மை ஃபுட்"

"குடித்துவிட்டு அவளைப் பார்க்க வராதே விக்ரம். அப்போதுதான் தடுமாற்றம் வருகிறது."

"அவளால்தான் குடிக்க ஆரம்பித்தேன்."

"ஜ்யோதியை விட அழகான பெண் உனக்குக் கிடைப்பாள்."

"ஆனால் அவள் ஜ்யோதி ஆக மாட்டாள். உன்னை எதற்குத் தூது அனுப்பினாள். வீட்டிற்கு வரக்கூடாது என்று உத்தரவு போடவா?"

"நீ அவளை ரொம்பவும் பயமுறுத்தி விட்டாய், விக்ரம்."

"ஜ்யோதி ரொம்ப சுத்தமானவள் என்று நீ நினைத்துக் கொண்டிருக்கிறாயா?"



"விக்ரம்!"

"ஹிமாச்சல் பனியில் உருண்டபோது, அவளை முத்தமிட்டிருக்கிறேன் என்பதை உன்னிடம் சொல்லியிருக்கிறாளா?"

"குடித்திருக்கும்போது உன்னிடம் பேச வந்ததே தப்பு."

"தொட்டுக்கொள்ள நான் அவளுக்குப் பலமுறை தேவைப்பட்டிருக்கிறேன். உருட்டி வைத்த வெண்ணெய் போல உன் முகம் இருந்ததும் விழுந்துவிட்டாள். அவளுடைய இடுப்பும், மாரும் உன்னை நண்பனுக்கே துரோகம் செய்ய வைத்து விட்டது."

"விக்ரம், நீ என்னைப் புரிந்துகொள்ளவே மாட்டாயா?"

"என்னடா புரிந்துகொள்ள வேண்டும்?" விக்ரமின் முகம் திடீரென்று சிவந்தது. சூடானது. "நான் ஆசைப்பட்டதையெல்லாம் தட்டிப்பறிக்கும் உன் மூஞ்சியைப் பார்க்கவே எனக்குப் பிடிக்கவில்லை. கெட்-அவுட்" விக்ரம் எழுந்தான். கண்ணாடிக் கோப்பையை எடுத்தான். அதிலிருந்த விஸ்கியை அரவிந்தின் முகத்தில் விசிறி அடித்தான். "கெட்-அவுட்."

●●●

**கை**கள் இற்றுப் போயின; கால்கள் கெஞ்சின; நெஞ்சு தவித்தது; தலையில் கிண்ணென்று ஒலித்தது; காதுகள் அடைத்தன. ஆனாலும் அந்த மூன்று பேரும் சளைக்காமல் தண்ணீரைக் கிழித்தார்கள். கிட்டத்தட்ட ஒரு கிலோமீட்டர் தூரம் ஓடையில் எதிர் நீச்சல் போட்டிருந்தார்கள்.

கரை தொட்டுத் திரும்பி புறப்பட்ட இடம் நோக்கி நீச்சலடித்தார்கள்.

ஒரு சிறிய பாறைமீது நின்றிருந்த தேவேந்திரன் அந்த மூவரையும் பார்த்துக் கையசைத்து உற்சாகமூட்டினான்.

மூவரின் தோள்களிலும் புதிய வலிமை சேர்ந்தது. அசைவுகளில் வேகம் கூடியது. ஹப்...ஹப்...ஹப்...

கைலாஷின் முகம் சிவந்து போனது. கண்கள் கோவைப் பழங்களாயின. வெறியுடன் இயந்திரம் போல கைகளையும், கால்களையும் வேகம் வேகமாக அசைத்தான். மற்ற இருவரையும் மெல்ல மெல்லக் கடந்தான். தம் பிடித்து முன்னேறி பாறையருகே கரையேறி ஓடிப்போய் தேவேந்திரனைக் கட்டிப்பிடித்தான். அந்த வேகத்தில் இருவருமே கீழே புரண்டனர்.

ப்ஹா...ப்ஹா... என்று நாய் வயிறு போல கைலாஷிற்கு மூச்சிறைத்தது. கால்கள் நடுங்கின. ஆனந்தத்தில் கண்களில் நீர் பெருகிப் பெருகி வழிந்தது.

தேவேந்திரன் கைலாஷிற்குக் கண்களில், நெற்றியில், கன்னங்களில், ஈரமார்பில் என்று முத்தங்கள் பொழிந்தபோது இரண்டாவதாகக் கரையேறிய அர்த்தநாரி வந்து அவர்கள்மீது விழுந்து அணைத்துக் கொண்டான்.

**சுபா**

♦♦♦

**செ**ன்னை. விழா மேடை.

இயந்திரத் துப்பாக்கிகள் சுமந்த காவல் படையினர் எட்டுத்திக்கிலும் பார்வை ஓட்டிக் கொண்டிருந்தனர். சொல்லி வைத்ததுபோல மக்கள் மறுபடி மறுபடி கைதட்ட, மைக் பிடித்து பாதுகாப்பு அமைச்சர் ஆவேசமாகப் பேசிக்கொண்டிருந்தார்.

செக்யூரிட்டி சீஃப் மோகனன் வெளிர் சாம்பல் சஃபாரி சூட்டில் மேடைக்குக் கீழே நின்று நான்கு புறமும் பார்வையை ஓட்டி, தன் ஏற்பாடுகளை இரசித்துக் கொண்டிருந்த வேளையில் திடீரென்று மேடையில் ஒரு மின்னல், தொடர்ந்து இடி. மின்னல் இல்லை. இடி இல்லை. வெடிகுண்டு.

மேடையையே காணோம். எல்லாம் புகையாகி இருந்தது. மோகனன் திடுக்கிட்டு விழித்தார். உடம்பு முழுவதும் நனைந்திருந்தது.

ச்சே, கனவு! ஆனால் எவ்வளவு தத்ரூபமான கனவு! தான் படுத்திருந்தது ஐந்து நட்சத்திர ஹோட்டலின் டீலக்ஸ் ரூம் என்று புரிவதற்கு அவருக்கு சில கணங்கள் பிடித்தன. இங்கே விழா மேடை இல்லை. மைக் இல்லை. வெடிகுண்டு இல்லை. புகை இல்லை.

கட்டிலிலிருந்து எழுந்து விட்டார். ஏஸியை மீறி எப்படி வியர்த்திருக்கிறது. ஸ்போர்ட்ஸ் பனியனைக் கழற்றி அதாலேயே தன் பரந்த மார்பையும், முதுகையும் துடைத்து லாண்டரிக் கூடையில் போட்டார்.

அந்தக் கனவு அவரது தூக்கத்தை மிகவும் கலைத்து விட்டது. மெல்லிய ஷவருக்குக் கீழே நின்று தன் உடலை குளிர்ந்த நீரில் நனைத்துக் கொண்டார். துடைத்த மார்பு நிறைய பவுடரை வாரி இறைத்துக் கொண்டார். பெட்டி திறந்து டிரஸ் உருவி மாட்டிக் கொண்டார். வாட்ச் பார்த்தார்.

நள்ளிரவு தாண்டி இரவு மணி ஒன்றை நெருங்கிக் கொண்டிருந்தது. மோகனன் புறப்பட்டு விட்டார்.

□□□

**மோ**கனன் ஆறடிக்கு சற்று அதிக உயரம். கனத்த உடம்பு, முகத்தில் வலிமை தெரியும் எலும்புகள், சுட்டெரிக்கும் கூர்மையான கண்கள். நீண்ட மூக்கு. அடர்ந்த மீசை. கண்களில் எப்போதும் இருக்கும் அதிகாரமும், உதட்டுச் சுழிப்பில் இருக்கும் அலட்சியமும் அவருக்குத் தனி மிடுக்குச் சேர்த்தன.

ஜிப்ஸியில் வந்து இறங்கியதும், கடற்காற்று சிலீரென்று அவரை மோதியது.

கடற்கரையில் அமைக்கப்பட்டிருந்த விசேஷ மேடையில் கடைசி நிமிட ஏற்பாடுகள் இன்னமும் நடந்து கொண்டிருந்தன. கடற்கரை மணலில் ஆங்காங்கே செருகப்பட்ட சவுக்குக் கழிகளில் ட்யூப் லைட்கள் கட்டப்பட்டுக் கொண்டிருந்தன.

மேடையிலிருந்து நூறு மீட்டர் தள்ளித்தான் முதல் வரிசை உட்கார கயிறு கட்டப்பட்டிருந்தது. மக்களைச் சிறுசிறு கூட்டங்களாகப் பிரித்து அமரச் செய்ய கயிறுகளால் சதுர அமைப்புக்கள் உருவாக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு சதுரத்திற்கும் நான்கு மூலைகளிலும் கண்காணிப்பு பொலிஸை நிறுத்த தமிழக பொலிஸ் ஒத்துக் கொண்டிருந்தது. செக்யூரிட்டி ஏற்பாடுகளைக் கவனிக்கும் தமிழக டி.ஐ.ஜி. யுடன் ஒவ்வொரு அம்சமாகப் பேசி அலசி, தீர்மானமாக ஒரு முழுநாள் ஆகியிருந்தது.

மக்களிடம் எந்த அசைவு ஏற்பட்டாலும் அதை உடனே கவனிக்க வேண்டும் என்பதற்கு, பிரமாண்டமான வெள்ள வெளிச்சங்களை அவர்கள் மீது பொழிய ஹைபவர் விளக்குகள் அங்கங்கே நிறுவப்பட்டிருந்தன. ஆனாலும் மோகனனுக்கு ஏனோ திருப்தியில்லை. மூடப்பட்ட ஒரு அரங்கமாக இருந்தால், அவரால் இன்னும் கவனம் செலுத்தி, பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய முடியும். திறந்த வெளி அரங்கம்-அதுவும் கடற்கரை போன்ற பரந்த திறந்தவெளி அரங்கம் என்னும்போது, அவருக்கு சவால் அதிகமாகி விட்டது.

குண்டு துளைக்க முடியாத கண்ணாடிச் சுவர் முன்புறம் மேடையை மூடி இருந்தது. ஆனாலும் மேடை வெடிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா?

மேடைக்கடியில் ஏதாவது வெடிகுண்டு புதைக்கப்பட்டிருக்கலாமா?

பொறுப்பில் இருந்த பொலிஸ் அதிகாரியைக் கூப்பிட்டார். தன் சந்தேகத்தைச் சொன்னார். 'சரியான எழவு பிடிச்சவன்யா நீ! அர்த்த ராத்திரியில் வெடிகுண்டு, வெங்காய குண்டு என்று பிறாண்டிக் கொண்டு' என்பதுபோல் மோகனன் மீது பார்வையை வீசிய அந்த அதிகாரி, அவசரமாக ஒயர்லஸிற்கு நடந்து போனார்.

திறமையான நாய்கள் கொண்டு வரப்பட்டு மேடைக்குக்கீழ் முகர்ந்து முகர்ந்து கால்களால் மணலைக் குழித்துத் தேடின. திடீரென குரைத்தன.

(○—வரும்—○)

---

# கவியரசுவின் சுயசரிதை

## 29

கவியரசு கண்ணதாசன் எழுதிய—அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டிகள்' இவை....

படம் பாதியில் நின்றது. பணம் கொடுத்தவருக்கு அவ நம்பிக்கை வந்தது. அவர் கோர்ட்டுக்குப் போனார்; அவன் வீட்டுக்குப் போனான்.

தேர்தலில் மூவாயிரம் ரூபாய் கடன் பட்டு அதைத் தீர்க்க சினிமா படம் எடுக்க வந்து அதில் அறுபத்திரெண்டாயிரம் ரூபாய் கடனாகிவிட்டது. ஆனாலும் படம் எடுக்கும் ஆசை அவனை விடவில்லை. முன்பு தேர்தலில் வாக்குப்பதிவு நாளன்று காரோடு வந்து நூறு ரூபாய் உதவினாரே அம்பி என்ற நண்பர், அவரைத் தேடித் திருச்சிக்குப் புறப்பட்டான். திருச்சிக் காற்று அவனுக்குச் சாதகமாக அடித்தது. அம்பியும் அவரது நண்பர்களும் அவனுக்கு உதவ முன்வந்தார்கள். கொஞ்சம் பணமும் இந்துஸ்தான் டிராவெலர் வேனும் கொடுத்தார்.

அன்று ஜனவரி 5-ந் தேதி. பொழுது விடிந்தால் ஆறாம் தேதி. அன்றுதான் சென்னையில் நேருவுக்குக் கறுப்புக்கொடி காட்ட தி.மு.கழகம் திட்டமிட்டிருந்தது. 5ஆம் தேதியன்றே பலபேரைக் கைது செய்திருக்கிற செய்தி திருச்சிக்கு வந்து விட்டது. பணத்தையும் காரையும் பெற்றுக் கொண்ட அவன் சென்னைக்குப் போனால் தன்னைக் கைது செய்து விடுவார்கள்; பணம் கொடுத்தவர்களுக்கு அவநம்பிக்கை வந்துவிடுமே என்று பயந்தான். அதனால் சென்னைக்கு வராமல் நேரே பெங்களூருக்குச் சென்றான்.

கறுப்புக்கொடி நிகழ்ச்சி முடிந்தவுடன் சென்னைக்குத் திரும்பினான்.


கறுப்புக்கொடி நிகழ்ச்சிபற்றி ஒரு கவிதை எழுதினான். அந்தக் கவிதையின் மூலம் தான் போராட்டத்தில் கலந்துகொள்ளாத 'பாவ'த்தைத் துடைத்துக் கொண்டான்.

சரத்சந்திரரின் 'சந்த்ரநாத்' என்ற கதையைத் தழுவி 'மாலையிட்ட மங்கை' என்ற தலைப்பில் ஒரு கதை எழுதினான். பதினேழு பாட்டுக்களோடு அதனைப் படமாகத் தயாரித்தான். மூன்றே மாதங்களில் முடித்துவிட்ட அந்தப் படம் அவனுக்கு வெற்றியைத் தேடித் தந்தது.

ஆனால் அந்தப் படத்தை எடுத்த விலைக்கே ஒருவருக்கு விற்று விட்டான். அதில் லாபம் முழுவதும் அவருக்குப் போய் விட்டது. அடுத்த 'சிவகெங்கைச் சீமை' என்ற தலைப்பில் ஒரு படத்தை எடுத்தான். அந்தப்படம் எடுக்கும்போதே அதுபற்றி அரசியலில் கட்சி-பிரதி கட்சிகள் தோன்றின.

அதை வேறொரு படத்திற்குப் போட்டியாகவே அவன் எடுத்தான். அந்தப் படம் எவ்வளவோ தரமான படமாக இருந்தும்கூட-போட்டிப் படத்தின் நட்சத்திர மரியாதைக்கு முன் வீழ்ச்சியடைந்துவிட்டது. அறுபத்திரெண்டாயிரமாக இருந்த கடன் ஒன்றரை இலட்சமாக மாறிற்று.

இந்த நிலையில் சென்னை மாநகர் மன்றத் தேர்தல் வந்தது. பொதுத் தேர்தல் முடிந்து திருக்கோஷ்டியூரில் அவன் தோல்வியுற்று, சென்னைக்கு திரும்பிய உடனேயே சென்னையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றியைக் கண்டான்.



அப்போதே 'தென்றலில்' ஒரு தலையங்கம் எழுதினான். 'அடுத்த மாநகர் மன்றத் தேர்தலில் முன்னேற்றக் கழகத்தவரே மேயராக வருவார்' என்று அதில் அவன் குறிப்பிட்டான்.

அந்த நம்பிக்கையைத் துணைகொண்டு இப்போது தேர்தல் வேலைகளிலே இறங்கினான். அந்தத் தேர்தலில் சென்னையில் தி.மு.கவுக்காக அதிகம் உழைத்தவர்கள் அவனும் நடிகர் டி.வி. நாராயணசாமியுமேயாவர்.

உடலுழைப்பு, வாகன உதவி, பொருள் உதவி அனைத்தும் அவர்கள் இருவருமே செய்தார்கள். சிவகெங்கைச் சீமைப் படம் வெளிவருவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னால் தேர்தல் நடந்ததால் அவன் கையில் அதிகப் பணப்புழக்கம் இருந்தது. பல தொகுதிகளில் இவன் தன் பணத்தைச் செலவழித்தான். காய்கறிகளுக்குப் போடப்பட்டிருந்த வரிகளையே பிரசாரத்திற்குப் பொருளாகக் கொண்டான். அவன் எதிர்பார்த்ததுபோல் தி.மு.கழகம் பெரும்பான்மையாக வெற்றி பெற்றது. அண்ணாதுரையே திகைத்தார். ஏனென்றால் அவர் எதிர்பார்க்கவில்லை. வெற்றிபெற்ற கவுன்சிலர்கள் பலர் அவனது கம்பெனிக்கே முதலில் வந்து அவனுக்கு நன்றி தெரிவித்துவிட்டுப் போனார்கள்.

கடற்கரையில் மாபெரும் பாராட்டுக் கூட்டம், வெற்றி பெற்ற கவுன்சிலர்கள் வரிசையாக அமர்ந்திருக்கிறார்கள். நடுவிலே அண்ணாதுரை. அவர் பக்கத்திலே கருணாநிதி. கவுன்சிலர்கள் அறிமுகப்படுத்தப்படுகிறார்கள். பலர் பாராட்டிப் பேசுகிறார்கள்; தேர்தலில் கடுமையாக உழைத்த அவனும் மற்றவர்களும் அனாதைகள்போல் ஒரு மூலையில் அமர்ந்திருந்தார்கள்.

கருணாநிதி பேசுகிறார். அந்த வெற்றிக்குத் தானே கஷ்டப்பட்டவர்போல் பேசுகிறார். இவ்வளவுபேர் ஜெயிப்பார்கள் என்று ஏற்கனவே தனக்குத் தெரிந்ததாகவே பேசுகிறார்கள்.

அடுத்தாற்போல் அண்ணாதுரை சென்னை மக்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்கள். காங்கிரசை வீழ்த்திவிட்ட பெருமையைப் பேசுகிறார்கள். வெற்றிக்காக உழைத்தவர்கள் பட்டியலைச் சொல்கிறார்கள். அதில் தன் பெயரும் வரும் என்று அவன் காத்துக்கொண்டிருக்கிறான். அந்தோ, அப்படி ஒருவன் உலகத்தில் இருப்பதாகவோ, அவன் தேர்தலில் உழைத்ததாகவோ அவர் சிந்திக்கக்கூடவில்லை; அது மட்டுமா அவர் செய்தார்? வருணனைகளோடு ஒரு விஷயத்தை ஆரம்பித்தார்.

(சரிதம் தொடரும்)


படிப்பகம்

www.padippakam.com

"நீங்க வேற பொண்ணை கல்யாணம் பண்ணிக்கப் போறீங்களாமே?"

சங்கர் தவித்தான்.

புவனா இப்படிக் கேட்பாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

"நான்சென்ஸ்- விளையாடறியா? யார் சொன்னது?"

"உங்க சிஸ்டர்தான்."

மேலும் அவனுக்கு அதிர்ச்சி.

"பொய்..." மறுத்துப் பார்த்தான்.

"இல்ல... நீங்க சொல்றதுதான் பொய்... கல்யாணத்துக்கு நாள்கூட குறிச்சிட்டிங்க."

"நீங்க என்னை மறந்துட்டு வேற பொண்ணை கல்யாணம் பண்ணிக்கப்போற விஷயத்தை ஒப்பனா என்கிட்ட சொல்லியிருக்கலாம் சங்கர். நானே உங்களை கை கழுவிட்டு திடீர்னு பணக்காரனான எங்க மச்சான கல்யாணம் பண்ணிக்க இருந்தேன். ஸோ..."

சங்கர் நம்பமுடியாமல் அவளைப் பார்த்தான்.

மறுநாள்-

"ச்சே... எங்க அண்ணன்தான் அப்படி நடந்துக்கிட்டான்னா, நீங்களும் அப்படித்

# இதுவும் காதல் தான்



## பூங்கதிர்

"புவனா- உன்னைத் தவிர என் வாழ்க்கையில வேறொருப் பெண்ணா...நோ..."

"சினிமா டயலாக்கா? நல்லா நடிக்கிறீங்களே.." புவனா சிரித்தாள்.

தன் தங்கைமேல் சங்கருக்கு கோபம் வந்தது. பாவி, காதலி புவனாவை கை கழுவிவிட்டு வேறு வசதியான வீட்டுப் பெண்ணை கல்யாணம் பண்ணிக்க இருக்கும் விஷயத்தை புவனாவிடம் சொல்லியிருக்கிறாளே...

எல்லா உண்மைகளும் புவனாவிற்கு தெரிந்துவிட்டது. இனி மேற்கொண்டு என்ன பதில் சொல்லி நிலைமையை சமாளிப்பது எனத் தெரியாமல் சங்கர் குழம்பினான்.

புவனா இமைக்காமல் அவனைப் பார்த்தாள். சங்கர் மௌனமாகவே இருந்தான்.

"என்ன பேச்சையே... காணோம்..?" புவனா வார்த்தையால் சீண்டினாள்.

"புவனா...வந்து..."

தானா? பணத்துக்கு மயங்கிப்போகிற உங்களுக்கெல்லாம் ஏன் இப்படி? ஏன் காதலை அசிங்கப்படுத்தறீங்க?"

புவனாவிடம் சங்கரின் தங்கை சூடாசக் கேட்டாள்.

"ஸாரிம்மா.... கல்யாணத்துக்குப் பிறகு, 'புவனாவுக்குத் துரோகம் பண்ணிட்டமே'ன்னு என்னைக்காவது ஒருநாள் சங்கர் மனசு உறுத்தலாம். அந்த உறுத்தல் அவருக்கு வரக்கூடாதுன்னுதான் நான் அப்படி பொய் சொன்னேன். சத்தியமா எனக்கு மச்சான் யாருமே இல்லை."

புவனா கலங்கிய கண்களுடன் நடந்தாள். அவள் சொன்ன பொய்யில் கூட காதல் இருப்பதைப் பார்த்து சங்கரின் தங்கை மெய் சிலிர்த்தாள்.

# கேள்விக்குறி

நீண்டகால நகர்வின்பின் கப்பல் பயணம் இடம்பெறவுள்ள செய்தி அறிந்த மக்கள், கப்பலில் இடம்பிடித்து வெளியிடங்களுக்கு செல்வதற்காக யாழ் சிவில் நிர்வாக அலுவலகம் முன்பாகக் கூடியிருந்தனர். அவர்களில் ஒருவனாக செல்வமும் அங்கு வந்து சேர்ந்தான்.

"இண்டைக்குக் கப்பல் ஓடுதாமா? ஐயா!" என அங்கு நின்றவர்களில் ஒருவரிடம் செல்வம் கேட்டான்.

"கப்பல் போறபடியால்தானே ரிக்கற் கொடுக்கிறாங்கள்." என்ற பெரியவரின் வார்த்தை அவனுக்கு நிம்மதிப் பெருமூச்சைக் கொடுத்தது. அவனும் ரிக்கற்றைப் பெறுவதற்கு திரும்பியபோது, கப்பல் பயணத்துக்குரியவர்களை கப்பல் பயணத்துக்காக காங்கேசன்துறை துறைமுகத்துக்கு எடுத்துச் செல்வதற்குரிய பேரூந்துகள், சில ஒன்றன் பின் ஒன்றாக வந்து நின்றன.

பேரூந்தில் இருக்கைகளைப் பிடிப்பதற்காக எல்லோரும் போட்டா போட்டியுடன் ஏறினார்கள். செல்வமும் போட்டியிட்டு ஒரு இருக்கையைப் பிடித்து அதில் தனது பயணப்பையை வைத்துவிட்டு ரிக்கற் பெறுவதற்காக வெளியே வந்து அலுவலகத்துக்குள் புகுந்து கொண்டான்.

நீண்ட வரிசையில் அவனும் சேர்ந்து பல நிமிடங்களின் கரைவின் பின் ரிக்கற்றுடன் வெளியே வந்தான். அவனுக்கு அதிர்ச்சி ஒன்று காத்திருந்தது.

அவன் பயணப்பையை வைத்த பேரூந்து உட்பட எல்லா பேரூந்துகளையும் அங்கு காணவில்லை. ஒருபகுதி பயணிகளை எடுத்துக்கொண்டு அவை காங்கேசன்துறைக்குச் சென்றுவிட்டது. அவனது பயணப்பையும் அவற்றுடன் சென்றுவிட்டதனால் பதற்றத்துடன் நின்ற செல்வத்திற்கு, "தம்பி! உன்னுடைய பை மட்டுமில்லை. கனபேருடைய பைகள் போயிட்டுது. மிச்ச ஆட்களைக் கொண்டுபோக வேறை பஸ் வருமாம். அதிலை போய் எடுக்கலாம். எல்லா ரவலிங் பாக்குகளையும் கப்பலிலை ஏற்றினாலும் திருகோணமலையில் போய் இறக்கினாப் பிறகாவது எடுக்கலாந்தானே." என்று ஒருவர் ஆறுதல் கூறினார்.

சிறிய மன ஆறுதலுடன் பேரூந்தின் வரவுக்காக செல்வமும் காத்துக்கொண்டிருந்தான்.

அவனது நினைவுகள் வெளிநாடு சென்று வந்ததிலிருந்து திரும்பிச் செல்வதற்காக இன்றுவரை ஏற்பட்ட மனத்தாங்கல்களையே சுற்றி சுழன்று கொண்டிருந்தன.



செல்வம் கூலித் தொழிலாளிக்கு மகனாகப் பிறந்தவன். அவனுக்குக் கல்யாண வயதை எட்டிவிட்ட அக்காவும், பருவத்தை தொட்டுவிட்ட தங்கையும், உடன் பிறப்புக்களாக இருந்தனர். அவர்களுக்கு நல்வாழ்வு அமைத்துக் கொடுக்க இயலாத நிலையில் அப்பா இருப்பதை உணர்ந்த செல்வம், எப்படியாவது அவர்களது எதிர்காலம் சிறக்க ஏதாவது செய்ய வேண்டும் என நினைத்தான். அதற்காக ஊரில் உழைத்து நினைத்ததை சாதிக்க இன்றைய நாட்டு நிலை இடைஞ்சலாக இருக்கும் என்பதனால் வெளிநாடு செல்வதற்கு முனைந்தான்.

ஊரில் வட்டிக்கு கடன் பெற்று சவுதி சென்று இரண்டு ஆண்டுகள் அயராது உழைத்தான். ஆனால் அவனது உழைப்பில் பெரும்பகுதி வட்டி என்ற பெயரில் சுரண்டப்பட்டதால் உழைப்பில் சேமிப்பு எதுவும் இந்த இரண்டு வருடங்களில் இல்லை. திரும்ப சென்று உழைக்கப்போவது தான் சேமிப்பாக வரும்.

இரண்டு வருடங்களின் பின் கிடைத்த விடுமுறையை ஊரில் கழித்துவிட்டு மீண்டும் சவுதி செல்வதற்காக இன்னும் ஏழு நாட்கள் மட்டுமே செல்லுபடியாகும் விசாவுடன் காத்துக் கொண்டிருக்கிறான்.

சவுதியிலிருந்து வந்து கொழும்பில் ஆறு மாதத்தில் இரண்டு மாதத்தை கப்பலுக்கும் விமானத்துக்கும் காத்திருந்து கரைத்து விட்டுத்தான் ஊர்வந்தான்.

யாழ்வந்தும் திரும்பிச் செல்லவேண்டிய காலத்துக்கு ஒரு மாதம் முன்பே மீண்டும் கொழும்பு வர முயற்சித்தான். அந்த வேளை கப்பல் பயணம் முற்றாக பல காலந்தடைப்பட்டிருந்தமையினால் விமானத்தின் மூலம் வர ரிக்கற் செய்து விட்டிருந்தான். ஆனால் விமானப் பயணமும் அவன் வர இருந்த தினத்திற்கு முன்பே காலவரையறையின்றி தடைப்பட்டிருந்தது.

## மு.கலை

யாழிலிருந்து பிற இடங்களுக்குச் செல்வதற்கான சகல மார்க்கமும் முற்றாக தடைப்பட்டிருந்ததனால் விசா செல்லுபடியாகும் காலம் முடிவதற்கு முன் கொழும்பு வர முடியாமல் போனால், வெளிநாடு செல்ல முடியாமல் போய்விடுமே! என்ற எண்ணம் அவனைப் பயமுறுத்திக் கொண்டிருந்தது. அந்தவேளை கப்பல் பயணம் இடம்பெறவுள்ளதாகவும் விமானத்தில் செல்வதற்காக ரிக்கற் செய்தவர்கள் முன்னுரிமையடிப்படையில் கப்பலில் அனுப்பப்படுவார்கள் என்றும் செய்தி கிடைத்தது.

அதனடிப்படையில், இன்று கப்பல் பயணத்திற்கு அவன் வந்திருந்தான். விசாக்காலம் முடிவதற்குமுன் கொழும்பு செல்வதற்குரிய சந்தர்ப்பம் கிடைத்தது அதிஷ்டச் சீட்டில் கோடிரூபா கிடைத்த சந்தோசத்தைக் கொடுத்திருந்தது.

செல்வம் பேரூந்துகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தவேளை, கப்பல் பயணத்திற்காக இருந்தவர்கள் அலுவலக வாசலை சூழ்ந்து கொண்டது அவன் கண்ணுக்குள் வந்து நின்றது. அவனும் பரபரப்புடன் அங்கு சென்றான்.

"இன்று 500 பேர் வரைதான் கப்பலில் செல்லமுடியும். அதனால் இங்கு நிற்கும் நீங்கள் நாங்கள் அறிவிக்கும்போது அடுத்த கப்பலுக்கு வாங்க!" கப்பல் பயணப் பொறுப்பதிகாரி கூறியது எல்லோர் காதிலும் அமிலமாய் பாய்ந்தது.

விசா செல்லுபடியாகும் காலம் முடியவே கொழும்பு செல்லமுடியும் என்பது செல்வத்திற்கு உறுதியானது. அவனது பயணப்பை பேரூந்தில் போனது பற்றி அதிகாரிகளிடம் கூறினான். அவனைப்போல் பலர் செல்லாமல் பயணப் பைகளை மட்டும் கப்பலுக்கு அனுப்பிவிட்டு திடீர் முடிவால் துவண்டுபோய் நின்றனர்.

அனைவரது பயணப்பைகளும் மீளப் பெறப்பட்டுத் தரப்படும் என்ற வாக்குறுதியைப் பெற்றுக்கொண்டு இடிந்துபோன மனதுடன் நடக்க முடியாது நடந்து கொண்டிருந்தான்.

பயணப்பை திரும்பக் கிடைக்குமா? அடுத்த கப்பல் பயணம் உடனடியாக இடம்பெறுமா? விசாக்காலம் முடிய முன் கொழும்பு சென்று வெளிநாடு செல்ல முடியுமா? உழைத்து சகோதரிகளின் எதிர்கால வாழ்க்கை சிறப்பதற்கு 'உதவ முடியுமா?' என பல கேள்விக்குறிகள் அவன் மனதில் எழுந்து நின்று பயமுறுத்திக் கொண்டிருந்தன.

பேரூந்து தரிப்பிடத்திற்கு முன்னுள்ள காவலரணில் சீருடையினர் நின்று பரிசோதித்துக் கொண்டிருந்தனர். செல்வமும் அங்கு வந்தான். அவனிடம் பரிசோதிக்க பொதி எதுவும் இல்லாததனால் அடையாள அட்டை கேட்கப்பட்டது.

அதனை எடுக்க காற்சட்டைப் பையினுள் கையை விட்டவன், திகைத்து நின்றான்.

அவனது அடையாள அட்டையும், கடவுச்சீட்டும் அவனது பயணப்பைக்குள் வைக்கப்பட்டது அப்போதுதான் அவனுக்கு நினைவு வந்தது.

"அடுத்து என்ன நடக்குமோ?" என அவன் இதயம் வேகமாக துடிக்கத் தொடங்கியது....

# அவலம்

மார்கழி மாத வளர்பிறை மெல்ல நடுவானில் தெளிவற்றுத் தெரிகிறது. வீதியோர மரங்களெல்லாம் கோடைகால தூசிகளையும் கிறவல் மண் படிவுகளையும் கழுவி சுத்தமாகி புதுப்பெண் போல் நிற்கின்றன. தவளைகளின் மேளதாள போட்டியும் சுதிமாறி ஒலிக்கிறது. இடையிடையே விட்டில்களின் 'வீல்' சத்தங்கள். இங்கு எதுவும் தன்னை ஈர்க்காது என்பது போல மெதுவாக தனது சைக்கிளை உருட்டிக் கொண்டு ஆங்காங்கே பள்ளங்களில் கிடந்த தண்ணீரை கடந்தும் வெள்ளத்தில் நிதானமாக நடந்தும் போய்க்கொண்டிருந்தார் கணபதிப்பிள்ளை.

தெருவோர நாய் ஒன்று குரைத்தபடி பின்னால் வருகிறது. "அடீக்" ஈனமான குரலால் அதனை அதட்ட முனைகிறார். அவரது உடல்நிலை, வயது அதற்கு ஒத்துப் போக மறுக்கிறது. சற்றுமுன் பெய்த மழையில் நனைந்ததால் அவர் உதடுகள் தந்தி அடித்தன. கையை தூக்கி கலைக்கலாம் என்றால் கிழிந்த அரிசிப்பையை விட ஏலாது.

அரிசியை வலது கையால் பிடித்தபடி இடது கையால், "போ அங்காலை சனியன்." முணுமுணுக்கிறார். நாயும் விட்டேனா பார் என்று குரைக்கிறது. கணபதிப்பிள்ளைக்கு தெரியும் குரைக்கிற நாய் கடிக்காது என்று. எதிரே வந்த சைக்கிள் ஒன்று கணபதிப்பிள்ளையை கடக்கையில் "ஏனப்பு சைக்கிள் காற்றுப்போட்டுதே?" இவர் "ஓமடா..." எனச் சொல்லி முடிக்குமுன் வந்தசைக்கிள் அப்பால் செல்ல, அந்த நாயும் அந்த சைக்கிளை கலைத்துக்கொண்டு போட்டுது.

மாயனூர் சிவன் வீதியால் திரும்பி குடியிருப்பு போய்ச்சேர இரவு எட்டுக்குமேல் ஆகியிருக்கும். "ஏனப்பா இவ்வளவு நேரம். ஒருத்தரும் விறகுவேண்ட இல்லையே?" மகளின் பரிதாபக் கேள்வி.

"ஓம் பிள்ளை விறகு பச்சையாம் மழைக்கையும் நனைஞ்சு போச்சாம். ஐம்பது ரூபா தாறவங்கள் இன்றைக்கு இருபத்தைந்து ரூபா தான் தந்தவங்கள்!" நடுங்கும் உடம்புடன் சைக்கிள் கான்ரிலில் கொழுவிய வவுனியாப் பையை எடுத்து, "இந்தா இதில் ஐம்பது கிராம் சீனியும் இருக்கு ஏதாவது சூடாகத் தா குடிப்பம்." என்று பையைக் கொடுத்தவர், ஈரமான சாரத்தை மாற்றி கிழிந்த வீட்டுச் சாரத்தை அணிந்தபடி நனைந்த சாரத்தையும், சேட்டையும் நீளமாய் வீட்டின் இரு முனைக்கும் கட்டியிருந்த கொடியில் போடுகிறார்.

"இந்தா புள்ள இந்த மரக்கறிகளை வட்டக்கச்சி சந்தையில் தெய்வமக்கா தந்தவ. வித்த மிச்சமாம் நாளைக்கு கிடந்தால் அழுகிப்போகுமாம்." கணபதிப்பிள்ளை சொல்ல மகள் கல்யாணியின் கண்களில் கண்ணீர் நிரம்பி நிற்கிறது. தன் புறங்கையால் கண்களைத் துடைத்தபடி, "ஏனப்பா தேயிலை வேண்ட இல்லையே?" என்றாள்.

அவள் கண்ணீரையோ முகத்தையோ கவனிக்க அந்த வீட்டில் அவ்வளவாக வெளிச்சமில்லை. எரிகிற சிறிய குப்பி விளக்கும் கொஞ்சம் எரிவதும் பின் திரி கருகுவதுமாக இருந்தது.

"இல்லப் பிள்ளை காசு காணாமல் போச்சுது. நாளைக்கு வேண்டி வாரன். மல்லி கிடந்தால் கொஞ்சம் போட்டுத் தா! சூடாய் ஏதாவது குடித்தால்தான் இந்த குளிரில் கொஞ்சம் நிமிர்ந்து இருக்கலாம்."

சொல்லியபடி சைக்கிள் கரியரில் விறகு ஏற்ற வசதியாக இட்டியிருந்த நான்கு தடிகளின் கட்டுக்களை அவிட்டு சைக்கிளை அந்த வீட்டினுள் கொண்டுபோகிறார்.

அது ஒரு சிறிய குடிசை இடப்பெயர்வுகள் பல செய்து இறுதியில் புனர்வாழ்வுதந்த வாழ்விடம். அதிலே மகளின் இரண்டு பிஞ்சுகள், மகள், தான் என்று நான்கு ஜீவன்கள் ஜீவிக்கின்றன.

சிந்தனை அவரை பலாலிவிமானத்தள மருகே கூட்டிச் செல்கின்றது. "பிள்ளையண்ணை இன்றைக்கு எத்தனை வேலை ஆட்கள் அனுப்பட்டும்?" பக்கத்து வீட்டு பார்வதி அக்கா கேட்க கணபதிப்பிள்ளை, "ஒரு பத்துப்பேர் அனுப்பன்!" மிக சாதாரணமாக கூறிவிட்டு தானும் மாட்டு வண்டியுடன், "பாக்கியம் நான் மிளகாய்த் தோட்டத்துக்க நிக்கிறன் தேத்தண்ணி கெதியாய் கொண்டா!" சொல்லியபடியே செல்கின்றார் கணபதிப்பிள்ளை.



அந்த ஊரில் ஏக்கர் கணக்கில் தோட்டம் செய்யும் முதலாளிகளில் கணபதிப்பிள்ளையும் ஒருவர். செல்லமாக எல்லோரும் பிள்ளையண்ணை என்றுதான் அழைப்பார்கள். பெரிய கல்வீட்டுடன் லான்ட்மாஸ்ரர், வண்டில் மாடு என வசதியாக வாழ்ந்தவர். தோட்ட வருமானத்திலேயே தன் ஒரே மகள் கல்யாணிக்கு பெரிதாக திருமணம் செய்து வைத்தவர். முடித்து வைத்த கையோடுதான் முதல் இடம்பெயர்வுக்கு பிள்ளையார் சுழிபோடப்பட்டது. இராணுவ முகாம் விஸ்தரிப்பு என்று விரட்டியடிக்கப் பட்டனர்.

மிளகாய், கத்தரி என பிரித்து பிரித்து பல பயிர் செய்த மண்ணை பிரிய முடியாது துடித்துப்போனார் கணபதிப்பிள்ளை. "என்னப்பா செய்ய இவங்கள எங்களால எதிர்க்க ஏலுமோ? வாங்கோ உரும்பிராய் பக்கமும் தோட்டம் செய்யலாம்தானே. அங்கபோய் ஒரு காணியை வேண்டி இருப்பம். எப்ப சொந்த மண்ணில் நிம்மதியாக வாழலாமோ அப்ப திரும்பி வருவம்." நீண்ட பிரசங்கம் செய்த பாக்கியத்தை நினைத்து விதி கைகொட்டிச் சிரித்தது.

கடைசி நிமிசத்திலும் திரண்டுவந்த கண்ணீரை துடைத்தபடியே "இந்த மண்ணை விட்டு போறதெண்டால் தாயை இழக்கிறதுபோல கிடக்கு பாக்கியம்." பொங்கி வந்த அழுகையை கழுத்தில் கிடந்த துவாயைக்கொண்டு துடைத்தார் கணபதிப்பிள்ளை.

"இந்தாங்கோ அப்பா மல்லித்தண்ணி இப்படி அடுப்பு புகட்டுக்கு பக்கத்தில் வந்து கொஞ்ச நேரம் இருந்தால் கொஞ்சம் குளிர் குறையும்!" கல்யாணியின் குரலில் திடுக்கிட்டுத்தான் போனார் கணபதிப்பிள்ளை. "ஓம்பிள்ளை இப்படித்தா" நடுங்கும் கையால் தேனீர் குவளையை இறுக்கிப் பிடிக்கிறார். அதன் மிகையான சூடு அவருக்கு இதமாக இருக்கின்றது.

"ஏன் பிள்ளை பிள்ளைகளுக்கு சாப்பாடு குடுத்தனியே நித்திரையாப் போட்டுதுகள் போல கிடக்கு."

"ஓமப்பா மத்தியான சோறு கிடந்தது சாப்பிடப்பண்ணித்தான் நித்திரை ஆக்கினன். நீங்கள் சாப்பிடுங்கோவன்." "எனக்கு இப்ப வேண்டாம். நீ சாப்பிடு. இருந்தா பிறகு நான் சாப்பிடுகிறேன்." அப்பாவின் உறுதி தெரிந்திருந்ததால் கல்யாணி தான் சிறிது சாப்பிட்டுவிட்டு தந்தைக்கு எடுத்து, "சாப்பாடு வைக்கிறன் சாப்பிடாமல் படுத்திடாதேங்கோ" என்றுவிட்டு தன் இரண்டு பிள்ளைகளுடன் தானும் சேர்ந்து படுத்துக் கொள்கிறாள் கல்யாணி.

## சு.கார்த்திக்-வன்னி

அடுப்புக்குள் எரிந்த விறகை வெளியில் இழுத்து கைகளைக் காய்ச்சி கன்னத்தில் ஒற்றிக்கொள்கிறார். மீண்டும் சிந்தனை உரும்பிராய்ப் பக்கம் அவரை இழுத்துச் செல்கிறது. உரும்பிராய் கணபதிப்பிள்ளைக்கு புதிது அல்ல. மாஸ்ரர் சின்னத்தம்பியிடம் கதைத்து ஒருவாறு 05 பரப்புக்காணி வேண்டி தோட்டம் போட்டு, இங்கு தோட்டம் தேடத் தொடங்கி விட்டார். அப்போது எல்லாம் பணப்புழக்கம் இவரிடம் அதிகம். பணத்தைக் கொண்டுதான் நினைத்ததை செய்து முடிப்பார்.

அந்நேரம்தான் முன்னேறிப் பாய்ச்சல் இராணுவ நடவடிக்கை மாதகல் பக்கம் நடந்தது. மணக்கோலத்தில் மாதகல் போன கல்யாணி இரு மழலைகளுடன் விதவைக் கோலத்தில்.

வானத்தில் விமானங்கள் காட்டிய தீரத்தால் வீடும் எரிந்து நாசமாகியது. தன் குஞ்சுகளுடன் 'பங்கரில்' பதுங்கி இருந்த கல்யாணி உரும்பிராயில் கண்ணீருடன் கதையும் ஒப்பாரியுமாக ஒப்புவித்தாள். எப்படி ஆறுதல் கூறுவது? யாருக்கு யார் ஆறுதல் கூறுவது அகதியாகிப் போனோமே அதைக் கூறுவதா? உறவுகளை பறிகொடுத்தோமே அதைக் கூறுவதா? சொத்து சுகம் இழந்தோமே அதைக் கூறுவதா? எதை எப்படி யாரிடம் கூறி ஆறுதல் பெற வீட்டுக்கு வீடு இங்கு வாசல்படிதானே. ஏதோ பாக்கியம் மட்டும் மகளுடன் அழுவதும் பின்பு கதை கேட்பதுமாக இருந்தாள்.

காலச்சக்கரம் விரைவாக உருளமுன்பு சூரியக்கதிர்கள் பிரசவமாக உரும்பிராய் சாவகச்சேரி என இடங்கள் மாறி கிளிநொச்சி வந்து சேர்ந்தனர். கணபதிப்பிள்ளை குடும்பத்தினர் இடங்கள் மாறமாற கணபதிப்பிள்ளையின் இருப்பும் குறையத் தொடங்கியது தூரத்தூரச்செல்ல துன்பம் மட்டும் இவர்களை துரத்திக்கொண்டிருந்தது.

"சட்" என்ற சத்தம் அவரை மாயவனூருக்குத் திரும்ப அழைத்து வந்தது. இழுத்துவிட்ட நெருப்பு சாம்பலாக் அணைந்திருந்தது. மாரிகால 'ரீங்காரமிட்டபடி நுளம்புகள் பவனி வந்துகொண்டிருந்தன. மகள் கல்யாணி நுளம்பு அடித்த சத்தத்தில்தான் கணபதிப்பிள்ளை நிகழ்காலத்திற்கு வந்திருக்கின்றார். எழுந்து சென்று மகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் போர்வையை இழுத்து போர்த்திவிட்டு வந்து சாப்பிட இருந்தபோதுதான் அந்த உதய நகர் ஞாபகம் வந்தது.

அன்று 1996-01-30ம் திகதி. ஆம் நன்றாக ஞாபகம் இருக்கிறது. பாக்கியத்திற்கு மிகவும் முடியாமல் இருக்கின்றது. கணபதிப்பிள்ளை தான் 40 வருடத்திற்கு முன்பு கட்டிய மீதமான தாலியை எடுத்துக்கொண்டு வட்டிக் கடையில் அநியாயவிலைக்கு விற்கின்றார். அப்போது ஒரு பவுண் 2,000, 2,500 போனதே அதிஷ்டம். விற்ற காசுடன் ஆட்டோ ஒன்றை பிடித்துக்கொண்டு வீடு சென்று பாக்கியத்தை தூக்கி பின்சீற்றில் கிடத்திக்கொண்டு தானும் கல்யாணியும் ஏறியதும் வைத்தியசாலையை எட்டுமுன் எமன் பாக்கியத்தை எடுத்ததையும் எப்படி மறப்பது? மூளை மலேரியா என்ற வியாதிதான் பாக்கியத்தை கொண்டு சென்றது.

திடீரென வானம் இடிந்த மாதிரி ஓசை கல்யாணி திடுக்கிட்டு எழுந்தாள். "ஏனப்பா ஷெல் அடிக்கிறானோ? சத்ஜெயவில் வீட்டுக்குப் பின்னால விழுந்த ஷெல் மாதிரி கேட்டதே." "இல்லப்பிள்ளை மழைபெய்யப் போகுது போல இருக்கு. நீ பிள்ளைகளைப் போர்த்துக்கொண்டு படு!" என்றவரின் காதுக்குள் நுளம்பு 'நாங்கள் இருக்கிறோம்' என்று ஞாபகப்படுத்தியது.


தனக்கு முன்பாக இருந்த சாப்பாட்டை எடுத்து மூடிவைத்துவிட்டு சைக்கிள் கரியலில் கொண்டு வந்திருந்த இரண்டு பொச்சுமட்டையை எடுத்து அடுப்பைக் கிளறி அதன்மீது கவிட்டார். மழையில் நனைந்திருந்த மட்டை நெருப்புடன் உறவுகொள்ள மறுத்து புகையைக் கக்கி தற்போதைக்கு 'போ வெளியே' என்று நுளம்புகளைக் கலைத்தது. தட்டியோரமாக சாத்தி நின்ற சைக்கிள் முன் சில் காற்றுப்போய் முடமாய் நின்றது. வானம் இருண்டு மழை கொட்டத் தொடங்கியது. சென்ற மாரியில் பாக்கியம். இந்த மாரியில்... எழுந்த பெருமூச்சு ஒன்றை விட்டபடி தானும் ஈரச்சாரத்தை போர்த்திய படி சுருண்டு படுத்தார் கணபதிப்பிள்ளை.

நாளைய விடிவு எப்படி அமையும் இந்த கணபதிப்பிள்ளையைப்போல் இன்னும் எத்தனை பேர் எண்ணிப்பார்க்க நெஞ்சம் கனக்கின்றது.

www.padippakam.com

## இலக்கிய நயம்

# சீறுவோர் சீறினால்



நாட்டையாள்பவன்
நங்கையரை ஆள்கிறான்!

கட்டழகிகளின் இதழ்
கொத்திக் கிடக்கிறான்!
பேரழகிகளின் மேனி
சுவைத்து மகிழ்கிறான்!

நாடு
சுடுகாடாகி விட்டது!
பெண் தனியே சென்றால்
கண்வைத்து கடத்துகிறார்கள்!
வன்புணர்ச்சி கொண்டுவிட்டு
மண் கிண்டி புதைக்கிறார்கள்!

வீட்டுக்குள் கொள்ளை
வெளியே வந்தால் தொல்லை!

சிப்பாய்கள் கூட்டம்
தப்பாட்டம் ஆடுகிறது!

முறையிட மன்னன்
எங்கே?
தண்டிக்க வேந்தன்
எங்கே?

அரண்மனை நோக்கி
மனுக்கள் அனுப்பினர்!

தீர்வு கிடைக்கும் என
அரசவையின்
திசை நோக்கி கிடந்தனர்!

மனுப்படிக்க
மன்னனுக்கு நேரம் ஏது?

பூமேனிகள் தழுவிடவே
பொழுது போதவில்லை!

செங்கோல் ஏந்த
நேரம் ஏது?

செங்கனிகள் ஏந்தி
பதமறியவே
நேரம் போதவில்லையே!

விடிய விடிய
விளையாட்டு!
விடிந்த பின்னர்
தாலாட்டு!

மஞ்சத்தில் தஞ்சமானான்
நெஞ்சத்தில் நீசனானான்!

"கொடுத்த மனுவுக்கு
பதில் என்ன?"

மனுக்கொடுத்தவர்கள்
குரல் கொடுத்தனர்!

"பரீசீலிக்கப்படும்
பதற்றம் வேண்டாம்!

அரசர் ஆவன
செய்வார்
ஆத்திரப்படாதீர்!

விரைவில் பரிகாரம்
வேகம் கொள்ளாதீர்!"

மன்னனின் எடுபிடிகள்
மக்களை
மடையர்களாக்க எண்ணினர்!

பொறுமைக்கும்
எல்லையுண்டு!

அமைதிக்கும்
வரம்புண்டு!

பொங்கி எழுந்தது
மக்கள் கடல்!

குமுறி எழுந்தது
மக்கள் கோபம்!

'எடுபிடிகளை
முதலில் எடுத்தெறி!'

மன்னனின் விசுவாசிகள்
மக்களால்
மண்ணில் புரட்டப்பட்டனர்!

அழகி ஒருத்தியின்
இடையளவை
அளந்து கொண்டிருந்தவனுக்கு
மக்கள் படை
திரண்டுவரும் செய்தி
தெரிவிக்கப்பட்டது!

பூசை வேளையில்
கரடிகளா?
பூவை முகரும் நேரம்
குறுக்கே முட்களா?

"பாதிப் பந்தியில்
பிடித்திழுக்கிறார்கள்!
வந்து மீதியை
முடிக்கிறேன்!"
கூறிவிட்டுப் போனான்.

"வெட்டித் தள்ளுங்கள்
விரட்டியடியுங்கள்!

பெண்களை பிடித்து
துகிலுரியுங்கள்!

ஆண்களை பிடித்து
தோலை உரியுங்கள்!

குழந்தைகளை தூக்கி
சுவரில் அறையுங்கள்!"

மதுபோதையும்
மங்கையின் சுவைபோதையும்
மன்னனை
மதியிழக்க வைத்தன!

கட்டிவா என்றாலே
வெட்டிவரும் குணங்கொண்ட
கட்டுப்பாடற்ற சிப்பாய்கள்
வெட்டிப் போடு என்றதும்
வெறிகொண்டு பாய்ந்தனர்!

உயிர்கள்
இரத்தப் பூக்களாக
மண்ணில் உதிர்ந்தன!

உதிரத்தால்–ஒரு
சரிதம் அங்கு
எழுதப்பட்டுக் கொண்டிருந்தது!

"ஒழிந்தார்கள்–இனி
எவரும் துணியார்கள்!"

கொக்கரித்த மன்னன்
குதூகலிக்க விரைந்தான்!

மஞ்சத்தில் கிடந்தது
பாதி புரட்டிய புத்தகம்!

விட்ட இடத்திலிருந்து
தொடர்ந்து படித்தான்!

"மக்களை மறந்த
மன்னா ஒழிந்துபோ!"

"மக்களின் குருதியில்
சொர்க்கத்தை காணும்
மன்னராட்சியை
மண்ணில் புதைப்போம்!"

வெளியே இருந்தா
குரல்கள் கேட்டன?

ஆடி முடித்த களைப்பில்
பாதி உறங்கியவனுக்கு
கூடிவந்த மக்கள் குரல்
கனவில் போல் கேட்டது!

அந்தப்புர கதவுகள்
தகர்ந்தன!
புயலென புகுந்தது
மக்கள் படை!

தள்ளாடி எழுந்தவன்
வாளெடுத்து ஓங்கினான்!

வாளேந்திய கரம்
மறுகணமே
வெட்டுண்டு வீழ்ந்தது

மக்கள் சிரித்தனர்;
நேற்று நாம்
"நிராயுதபாணிகளாக .
நீதிகேட்டு வந்தோம்!
வீதியில் வைத்து
வேட்டையாடினாய்!

இன்று எம்மிடமும் ஆயுதம்
இன்று எம்மிடமும் கேடயம்!
நீதி கேட்க வரவில்லை
நீதிபதிகளாக வந்திருக்கிறோம்!"

மன்னன் முகத்தில்
மரணக் களை!

இறுதியாய் மக்கள்
கூறினர்;
"உயர்ந்த கொள்கை
உடையவர் பெரியார்
கொள்கை இல்லாதார் சிறியார்.
பெரியார் சீறினால்
பேரரசனும் வீழ்வான்!"

"ஏந்திய கொள்கையார் சீறின் இடை முரிந்து
வேந்தனும் வேந்து கெடும்!"

அதிகாரம்: 90 குறள்: 899

**தருவது ரசிகன்**

## ஸ்போர்ட்ஸ்

# அந்த 33 வீரர்கள்

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் ஒரு சகலதுறை வீரர் 1000 ஓட்டங்களையும் 100 விக்கெட்டுக்களையும் எடுப்பது பெருமைக்குரியது. இந்த இரட்டை இலக்கை (1000 ஓட்டங்கள், 100 விக்கெட்டுக்கள்) கிரிக்கெட் உலகில் எட்டியிருப்பவர்கள் 33 சகலதுறை ஆட்டக்காரர்கள்.

மேற்கிந்தியத் தீவுகளுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் 1000 ஓட்டங்களை எடுத்தும் 100 விக்கெட்டுக்களை வீழத்தியும் டெஸ்ட் இரட்டை இலக்குப்பட்டியலில் அண்மையில் இணைந்துள்ளார் தென்னாபிரிக்க இளம் சகலதுறை வீரர் ஷோன் பொலொக். இது இவரது 26 வது டெஸ்ட் போட்டியாகும்.

உலகிலேயே குறைந்த டெஸ்ட் போட்டிகளில் இந்த இரட்டை இலக்கை எட்டியவர் என்ற சாதனைக்குரியவர் இங்கிலாந்தின் முன்னாள் சகலதுறை வீரர் இயன் பொத்தம். இவர் இந்தச் சாதனையை 21 டெஸ்ட்களில் எட்டினார்.

மிகக் குறைந்த வயதிலேயே இந்த இரட்டை இலக்கை அடைந்த சாதனைக்குரியவர் இந்தியாவின் முன்னாள் சகலதுறை வீரர் கபில் தேவ் நிகன்ஜ். இவர் இச்சாதனையைச் செய்தபோது இவரது வயது 21 ஆண்டுகளும் 27 நாட்களும்.

இந்த இரட்டை இலக்கை கிரிக்கெட் வரலாற்றில் முதன் முதலாகத் தொட்டவர் அவுஸ்திரேலிய சகலதுறை வீரர் ஜோர்ஜ் கிஃபன். இவர் இச்சாதனையை 1896ம் ஆண்டு செய்தார்.

ஒரே டெஸ்ட் போட்டியில் 1000 ஓட்டங்களையும் 100 விக்கெட்டுக்களையும் கடந்த சகலதுறை வீரர்கள் மூவர். இந்தியாவின் கபில் தேவ், நியூஸிலாந்தின் ஜோன் பிரேஸ்வெல், தென்னாபிரிக்காவின் ஷோன் பொலொக். பொலொக்கிற்கு முன்னர் இந்த இரட்டை இலக்கை எட்டிய பெருமைக்குரியவர் தென்னாபிரிக்க வீரர் ட்ரவர் கொடாட்.

டெஸ்ட் போட்டிகளில் இரட்டை இலக்கைத் தாண்டிய முதல் 10 சகலதுறை வீரர்களும், அவர்களின் விவரங்களும் வருமாறு:

| வீரர் | டெஸ்ட்கள் | ஓட்டங்கள் | விக்கெட்டுக்கள் |
|---|---|---|---|
| 1. இயன் பொத்தம் (இங்கிலாந்து) | 21 | 1035 | 104 |
| 2. வினு மன்கட் (இந்தியா) | 23 | 1154 | 104 |
| 3. கபில்தேவ் நிகன்ஜ் (இந்தியா) | 25 | 1023 | 100 |
| 4. ஷோன் பொலொக் (தென்னாபிரிக்கா) | 26 | 1006 | 100 |
| 5. நோபிள் (அவுஸ்திரேலியா) | 27 | 1230 | 100 |
| 6. றிச்சர்ட் ஹாட்லி (நியூஸிலாந்து) | 28 | 1015 | 121 |
| 7. ஜி. கிஃபன் (அவுஸ்திரேலியா) | 30 | 1237 | 101 |
| 8. இம்ரான்கான் (பாகிஸ்தான்) | 30 | 1102 | 119 |
| 9. றிச்சி பேர்னாட் (அவுஸ்திரேலியா) | 32 | 1197 | 103 |
| 10. மில்லர் (அவுஸ்திரேலியா) | 33 | 1830 | 102 |

# கிரண் மோரே ஓய்வு



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் விக்கெட் கீப்பர் கிரண் மோரே அண்மையில் முதல் தர கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இந்த வீரர் கிரிக்கெட்டிலிருந்து விலகிய பின்னரும் இவருக்கு மவுசு குறையவில்லை. இலண்டனில் உள்ள மெல்போர்ன் கிரிக்கெட் கிளப் (எம்.சி.சி.) இவரை தனது ஆயுட்கால உறுப்பினராகச் சேர்த்து இவரைக் கௌரவப்படுத்தியுள்ளது.

இந்தக் கௌரவம் இதுவரை இந்திய வீரர்களில் சுனில் கவாஸ்கர், குண்டப்பா விஸ்வநாத், திலிப் வெங்சர்கார், பிஷன் சிங் பேடி, விஜய் ஹஸாரே ஆகிய 5 வீரர்களுக்கே கிடைத்துள்ளது. இந்த ஐவரும் இந்திய அணிக்கு கேப்டன்களாக இருந்தவர்கள். ஆனால் மோரே மட்டும் கேப்டன் பதவி வகிக்காதவர்.

கிரண் மோரே இதுவரை 49 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி ,1285 ஓட்டங்களைக் குவித்துள்ளார். 95 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 564 ஓட்டங்கள் எடுத்துள்ளார். 110 கேட்ச்களும், 20 ஸ்டம்பிங்குகளும் செய்துள்ளார்.

## சிந்தியா பதில்கள்

★ சிந்தியா! அமெரிக்காவும், பிரிட்டனும் இணைந்து நடத்திய தாக்குதலுக்கு என்ன பெயர் சூட்டலாம்?

எஸ்.சந்தோஷ், மட்டக்களப்பு.

கூட்டுப் பயங்கரவாதம்.

●●

★ ஈராக் மீதான தாக்குதலை இலங்கை ஜனாதிபதி ஏன் கண்டிக்கவில்லை?

எம். சலீம், கொழும்பு-13.

உதவிகளை நிறுத்தி அமெரிக்கா தண்டித்தால் என்ன செய்வது என்ற முன்யோசனை தான் காரணம்!

●●

★ பதவி துறக்க மறுக்கிறாரே பில் கிளின்ரன்?

சி. சிற்சபேசன், கொழும்பு-06.

அவர் துறக்க மறுப்பது பதவியை மட்டும்தானே!

●●

★ 'முதலில் கவிழ்வது யார்? கிளின்ரனா, சதாமா?' என்று பிரிட்டிஷ் பத்திரிகைகள் சில கேள்வி எழுப்பியுள்ளனவே; உமது பதில் என்ன?

எ.ஃப். நஜிமுதீன், மொரட்டுவ.

நிச்சயமாக சதாம் அல்ல!

●●

★ சிந்தியா! ரஜினிக்கு எத்தனை வயது?

ஆர்.வினோ, பண்டாரவளை.

ஐம்பதுக்கு ஒன்று குறைய!

●●

★ மூன்றாம் தரப்பு அனுசரணையாளர் போதும் என்கிறாரே ஜனாதிபதி?

எஸ்.திருலோகநாதன், கொழும்பு-05.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை தடுப்பதில் அரசு ஒற்றைக் காலில் நிற்கிறது என்பது மீண்டும் உறுதியாகியுள்ளது. அரசு விரும்புவது சிறந்த தீர்வைக் கொடுக்க வைக்கக்கூடிய மூன்றாம் தரப்பையல்ல; இருதரப்பையும் கைகுலுக்க வைத்துவிட்டு ஒதுங்கி நிற்கும் அனுசரணையாளரை! அப்படியானால் தானே தற்போதைய பொதியை வைத்தே உருட்டமுடியும்!

●●

தென்னாபிரிக்க 'வீரபத்ரன்' படம் எப்படி 'ஃபுரொன்ட்லைன்' சஞ்சிகைக்குக் கிடைத்தது? உளவுத்துறையின் கைவரிசையா?

மா.நவநீதன், சிலாபம்.

அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. தென்னாபிரிக்கப் பத்திரிகை ஒன்றில் வெளியான படம்தான் அது! அவர்கள் புலிகளை ஆதரிப்பதோ, அப்படி போஸ் கொடுப்பதோ இரகசியமல்ல! புலிகளுக்கு ஆதரவானவர்கள் அங்கிருப்பது தென்னாபிரிக்க அரசே ஒப்புக்கொண்ட விடயம்தானே!

●●

★ சிந்தியா! எனக்கொரு சந்தேகம்! டாக்டர்களது கையெழுத்தை மருந்துக் கடைகளில் எப்படிக் கண்டுபிடிக்கிறார்கள்?

இ. நிர்மலா, நீர்கொழும்பு.

ஒரு குத்துமதிப்பாகத்தான்.

அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல நடிகர் ஒருவர் இருந்தார். அவர் நன்றாக வசனமும் எழுதுவார். கையெழுத்து கிறுக்கலாக இருக்கும்.

ஒருமுறை அவர் எழுதிக் கொடுத்த வசனம்' புரியாத நடிகை நேராக அவரிடம் வந்து: "இது என்ன கிறுக்கலாக இருக்கிறது? இதை யாராலுமே புரிந்துகொள்ள முடியாது!" என்று கூறினாள்.

உடனே அந்த நடிகர் தான் எழுதிய வசனத்தையும் எடுத்துக்கொண்டு, அந்த நடிகை சகிதம் மருந்துக்கடை ஒன்றுக்குச் சென்றார். வசனம் எழுதிய காகிதத்தை கடைச் சிப்பந்தியிடம் கொடுத்தார்.

சிப்பந்தி அதைப்படித்துவிட்டு, உள்ளே போய், ஒரு இருமல் மருந்து புட்டியை எடுத்துவந்து கொடுத்துவிட்டு: "தினமும் இரவு தூங்குவதற்கு முன் இரண்டு ஸ்பூன் சாப்பிடுங்கள்!" என்று கூறினார்.

நடிகர் சிரித்தபடி நடிகையிடம் கேட்டார்: "என் எழுத்து யாருக்கும் புரியாது என்று சவால்விட்டாயே, இப்போது என்ன சொல்கிறாய்?"

●●

★ தமிழ் கைதிகளுக்கு விடுதலை தர அரசு தாமதிக்கிறதே?

எம். குகநாதன், வவுனியா.

புகழ்பெற்ற அமெரிக்க நீதிபதி ஒலிவர் வென்டல் றோம்ஸ் ஒரு கருத்தரங்கில் கூறிய தகவல்:

சிறை ஒன்றில் பார்வையாளர் நேரத்தில் சகல கைதிகளும் சந்தோசமாகப் பேசிக் கொண்டிருந்தனர். ஒருவன் மட்டும் சோகமாக மூலையில் அமர்ந்திருந்தான்.

அதைப் பார்த்த நிருபர் ஒருவர் சிறைக் காவலரிடம் அந்தக் கைதியைக் காட்டி, "இவர் என்ன தவறு செய்தார்? ஏன் இப்படிச் சோகமாக அமர்ந்திருக்கிறார்?" என்று கேட்டார்.

"ஒரு கொலை வழக்கில் இவர் முக்கியமான சாட்சி. வழக்கு முடியும் வரை வெளியே விடமாட்டோம்!" என்றார் காவலர்.

"கொலை செய்தவன் எங்கே?" என்று கேட்டார் நிருபர்.

காவலர் கூறினார்: "கொலை செய்தவன் பிணையில் 'போய்விட்டான்!"

இச் சம்பவத்தைக் கூறிய ஒலிவர் தெரிவித்த கருத்து இது: "எல்லா நாட்டு சட்டங்களிலும் ஓட்டைகள் உள்ளன. மனச்சாட்சியுடன் நடந்து கொண்டால்தான் நீதியை நிலைநாட்ட முடியும்!"

●●

★ 'இந்து' ராம் அவர்களது 'ஃபுரொன்ட் லைன்' சஞ்சிகைக்கு ஜனாதிபதி அளித்துள்ள பேட்டி பற்றி?

எஸ். பாக்கியநாதன், கொழும்பு-09.

1996 செப்டம்பரில் இதே சஞ்சிகைக்காக நம்நாட்டுக்காரரான ராம் மாணிக்கலிங்கம் ஜனாதிபதியை பேட்டி கண்டு வெளியிட்டிருந்தார். இப்போது ஆசிரியர் ராம் பேட்டி கண்டுள்ளார். வித்தியாசம் அதுதான்! அடிப்படைக் கருத்துக்கள் ஒன்றே!



ஜனாதிபதி சந்திரிக்கா–ராம்

●●

★ தமிழகத் திரையரங்குகளில் முன்னணியில் நிற்கும் படம் எது?

வா.ரங்கன், உக்குவளை.

பார்த்திபனின் 'புதுமைப்பித்தன்'.

●●



'துள்ளாத மனமும் துள்ளும்' படத்தில் விஜய்–சிம்ரான்

★ 'துள்ளாத மனமும் துள்ளும்' படத்தில் சிம்ரானுக்காக விஜய் கண்ணைத் தோண்டுவது உண்மையா?

இ. ரகு, கந்தப்பளை.

தற்போதுவரை அதுதான் கதை என்று தகவல்! இது வெளியே கசிந்ததால் மாற்றப்படுமோ தெரியவில்லை!

உச்சக்கட்டக் காட்சியில் திருப்பம் ஏற்படுத்த காதலுக்காக உயிரையே விட்டனர் அன்று. ஆனால் இன்று காதலுக்காக உடலில் பாட்ஸ் பாட்ஸாக விட்டுக்கொண்டிருக்கிறார்கள்!

●●

★ வெற்றி தோல்வி– எது நிரந்தரமானது?

எம். ரிஸ்வியா, மஸ்கெலியா.

மகாபாரதப் போரில் பாஞ்சாலி கிருஷ்ணரிடம் மிக இரகசியமாக:

"கண்ணா! எனக்கு அச்சமாக இருக்கிறது. இந்தப் போரில் நாம் வெற்றி பெறுவோமா?" என்று கேட்கிறார்.

அதற்கு கிருஷ்ணர்: "நாம் வெற்றி பெறுவோமா என்று கூறமுடியாது. எதிரியான துரியோதனன் தன் தவறுக்காக நிச்சயம் தோற்பான். அவனுடைய தோல்வியை நாம் வெற்றியாகக் கொண்டாடுவோம்! அவ்வளவுதான்!" என்றாராம்.


படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 41

# ஆண்டவருக்கோர் ஆலயம்

"ஆண்டவரை வேண்டி அரிய அறிவாற்றலையும் நீதி தவறாது பரிபாலனம் செய்யும் திறமையையும் சாலமோன் மன்னர் பெற்றார். இதனால் அவருடைய புகழ் எங்கும் பரவியது. ஆண்டவருடைய அநுக்கிரகத்துக்குப் பாத்திரமானவர் என்பதனால் இஸ்ரயேல் மக்கள் மட்டுமல்லாமல், சுற்றுச் சூழலில் இருந்த மக்களும் மதிப்பும் மரியாதையும் மன்னர் மீது வைத்தனர்.

யூப்பிரத்தீசு நதிக்கரையிலிருந்து பெலிஸ்திய நாடுவரையும், எகிப்து நாட்டின் எல்லைவரையிலும் இருந்த பரந்த பிரதேசம் முழுவதும் சாலமோன் மன்னரின் ஆதிக்கத்துள் வந்துவிட்டன. அப்பிரதேசங்களிலிருந்த சிற்றரசர்களெல்லாம் சாலமோன் மன்னருக்குக் கப்பம் செலுத்திவந்தனர். சாலமோன் மன்னரின் ஆயுள் காலம்வரை இது தொடர்ந்தது.

மன்னர் சாலமோன் மூவாயிரம் நீதி மொழிகளையும் ஆயிரத்து ஐந்து பாடல்களையும் யாத்தார். அவருடைய அருளுரைகளையும் கேட்பதற்காக அயல்நாடுகளிலிருந்தெல்லாம் பல அறிஞர்கள் வந்தனர். அவ்வாறு மன்னரை நாடி வருபவர்களெல்லாம் தங்கி, உணவருந்திச் செல்வதற்கான வசதிகள் அனைத்தும் அரண்மனையில் செய்யப்பட்டிருந்தன.

தாவீது மன்னரின், நெருங்கிய நண்பராக இருந்தவர் தீர் நாட்டின் மன்னர் ஈராம் என்பவர். தாவீது மன்னரைத் தொடர்ந்து அவருடைய மகனான சாலமோன் இஸ்ரயேலின் மன்னராகத் திருப்பொழிவு செய்யப்பட்டதை அறிந்து ஈராம் மன்னர் சாலமோன் மன்னருடன் நட்புப் பாராட்டினார்.



இஸ்ரயேலரின் இறைவனுக்கு ஓர் ஆலயம் கட்டியெழுப்ப முடியவில்லையே என்ற ஏக்கம் மன்னர் தாவீதிடம் இருந்தது. ஆண்டவரே, தனக்கு ஆலயம் அமைக்கும் திருப்பணியை, தாவீதின் பின்னர் அரியணை ஏறும் அவருடைய மகனே பொறுப்பேற்று முடிப்பார், என்று கூறியிருந்தார். அதன்படி ஆண்டவருக்கான ஆலயம் அமைக்கும் திருப்பணியினை மேற்கொள்ள மன்னர் சாலமோன் திட்டமிட்டார். இத்திட்டம் நிறைவேற கேதுரு மற்றும் நூக்கு மரங்களையும் ஏரான மான பணியாளர்களையும் தீரின் மன்னரான ஈராம் அனுப்பி வைத்தார்.

## ஆண்டவருக்கான ஆலயம்

எகிப்து நாட்டிலிருந்து மோசேயால், இஸ்ரயேல் மக்கள் விடுதலை பெற்றுப் புறப்பட்டு வந்து நானூற்று எண்பதாம் ஆண்டு சாலமோன் மன்னர் ஆண்டவருக்கான திருக்கோவிலைக் கட்டத் தொடங்கினார். சாலமோன் மன்னராக அரியனை ஏறிய நான்காம் ஆண்டு இப்பணி தொடங்கிற்று. மலைகளிலிருந்து செதுக்கிக் கொண்டு வரப்பட்ட கற்களும் திருக்கோவிலுக்குப் பயன்படுத்தப்பட்டன. திருப்பணி ஆரம்பித்து ஏழு ஆண்டுகளில் திருக்கோவிலின் சகல பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டன.

சாலமோன் மன்னர் தமக்கென சகல வசதிகளையும் கொண்ட அரண்மனையையும் அமைத்துக் கொண்டார். தீர் நாட்டின் மன்னர் ஈராம் ஒரு சிறந்த கலைஞராக இருந்தார். வெண்கலத்தால் உருவங்களை அமைப்பதில் வல்லவராக விளங்கிய அவரை அழைத்து தனக்காகக் கட்டிய மாளிகையில் பல வெண்கல வேலைப்பாடுகளையும் செய்து வைத்துக் கொண்டார்.

சாலமோன் உருவாக்கிய அரண்மனை 'லெபனோனின் வனம்' என்ற பெயர்பெற்றது. அரண்மனையில் 'தூண் மண்டபம்', 'நீதி மண்டபம்' ஆகியவற்றை அமைத்தார். இவ்வாறு கொலுவீற்றிருந்து, பல்வேறு பணிகளிலும் பங்குபற்றுவதற்கான தனித்தனி அமைப்புக்களும் உருவாக்கப்பட்டன.

ஆண்டவருக்கான திருக்கோவில் முழுமையாகப் பூர்த்தியடைந்த பின்னர் தாவீது நகரிலிருக்கும் உடன்படிக்கைப் பேழையை புதிய ஆலயத்துக்குக் கொண்டுவருவதற்கான ஆயத்தங்களில் சாலமோன் மன்னர் தீவிரமாக ஈடுபடலானார். இஸ்ரயேல் சமுதாயத்திலுள்ள குடிகளின் தலைவர்கள் அனைவரையும் தன்னிடம் அழைத்தார். குறிப்பிட்ட தினத்தன்று வெள்ளம்போல் மக்கள் திரண்டு வந்தனர்.

உரிய முறைப்படி பலிபூசைகளை முடித்ததும் குருக்கள் பேழையைத் தூக்கினார். ஆண்டவரின் பேழைக்குரிய ஏனைய திருப்பொருட்களை லேவியர்கள் எடுத்துக் கொண்டனர். அனைவரும் புடைசூழ்ந்து பக்தி சிரத்தையுடன் ஆராதனைக்குரிய பாடல்களைப்பாடி பரவச மேலீட்டுடன் ஆடிக் கொண்டு ஊர்வலமாகப் புறப்பட்டு வந்தனர்.

## கருவறையில் திருப்பேழை

உடன்படிக்கைப் பேழையினுள் நானூற்றெண்பது ஆண்டுகளுக்கு முன்னர் மோசேயால் வைக்கப்பட்ட இரு கற்பலகைகள் இருந்தன. ஆண்டவரால் தனது மக்களான இஸ்ரயேல் மக்களுக்கு வழங்கப்பட்ட பத்துக் கட்டளைகளும் பொறிக்கப்பட்டிருந்தன.

திருக்கோவிலின் கருவறையில் உடன்படிக்கைப் பேழை வைக்கப்பட்டது. இஸ்ரயேல் மக்கள் சமுதாயத்துக்கு அன்று ஒரு பொன்னாள். திருப்பலி பூசைகள் முறையாக நடைபெற்றன. அங்கு திரண்டிருந்த மக்கள் அனைவருக்கும் விருந்து கொடுக்கப்பட்டது.

சாலமோன் மன்னர், தனது தந்தையார் தாவீது மன்னர் கண்ட கனவினை அற்புதமாக நிறைவேற்றிவிட்ட பேரானந்தத்தில் மிதந்தார். மக்கள் அனைவருக்கும் நல்லுரைகளையும் வழங்கினார்.

ஆண்டவருக்கான ஆலயம் அமைந்த தகவல் திக்கெட்டும் பரவியது. திரளாக பலதேச மக்களும் தரிசனத்துக்காக ஆலயத்துக்கு வந்தனர். அவ்வாறு வருபவர்களின் நலன் கவனிப்பதற்கென்றே தனியான அமைப்புகளை மன்னர் உருவாக்கியிருந்தார். ஆலய தரிசனத்துக்காக பல்வேறு நாடுகளிலிருந்தும் வந்து திரும்பிய மக்கள், ஆலயத்தின் சிறப்புப் பற்றியும் மன்னர் சாலமோனின் பேராற்றல்களைப் பற்றியும் தங்கள் தங்கள் நாடுகளில் புகழ்ந்துரைத்தனர்.

சேபா நாட்டு அரசிக்கும் மன்னர் சாலமோன் பற்றிய தகவல்கள் எட்டின. அரசரின் அறிவாற்றல் பற்றி அரசிக்கு ஐயம் ஏற்பட்டிருக்க வேண்டும். மன்னரின் ஞானத்தைப் பரீட்சித்துப்பார்க்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. தானே நேரடியாகச்சென்று திருக்கோவிலைத் தரிசிப்பதுடன் மன்னர் சாலமோனின் அறிவாற்றலையும் பரீட்சிப்பதற்காக புறப்பட்டார். அவருடைய பரிவாரங்களுடன், ஏராளமான பரிசுப் பொருட்களையும் சேபா நாட்டு அரசி கொண்டுவந்தார். தக்க மரியாதைகளுடன் மன்னர் சாலமோன் அரசியை வரவேற்று உபசரித்தார்.

மன்னரின் அரண்மனையில் சில நாட்கள் தங்கியிருந்த அரசி தனது அறிவாற்றலுடன் மன்னர் சாலமோனின் அறிவையும் ஒப்பிட்டுப் பரீட்சித்துப் பார்த்தார். அரசியார் தொடுத்த எந்தக் கேள்விக்கும் தக்க பதிலை மன்னர் கொடுத்தார். இதனால் தன்னை விட மன்னர் சாலமோன் சிறந்த அறிவாளி என்பதை மனப்பூர்வமாக சேபா நாட்டு அரசியார் ஒப்புக் கொண்டார். ஆண்டவருக்காக அமைக்கப் பட்டிருந்த ஆலயம், அரசர் தமக்காகக் கட்டிக் கொண்ட அரண்மனை, நாட்டு மக்களை செம்மையாகவழி நடத்துவதற்கேற்றவாறு எருசலேமில் உருவாக்கப்பட்டிருந்த அமைப்புக்கள், பணியாளர்கள் நடந்து கொள்ளும் பாங்கு, உணவு முறைகள் ஆகியவற்றையும் செம்மையாக ஆராய்ந்து அரசியார் பிரமித்துப் போனார். மன்னரிடம் தனக்கேற்பட்ட ஐயப்பாட்டையும், அரசரைக் கண்டபின்னர் ஏற்பட்ட திருப்தியையும் தெரிவித்து பலவாறு பாராட்டி விட்டுச் சென்றார்.

## ஞானமும் செல்வமும்

மன்னர் சாலமோன் ஞானத்திலும் செல்வத்திலும் ஈடு இணையற்றவராகத் திகழ்ந்தார். கடல்கடந்த நாடுகளிலிருந்தெல்லாம் வணிகர்கள் இஸ்ரயேலர்களுடன் வர்த்தகத்திலீடுபடக் கப்பல்களில் வந்து சென்றனர். அதுமட்டுமல்லாமல் சாலமோன் மன்னரே கப்பல்களைக் கட்டுவித்து, கடல் கடந்த நாடுகளுக்கு வர்த்தகத்துக்காக அனுப்பி வைத்தார். இதற்கு ஈராம் மன்னரும் துணை புரிந்தார். இக்கப்பல்கள் வெளிநாடுகளிலிருந்து ஏராளமான பண்டங்களைக் கொண்டு வந்து சேர்த்தன. இஸ்ரயேல் மக்கள் எக்குறையும் இல்லாமல் சீரும் சிறப்புமாக வாழ்ந்தார்கள்.

மக்களை நல்வழிப்படுத்தும் நோக்குடன் ஆண்டவர் பல வாழ்க்கை நெறிகளை அருளினார். ஆனால் மக்களோ ஆண்டவர் காட்டிய நெறிமுறைகளை எப்போதும் கடைப்பிடிப்பதில்லை. காலத்துக்குக் காலம் ஆண்டவரின் கட்டளைகளை உதாசீனம் செய்து, தான் தோன்றித்தனமாக நடக்க ஆரம்பித்து விடுகின்றனர்.

ஆண்டவரின் பேரருளால் உலகிலேயே பேராற்றலும் பெருமையும், புகழும், பெருஞ்செல்வமும் படைத்த மன்னராக விளங்கிய மன்னர் சாலமோன், ஆண்டவருடைய கட்டளைகளை மீறத் தலைப்பட்டார். எல்லாச் சிறப்புகளையும் ஒருங்கே பெற்றதனாலோ என்னவோ தகாத செயல்களில் ஈடுபடலானார்.

சாலமோன் மன்னர் முறைப்படி மணம் செய்தது எகிப்து நாட்டு பார்வோனின் மகளை. மன்னர் கட்டிய அரண்மனையில் தன் மனைவியைத் தங்க வைத்தார். பின்னர் பல வேற்று நாட்டுப் பெண்கள் பலர்மீது நாட்டங் கொண்டார். அவருடைய கண்களுக்கு அழகி என்றுபட்ட பெண்கள் அனைவரையும் தன் அந்தப்புரத்தில் சேர்த்துக் கொண்டார். இதனால் அந்த அழகியரின் மோகத்தால், அவர்கள் வணங்கும் தெய்வங்களையும் வழிபடத் தலைப்பட்டார். இத்தகாத செயலால் ஆண்டவருடைய கோபத்துக்கும் மன்னர் சாலமோன் ஆலானார்.

(தொடர்ந்து வரும்)

இராஜகுமாரன்

**திருமறை 39 விடை** ☛ சாலமோன்

**பரிசு பெறுவோர்:**

1. எம்.உல். மர்ஸூனா, காடுமாவடி, செம்மண்ஓடை-7, வாழைச்சேனை.
2. பி. கவிதா, 434/1,சீமநேரிய தோட்டம், அம்பிட்டிய, கண்டி.
3. எம்.ஜே.எஃப். அஸ்கா, 33/1, கண்டி வீதி, பரகஹதெனிய, வேஉ_.
4. ந. கிருபைராணி, தனபதி நெர்ச்சிமுனை, மட்டக்களப்பு.
5. கு. சரவணபவன், 66, பஸல்ஸ் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-06.

**திருமறை 41 வினா:-** பத்துக் கட்டளைகளும் கொண்ட திருப்பேழை எத்தனை ஆண்டுகளின் பின்னர் ஆலயத்தில் வைக்கப்பட்டன?

ஜன. 02க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:


**திருமறை 41—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

# பயோடேட்டா

| | |
|---|---|
| பெயர் | : இ.தொ.கா. |
| தொழில் | : அரசியல் |
| உப தொழில் | : சந்தா சேகரித்தல் |
| பொழுதுபோக்கு | : சொத்துக்கணக்கு சரி பார்த்தல்! |
| பிடித்தமானது | : உண்டியல். |
| நண்பர்கள் | : அவ்வப்போது ஆட்சியில் இருப்பவர்கள்! |
| எதிரிகள் | : எதிராக வாக்களிப்பவர்கள்! |
| உடனடி எதிரி | : ரத்னசிறி ராஜபக்ஷ. |
| சாதனை | : மலையகத் தமிழர்களில் தொடர்ந்து சவாரி! |
| சோதனை | : மலையகத் தமிழரின் இளம் தலைமுறை விழிக்கத் தொடங்கியிருப்பது! |
| சமீபத்திய எரிச்சல் | : சட்டமூலம் தோல்வி. |
| சமீபத்திய சாகசம் | : எதிரானவர்களை இனவாதிகள் என்று நிறம் பூசியது! |
| இலட்சியம் | : என்றென்றும் அமைச்சர் நாற்காலி! |

# தொண்டாவின் இலட்சிய உறவு

**எதிர்காலத்தில் ஆட்சி மாறினால், அந்த ஆட்சியில் தொண்டா அமைச்சராக இருந்தால் எப்படி பேட்டி தருவார்? கா.பூ.கந்தசாமி கற்பனையில் பேட்டி காண்கிறார்.**



**காபூ.க:** வணக்கம் ஐயா! ஐ.தே.கட்சி ஆட்சியிலும் மீண்டும் பதவி ஏற்றுள்ளீர்கள்! வாழ்த்துக்கள்.

**தொ:** அமைச்சராக இருப்பதற்கு எனக்கு இஷ்டமில்லை. என் மக்களுக்காகத்தான் இந்த நாற்காலியில் குந்தியிருக்கிறேன்.

**காபூ.க:** ஐ.தே.கட்சிதானே உங்கள் அமைச்சின் சட்ட மூலத்தை கடந்த ஆட்சி காலத்தில் தோற்கடித்தது?

**தொ:** அவர்கள் தங்கள் கடமையைத்தானே செய்தார்கள். எதிர்க்க வேண்டியது எதிர்க்கட்சியின் கடமை. அதைமீறி ஜெயிக்க வேண்டியது ஆளும் கட்சியின் கடமை. அதுதானே பாராளுமன்ற ஜனநாயகம்.

**காபூ.க:** அப்படியானால் கடமை தவறியது யார்?

**தொ:** அன்று சமுகமளிக்கத் தவறிய பொது ஜன முன்னணி எம்.பிகள்தான் கடமை தவறினார்கள். என்னை ஒழித்துக்கட்ட சதி செய்தார் அன்றிருந்த ஒரு மாண்புமிகு அமைச்சர்.

**காபூ.க:** என்னது, சதியா? புதுக் கதையாக இருக்கிறதே?

**தொ:** அந்த அமைச்சர்தான் எனது அமைச்சுமீதான விவாதத்திற்கு ஆளும் தரப்பு எம்.பிகள் சமுகமளிக்காமல் தடுத்தாராம். என்னைக் கவிழ்க்க திட்டம் போட்டு கட்டம் கட்டமாக வேலை நடந்தது.

**காபூ.க:** என்ன காரணம் என்கிறீர்கள்?

**தொ:** இனவாதம்தான் காரணம். மலையகத் தமிழர் ஒருவர் அமைச்சராக இருப்பது இனவாதிகளுக்கு பிடிக்கவில்லை. அதுதான் சதி செய்திருக்கிறார்கள். ஆனால் நான் அசையவில்லை. அந்தக் கடவுளே வந்து கூறியிருந்தாலும் பதவியில் இருந்து ராஜினாமா செய்திருக்க மாட்டேன். அது தெரிந்துதான் கடவுளும் கருத்துத் தெரிவிக்கவில்லை.

**காபூ.க:** யாரை கடவுள் என்கிறீர்கள்? பதவி தந்த அம்மையாரையா?

**தொ:** நான் உண்மையான கடவுளைத்தான் கூறினேன். தனிப்பட்ட எவரையும் கூறவில்லை.

**கா.பூ.க:** பொறுப்புள்ள அமைச்சர் ஒருவரே உங்களை ராஜினாமா செய்யச் சொன்னர். பகிரங்கமாகவே கூறினார். அதுபற்றி அமைச்சரவைத் தலைவியான அம்மையார் எக்கருத்தையும் கூறவில்லையே. நீங்கள் வருந்தவில்லையா?

**தொ:** வருத்தம்தான்! அதையெல்லாம் மறக்காமல்தானே இப்போது ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வர உதவியிருக்கிறோம். இது இலட்சிய உறவு. பொது ஜன முன்னணியின் உறவு அலட்சிய உறவு. மதியாதார் வாசலை நாங்கள் மிதித்ததும் தவறு.

**காபூ.க:** எதிர்காலத்தில் மறுபடி பொ.ஐ.மு. ஆட்சிக்கு வந்தால்?

**தொ:** வருவதற்கு விடமாட்டோம். வந்தால் மலையக மக்களுக்குரியதை கேட்காமல் விடமாட்டோம்.

**காபூ.க:** எதைக் கேட்பீர்கள் பதவியையா?

**தொ:** (முறைத்துக்கொண்டு) உரிமைகளைக் கேட்டுத்தான் எனக்குப் பழக்கம். அந்த உரிமைகளுக்காகவே பதவிகள்.

**காபூ.க:** சரி, இன்றைய இலட்சிய உறவு எப்போதுவரை நீடிக்கும்?

**தொ:** இந்த ஆட்சியின் ஆயுள் உள்ளவரை நீடிக்கும். ●




காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/21/NEWS/98)













→ 'முள்ளுப் பிசாசு' என்றழைக்கப்படும் இந்தப் பல்லி, இதன் எதிரிகளுக்குச் சிம்ம சொப்பனம். இதனை இரையாக்கலாம் என்ற நோக்கத்தோடு அருகில் நெருங்கிவரும் எந்தப் பிராணியும் 'இதனை விழுங்கினால் இதன் முட்கள் நமது வாயையும் கிழித்து வயிற்றையும் கிழித்துவிடும்!' என்று பயந்து ஓடிவிடும்.

அவுஸ்திரேலியாவிலுள்ள மிகவெப்பமான பாலைவனங்களில்தான் இவை வசிக்கின்றன. இதன் உடலிலுள்ள முட்கள் எதிரிகளைப் பயங்காட்டுவதற்காக மட்டும் உபயோகப்படுவதில்லை. இன்னொரு உபயோகமும் இருக்கிறது.

பாலைவனத்தில் அபூர்வமாகத்தான் மழைபொழியும். அப்போது இப்பிராணியின் முட்களுக்கு இடையில் காணப்படும் வாய்க்கால் போன்ற அமைப்புக்களினூடே மழை நீர் புகுந்து அதன் வாயில் போய்ச் சேர்ந்துவிடும். அந்த வாய்க்காலில் சேகரித்து வைக்கப்படும் நீர் மழை இல்லாத காலங்களில் பயன்படும்.

இப்பல்லியின் நாக்கும், மிக நீளமானது. ஒரே தடவையில் ஆயிரக்கணக்கான எறும்புகளை நாக்கினால் சுருட்டி எடுத்து உணவாக உட்கொண்டுவிடும். நாவை வைத்தே தன் காரியத்தை முடித்துவிடுகிறது.

## துணிச்சல்

↘ 'பயர்' படத்தில் நடித்தது மூலம் ஷபானா ஆஸ்மிக்கு ஏகப்பட்ட மிரட்டல்கள். வசைவுகள்.

தங்கள் கணவர்களால் ஜட மாகக் கருதப்படும் இரு பெண் கள் தங்களுக்குள் ஒன்று சேரு வதுதான் கதை. பிரபல நடிகை யான ஷபானா ஆஸ்மி இதில் நடித்திருப்பதால் தவறான முன் னுதாரணம் ஆகிவிடும் என்பது எதிர்ப்பாளர்களின் வாதம்.

ஆனால் இது பெண்கள் உரி மையில் தலையிடும் செயல். அடுத்த வர் தனிப்பட்ட உரிமையில் தலையிட எவருக்கும் அதி காரமில்லை என்று பெண்ணுரிமை இயக்கங்களும் காங் கிரஸ் கட்சி உட்பட பல கட்சிகளும் ஆதரவுக்குரல் எழுப்பியுள்ளன.

ஷபானா ஆஸ்மியின் துணிச் சலை பெண்கள் அமைப்புக்கள் பாராட்டிக் கொண்டிருக்க, 'ஷபனா நீயுமா?' என்று எதிர்ப்பா ளர்கள் கிண்டல் பண்ணுகின்றனர்.

கிளர்ச்சியூட்டும் கதாபாத் திரத்தில் நடித்துள்ளதுமூலம் தன் மரியாதையை கெடுத்துக் கொண் டார் ஷபானா என்றும் விமர்சனங்கள்.

'அட்டைக் கத்திகளுக்கு பயந் தவளல்ல.' நான் என்று கூறு கிறார் ஷபானா.



'அட்டைக் கத்திகளுக்கு பயந்தவளல்ல நான்' என்று கூறுகிறார் ஷபானா.

## விருந்து



↑ இங்கு காணப்படுவது 'குவிச்சே லொறைன்' என்னும் உணவு. இது ஃபிரான்சில் மிக விரும்பி உண்ணும் உணவாகும். சாதாரணமாக ஒரு லொறைன் தயாரிக்க 3 முட்டைகள், அரைக் கோப்பைப் பால், 8 துண்டு பேக்கன் (பன்றி இறைச்சி) மட்டும் தான் தேவை.

ஆனால் கடந்த வருடம் ஃபிரான்ஸ் தலை நகரான பாரிஸில் உலகிலேயே மிகப் பெரிய குவிச்சே லொறைனைத் தயாரித்து விட்டார், குளோடி டெஜியான் என்பவர்.

இதன் அகலம் 4.87 மீட்டர். (16 அடி), 30 சமையற்காரர்கள் சேர்ந்து, 16 மணிநேரத்தில் இதனைத் தயாரித்து முடித்தனர். மொத்தம் 1298 முட்டைகள், 71 கிலோ (156 இறாத்தல்) பன்றி இறைச்சி, 119 லீட்டர் (31 கலன்) பால் இதனைத் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டன. இது உலகசாதனையாக பதியப்பட்டுள்ளது.

## அதே கண்கள்

↘ அந்துப் பூச்சிகளும் வண்ணத்துப்பூச்சிகளும் பார்ப்பதற்கு ஒரேமாதிரியாக, பல வர்ணங்கள் கொண்ட இறகுகளை உடையவையாக இருக்கும். ஆனால் கூர்ந்து மிக நெருக்கமாகக் கவனித்தால் மட்டுமே இவற்றுக்கிடையிலான வித்தியாசங்களைக் கண்டுபிடிக்கலாம்.

வண்ணத்துப் பூச்சிகள் பெரும்பாலும் பகல் நேரங் களில்தான் பறந்துதிரியும். அந்துப் பூச்சிகள் மாலை வேளையிலே, இரவு நேரங்களிலோதான் பெரும்பாலும் பறந்து திரியும். வண்ணத்துப்பூச்சிகளின் தலையிலுள்ள நீளமான மோப்பம்பிடிக்கும் கொம்புகளுக்கும் அந்துப் பூச்சிகளின் கொம் களுக்குமிடையில் வித்தியாசமுண்டு. வண்ணத்துப் பூச்சியின் கொம்பின் நுனியில் குண்டு மாதிரியான அமைப்புண்டு. அந்துப் பூச்சிக்கு அத்தகைய குண்டு கிடையாது.

படத்தில் காணப்படுவது 'மாட்டுக்கண் அந்துப் பூச்சி' இதன் கண் கள் ஏனைய பூச்சி களைப் போன்றே இருக்கும்.

ஆனால் இதனை உணவா கப் புசிக்கும் நோக் குடன் வேறு ஏதா வது பிராணி நெருங் கினால் தனது கண் களை மிகவும் விசா லமாக்கி, பயங்கர உருவத்தில் காட்சியளிக்கும்'. தன்னை விட மிகவும் 'பெரிய பிராணியிடம் அகப்பட்டபார்த்தோம்!' என்று தப்பினோம் பிழைத்தோம்!' என்று அவை ஓடிவிடும். எத்தனை பெரிய கண்கள் பார்த்தீர்களா? இரவில் கண்டால் பிசாசு என்று பயந்து போவீர்கள்.





## குணமும் நிறமும்

↑ மீன்களின் உலகத்தில் சற்று விசித்திரமான இம்மீனை 'மாட்டு மீன்' என்று கூறுகிறார்கள்.

அவுஸ்திரேலியாவின் கிழக்குக்கரையில் இந்த அதிசய மீன்கள் காணப்படுகின்றன. பச்சோந்தி போல்-இவை சூழ்நிலைக்கேற்றவாறு தம் உடல் வர்ணத்தை மாற்றிக்கொள்ளுகின் றன. சில சந்தர்ப்பங்களில் உருவ அமைப்பையே மாற்றிக் கொள்ளக் கூடிய ஆற்றலும் இவைக் குண்டு.

இம்மீன்களின் உட லிலுள்ள நரம்பு களால் இவற்றின் சதை கட்டுப்படுத்தப்படுகிறது. நரம்புகளின் தூண்டு தலால் கலன்கள் உடலின் வர்ணத்தை மாற்றி விடுகின்றன.

இவ்வகையைச் சேர்ந்த இருமீன்கள் ஒரே இடத்தில் சந்தித்துக் கொண்டால், ஒன்றுடன் மற்றது கருத்தை வெளிப்படுத்து வதற்கு வர்ண மாற்ற முறையைப் பயன்படுத்து கின்றன என்று ஆய்வாளர் கள் கண்டுபிடித்துள்ளதும் மற்றொரு ஆச்சரியம்.

என்னதான் இருந் தாலும் நிறத்தை மாற்று வதில் அரசியல்வாதி களுடன் இந்த விசித்திர மீன் கூட போட்டியிட முடியா தல்லவா.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



**தமிழரசன் பிரவீன் 03.10.1998**

அவுஸ்திரேலியாவில் வாழும் சட்டத்தரணி தமிழரசன்-சுதமதி தம்பதியினரின் செல்வப் புதல்வன் பிரவீன் தனது 1வது பிறந்த தினத்தை 03.10.98ல் சிட்னி நகரத்தில் அப்பா, அம்மாவுடன் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரைப் பழுகாமத்தைச் சேர்ந்த அம்மப்பா, அம்மம்மா, சித்தி, மாமாமார், கல்லடியில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, அத்தைமார், சித்தப்பாமார் அனைவரும் சகல பேறுகளும் பெற்று வாழ எல்லாம் வல்ல வெற்றிவேல் பெருமானை வேண்டி வாழ்த்தினர். தகவல்: க.ஆறுமுகம், திருப்பழுகாமம்.

## நவகார்



← ஈராக் யுத்தத்தால் பெற்றோல் தட்டுப்பாடு வருமோ? விலை உயருமோ? என்றெல்லாம் இந்தக் கார் இருந்தால் யோசிக்கத் தேவையில்லை.

பற்றரியில் இயங்கும் நவீன கார் இது. நிக்கல்- கட்மியம் பற்றரியில் இயங் கக்கூடியது. இதன் உச்ச வேகம் மணிக்கு 75 கிலோ மீட்டர்.

ஒரு தடவை பற்ற ரியை சார்ச் செய்தால் 60 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்யலாம். மீண்டும் மீண்டும் பற்றரியை சார்ச் செய்து கொள்ள லாம்.

நகர்ப்புறத்திற்கு ஏற்றது. இதனை பேஜோ கம்பனி தயாரித்துள்ளது. 'சிற்றொயின் ரியுலிப்' என்று பெயரிட்டுள்ளனர்.

இன்னமும் சந் தைப்படுத்தவில்லை. எதிர்காலத்தில் சந் தைக்கு வரும். அடக்க மான, செலவும் குறைந்த கார்.